# கல்கி



KALKI 9-5-1976 ▪ 75 காசு

கோத்ரெஜின்

# புதிய டர்கிஷ் பாத்




## அமோகமான சோப், நம்பமுடியாத விலையில்

**Re.1·00** (வரிகள் தனி)


கோத்ரெஜ் மட்டுமே அளிக்கக் கூடிய சோப் அபரிமிதமான நுரை...நீடித்த உபயோகம்...புத்துணர்ச்சியளிக்கும் நறுமணம் மற்றும் சிக்கன விலை.

**கோத்ரெஜின் டர்கிஷ் பாத்**

Interpub/GTB/1/75/TAM

# கல்கி

ஆனந்த
சித்திரை 27
மே 9, 1976



### உணர்ச்சியும் தீயும்

எரிந்தது சூடம் பற்றி
இறைவனைச் சுடரில் கண்டோம்
எரிந்தது அடுப்பும் பற்றி
இனிமையை உணவில் கண்டோம்
எரிந்தது விளக்கு வீட்டில்
இருளும் விலகக் கண்டோம்.
எரிந்தது உலையும் ஓங்கி
எண்ணிலாத் தொழில்கள் கண்டோம்.

எரிந்தது காடே பற்றி
இழப்பினை மட்டும் கண்டோம் ?
எரிகுணத் தீயும் நெஞ்சில்
எழுந்திடும் உணர்ச்சித் தீயும்
பிரிவிலா குணத்தால் ஒன்றே
பெறுபயன் நிலை எல்லாம்
எரிந்திடும் விதத்தால் என்னும்
சடுலா உண்மை கண்டோம் !

— கோ. பத்மநாபன்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளிலுள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



# மதக் கோட்பாடுகளின் நோக்கில் குடும்பக் கட்டுப்பாடு

◀ குடும்பக் கட்டுப்பாடு முகாமில் தாய்மார்கள் உள்ளே சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கையில் வெளியே அவர்களின் குழந்தைகள் காத்திருக்கின்றனர். சுவரொட்டி அளவான குடும்பத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

## விவாத மேடை

நம் அன்றாட வாழ்க்கையிலேயே மதச் சார்பு உள்ளது என்பது என் அபிப்பிராயம். நம் முன்னோர்கள் அந்தக் காலத்தில் ஏக குடும்பமாக (அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, தாய், தந்தை, பேரக் குழந்தைகள்) எல்லோரும் சேர்ந்து வாழ்ந்தனர். அந்தக் காலங்களில் மனைவி, கணவன் இவர்களுக்குச் சேர்க்கை கிடைப்பதே அரிது; அதுவும் பரம இரகசியமாகவும் சில நிமிடங்களிலும் முடிந்துவிடும். அதுவும் மிக பயத்துடன்...

பெண்கள், [illegible] எண்ணெய் தேய்த்[illegible] ஷர்கள் புதன், சனி, [illegible] எண்ணெய் தேய்த்து நீராட வேண்[illegible]. இந்த நாட்களில் கணவன், மனைவி சேர்[illegible]டாது. அப்படி ஏற்பட்டால் சில சமயங்[illegible] பயங்கர நோய் (சுக ஜன்னி) ஏற்படலா[illegible] மனைவி சேர்க்கை தவிர்க்[illegible]டது. ஏகாதசி, அமாவாசை முதலிய [illegible] தினங்களிலும் காலை, மாலை வெ[illegible] சென்று திரும்பி வந்த தினங்களிலும் [illegible]க்கை கூடாது. பெண்களுக்குப் பதினா[illegible] வயதுக்கு மேலும், புருஷர்களுக்கு 25 வயதுக்கு மேலும் சேர்க்கை ஏற்படும் — (இதற்கு ஆயுர்வேத நூலைப் பார்க்கவும்).

இன்னும் அந்தக் காலங்களில் பிள்ளைப் பேற்றுக்குப் பிறந்த ஊர் சென்றால் பேறு காலம் முடிந்து ஆறு அல்லது எட்டு மாதங்களுக்குப் பிறகுதான் புருஷன் வீட்டுக்கு அழைத்து வருவார்கள்.

இவ்வாறு நமது பழைய சம்பிரதாயங்கள் ''குடும்பக் கட்டுப்பாடு'' என்று வெளிப்படையாகச் சொல்லாமல் குழந்தைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி வந்தன. அம் முறைகள் இன்றும் அனுஷ்டிக்கப்பட்டால் நாட்டில் [illegible] ஏறாது.

[illegible] டாக்டர் பீ.எஸ்.ஏ. சர்மா

●●●

இன்று நம் நாட்டில் நிலவி வரும் ஒரு பெரும் [illegible]ம், ஜனப் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதுதான். இப்படியே போனால் உணவு உற்பத்தி எவ்வளவு அதிகரித்தாலும் போதாது என்று கூறுகின்றனர். எனவே ஜனப் பெருக்கத்தை அவசியம் கட்டுப்படுத்த வேண்டியது தான். எனினும் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியமானதாகும்.

''குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் செயற்கைக் கருத் தடைச் சாதனங்களைவிடச் சுயக் கட்டுப்பாடு பன்மடங்கு சிறந்ததாகும். தீச் செயல்களுக்கு ஓர் அனுமதி அளிப்பவை போல் இந்தச் செயற்கை முறைகள் அமைகின்றன. வியாதியைக் காட்டிலும் சிகிச்சை இன்னும் மோசமாகிவிடும்'' என்றார் சமயப் பற்றுடைய காந்திஜி அவர்கள்.

லண்டன் ராயல் கல்லூரிப் பேராசிரியர் ஸர் லவன்ஸ் என்பார், ''இந்திரியக் கட்டுப்பாட்டால் எந்த மனிதனுக்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படாது'' என்று தெரிவிக்கிறார்.

''பிரம்மச்சரியம் எவ்விதத் தீங்கையும் உண்டாக்காது. அது வளர்ச்சியைப் பாதிக்காது. சக்தியை

---

விவாத மேடைக்கு வந்த கடிதங்கள் யாவுமே மதக் கோட்பாடுகள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்துக்குக் குந்தகமாக இருக்க அனுமதிக்கலாகாது என்பதையே வலியுறுத்தின. — ஆசிரியர்

அதிகரிக்க அது பெரிதும் துணைபுரிகின்றது'' என் பது லார் ஆன்ட்ரூ கொர்க் என்பவரது கருத்து.

புகழ்பெற்ற அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஜோஸப் ஸ்பெங்க்ளர் ''ஜனத்தொகைப் பிரச்னைக் குச் சரியான தீர்வு தன்னடக்கமே யன்றிப் பிறி தில்லை'' என்று கூறுகிறார்.

நாஸ்திகர் என்று கருதப்பட்ட பேரறிஞர் பெர் னார்டு ஷா ''ஆசைகளை நாம் அடக்கவில்லையேயானில் நம்மை நாமே அழித்துக் கொண்டவர்கள் ஆவோம்'' என்று கூறுகிறார்.

ஜனப் பெருக்கப் பிரச்னைக்கு மட்டும் தன்னடக் கம் ஒரு தீர்வு என்றாகாது. வாழ்க்கைத் தரத் தையே உயர்த்தித் தேசத்தின் ஆன்மீக, ஒழுக்க உயர்வுக்கும் அது அடித்தளமாக அமைகிறது என் பதைச் சமயக் கோட்பாடுகள் நமக்குப் புகட்டுகின்றன.

உதகமண்டலம் -உ.தங்கநாதன்

ooo

உடலுறவுதான் பிரதான அம்சமாகவும், அதில் தவறில்லை என்றும் வாதாடும் இந்த நாட்களில் கருத்தடை சாதனங்களைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழி யில்லை. நவீன குடும்பக் கட்டுப்பாடு சாத னங்கள் குடும்பத்தை அளவாக வைத்திருக்க வும் வளமான வாழ்க்கைக்கும் உதவும். ஆனால் இது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவுமா என்று தெரியவில்லை. ஆனால் நம் மதக் கோட்பாடுகளின் வழி வந்த குடும்பக் கட்டுப்பாடோ, நம் வாழ்வின் மேன்மைக்கும் ஆரோக்கியத்துக்கும் உதவியாகவும், இப் பிறவிப் பயனை இறைவனைச் சேரும் முறைக்கும் உரியது. இந்த முறையைக் கடைப்பிடிக்க முடிந்த சகோதர, சகோ தரிகள் வணங்கத் தக்க புண்ணியசாலிகள்.

சேத்துப்பட்டு எஸ். சீதாலட்சுமி

ooo

''மதக் கோட்பாடுகளுக்குப் புறம்பானது குடும்பக் கட்டுப்பாடு'' என்று வாதம் செய் வது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஏனெனில், எம்மதமும் ''அதிகப் பிள்ளை பெறுதே! அல்லது பெறு'' என்று வெளிப்படையாகப் பிரசாரம் செய்ததாக வரலாறு இல்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். புராணத்தில் குடும்பக் கட்டுப்பாடு அந்தக் காலத்திலேயே மறைமுகமாக உணர்த் தப்பட்டிருக்கிறது. எப்படி? கிருஷ்ண பரமாத் மாவின் ஆருயிர் நண்பர் இருபத்தேழு பிள்ளைகள் பெற்ற குசேலர் பட்ட கஷ்டங்கள்; வறுமையால் வாடிய நல்லதங்காளின் சோக முடிவு; கௌரவர்களின் நூறு பேர் உடன் பிறப்பால் நேர்ந்த விபரீத விளைவுகள். இவை யெல்லாம் மானிடப் பிறவி எடுப்பவர்களுக்கு ஆண்டவரால் உணர்த்தப்படும் அறிவுரையே. கட்டுப்பாட்டுக்கு அடங்கியதே மதக் கோட்பாடு! அது போன்றதுதான் குடும்பக் கட்டுப்பாடும்! எப்படி சம்பிரதாயங்கள் மாக பெறாத நிலையில் மதக் கோட்பாடு கட் டிக் காக்கப்படுகிறதோ அதுபோல் ஒவ்வொரு குடும்பத்திலும் இல்லற வாழ்க்கை மாக படாத நிலையில் ''ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொரு ஆணும்'' என்ற கோட்பாடு குடும்பக் கட்டுப்பாடால் கடைப்பிடிக்கப் படுகிறது. இதனால் ஒழுங்கான வரையறுக்கப் பட்ட வாழ்வும், இளம் தலைமுறையினரின் எதிர்கால ஒளிமயமான நல்வாழ்வும், உண்டா கிறது. இதன் விளைவாகப் பண்பாடும் சிறக் கிறது.

எனவே எம்மதமும் குடும்பக் கட்டுப்பாட் டினைப் புறக்கணிக்க வாய்ப்பில்லை. மதக் கோட்பாடுகள் தடையாகவுமில்லை.

இராமநாதபுரம் –கமுதி மாறன்

ooo

ஒருவர் அன்று கேட்டார்: ''மூன்று குழந்தை யோடு தடை செய்திருந்தால் எட்டாவது மகனாகக் கண்ணன் எப்படிப் பிறந்திருக்க முடியும்?''

''அப்படி ஒரு கட்டுப்பாடு இருந்தால் முதல் மக னாகவே வந்து பிறந்திருப்பார்'' இது பதில்! இப்படி நம் வழிபடு கடவுளர்க்கு, ராமன், சிவன், கண்ணன், கந்தன், கன்னிமேரி, நபிநாயகம்இவர்கட்கு எத்தனை பிள்ளை அல்லது இவர்கள் எத்தனையாவது பிள்ளை என்று கேட்டுக் குடும்பக் கட்டுப்பாட்டைச் சமய நோக்கில் காண வேண்டாம். கட்டுப்பாட்டை, ஒழுக்கை எந்த சமயமும் எதிர்க்காது.

சமய நோக்கில் எதிர்ப்பவரை நாம் கேட்போமே! சமய நெறிப்படி வாழ்கிறார்களா? இத்தனை ஆண்டு களாக இல்லாத குடும்பக்கட்டுப்பாடு இயக்கம் இந்த நூற்றாண்டில் தீவிரமாக்கப்படுவதற்கு யார் காரணம்?

மாதம் இருமுறை மட்டும் மனைவியுடன் கூடி மகிழ்ந்து நோன்பு, விரதம் காத்துப் பேரன் பேத்தி பெற்ற பிறகாவது பிள்ளை பெறாமல் வாழ்ந்தோமா? அண்ணல் காந்தி அடிகள் போற்றிய மணவாழ்வில் தனி வாழ்வை உறுதியாகக் கடைப்பிடிக்கும் உள்ளம்

○ இராமப்புரம் சுகாதார நிலையத்தில் குடும்பக் கட்டுப்பாடு முறைகளைத் தம்பதிகளுக்கு விளக்குகிறார் டாக்டர்.

○ தாற்காலிகக் கருத்தடை முறையாக 'லூப்' பொருத்தப் போகிறார் லேடி டாக்டர்.







மரணத்தைக் கட்டுப்படுத்தும் மருத்துவ முறைகளைக் கையாளும் தேசங்கள் யாவும் பிறப்பைக் கட்டுப்படுத்தும் கருத்தடை முறைகளையும் கையாளத்தான் வேண்டும். இல்லாத போனால் படுக்கவோ அமரவோ இடமில்லாமல் நின்று கொண்டே வாழ வேண்டிய ஒரு காலகட்டம் வரும். அதற்கு இப்போது முதலே தங்களைத் தயாராக்கிக் கொள்ளட்டும்!

மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியதை சுயராஜ்யாவில் எழுதியவர்: வி. வி. நரசிநாராயண்.

××××××××××××××××××××××××

இருந்தால் சிவப்பு முக்கோணச் செலவே அரசுக்கு இல்லையே! சமய நெறியில் நாம் ஒருமைப்படாது சரியும் போது சுமையை அரசு ஏற்க நேரிடுகிறது. பொருள் உற்பத்திக்குச் செலவிட வேண்டிய அறிவியல், ஆற்றல், பொருளெல்லாம் மக்கட் பெருக்கைக் கட்டுப்படுத்தச் செலவாகிறது. ஆகவே குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம், - கருத்தடைக்கு, அறுவைச் சிகிச்சை உட்பட எதுவும் - தவறல்ல.

காஞ்சி - ஆர். பி. சாரதி

●●●

கிறிஸ்தவ மத நோக்கில் குடும்பக்கட்டுப்பாட்டினைக் குறித்து ஆராய முனைந்தால் பைபிளிலிருந்து சில மேற்கோள்களை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.


பழைய ஏற்பாடு — ஆதியாகமம்: முதலாவது அதிகாரம் — 28-ம் வசனத்தில் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவர் சிருஷ்டித்த முதல் மனிதர்களான ஆதாம் — ஏவாள் ஜோடியிடம், ''நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்'' என்று தேவன் கூறுகிறார். இதனை ஆதாரமாகக் கொண்டு, உலகத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் திருமணத்துக்குப் பின் அநேக பிள்ளைகள் மூலம் பூமியை நிரப்ப வேண்டும் என்று இன்றைக்கு அநேக கிறிஸ்தவ மார்க்கங்கள் வாதாடுவது நியாயமாகாது. முதன் முதலாகக் கடவுள் சிருஷ்டித்த அத் தம்பதிகள் மாத்திரமே அப்போது இருந்ததாலும் உலகம் இயங்குவதற்கு அவர்களையொத்த மானிட இனம் பல்கிப் பெருக வேண்டுமென்பதாலும், கடவுள் அவ்வாறு அன்றைக்குச் சொல்லியிருக்க வேண்டும். அது இன்றைய காலத்துக்கு — இன்றைய உலகுக்குப் பொருந்தாது.

புதிய ஏற்பாடு — அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம் — 5 அதிகாரம் — 8-ம் வசனத்தில், ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரிக்க வேண்டும்'' என்றும், அதே நிருபம் — 3-ம் அதிகாரம் — 4-ம் வசனத்தில், ''தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனாகவும் இருக்க வேண்டும்'' என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய திருவசனங்களுக்கு ஏற்றபடி ஒருவன் நடக்க வேண்டுமானால், அவன் தன் குடும்பத்தை அளவோடு — கட்டுப்பாட்டோடு திட்டமிட்டிருக்க வேண்டும்.

பழைய ஏற்பாடு — 127-ம் சங்கீதம் — 4-ம் வசனத்தில், ''பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்'' என்று கூறப்பட்டுள்ளது. இதற்கும் 'ஒருவன் அளவுக்கு மீறிக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு அவதிப்பட வேண்டும்' என்று பொருள் அல்ல.

பைபிளில், ஒருவன் எவ்வளவு பிள்ளைகள் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு ஆதாரம் எங்குமில்லை. ஆனால், இங்கு கூறப்பட்டதைப் போன்ற சில வசனங்களைக் கொண்டு, ஒவ்வொரு குடும்பமும் கட்டுப்பாட்டோடிருக்குமானால், அது வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்லதுஎன்று நிரூபிக்கலாம்.

உதகமண்டலம் —உதகை நா. மனோகரன்




இரண்டு காக்கைகள் பேசிக்கொண்டன:

''முன்னேயெல்லாம் யாராவது இலையை வீசியெறிந்தால் கூப்பாடு போட்டு எல்லாரையும் கூப்பிடுவியே - இப்போ ஏன் நிறுத்திட்டே?...''

''இப்போதான் விருந்தாளி கட்டுப்பாடு உத்தரவு வந்துடுத்தே!''

×

மிலல் காக்கை மிலல் காக்கை பாகவதரிடம்:

''உங்க வீட்டுக்காரர் அடிக்கடி கச்சேரி பண்ணுறாரே, என்ன கிடைக்கிறது அவருக்கு?''

''பணம் கிணம் எதுவும் கிடையாது. கையிலே ஒரு வடையைக் கொடுத்து அனுப்பிச்சுடுறாங்க!''

நடிகைக் காக்கையிடம் நிருபர் காக்கை:

''புது வருஷத்திலே என்ன தீர்மானம் பண்ணியிருக்கீங்க?''

''பிளாக் அண்ட் ஒயிட் படங்களிலே என் அழகு எடுபட மாட்டேங்குது.... அதனாலே இனிமே கலர்ப் படங்களிலேதான் நடிக்கிறதுன்னு தீர்மானம் பண்ணியிருக்கேன்...''

×

இரண்டு பெண் காக்கைகள்:

''உங்க வீட்டுக்காரர் எங்கே அடிக்கடி வெளியூர் போயிடறார்?''

''எல்லாம் குழந்தைகளுக்காகத்தான். 'கண்ணுக்கு மை கொண்டு வா'ன்னு குழந்தைகள் கேட்கிறதே!... அதைக் கொடுக்கத்தான்!''

×

ஒரு சங்கீத வித்வான் காக்கை மற்றொன்றினிடம்:

''ரேடியோவிலே பாடறதுக்கு சான்ஸ் வாங்கணும்னா என்ன செய்யணும்?''

''ரேடியோ ஸ்டேஷனிலே இருக்கிறவனை மனுஷா புடிக்கணும்.''

×

மானேஜர் காகம், ஊழியக் காகத்தைக் கோபித்துக் கொண்டது:

''ஏன்யா ஆபீஸ¤க்கு லேட்டு?''

''நான் வந்த எருமை மாடு நடு வழியிலே 'பிரேக்-டவுன்' ஆகி நின்னு போயிடுத்து சார்!''

# பெண்மை வெல்க!

கல்கி

மலர் 35

இதழ் 41

**பா**டச் சொல்லுங்கள்! பிரமாதமாகப் பாடுவோம், பாரதி பாடலை: 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா! பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!'

பேசச் சொல்லுங்கள்! வாய் கிழியப் பேசுவோம், பாரதியை மேற்கோள் காட்டி: 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்!'

எழுதச் சொல்லுங்கள்! மறுபடியும் பாரதியை நினைவூட்டி எழுதுவோம்: 'அறிவிழந்தது பண்டை வழக்கம், ஆணுக்குப் பெண் விலங்கெனும் அஃதே!'

எல்லாம் சரி, ஆனால் காரியம் என்று வரும்போது...... சொத்துரிமை என்று பேசும்போது......? 'உமன்ஸ் லிப்' இருக்கிற இடம் தெரியாமல் மறைந்துவிடும்!

நகர்ப்புற நிலத்துக்கு உச்சவரம்புச் சட்டம் கணவனுடன் மனைவியை இணைத்தே பேசுகிறது. கணவனுக்கு உச்சவரம்பு அளவுக்கு நிலமிருந்தால் மனைவிக்குத் தனியே நிலம் வைத்துக் கொள்ள உரிமை கிடையாது என்கிறது.

ஏற்கனவே வருமான வரி விஷயத்தில் கணவன் மனைவி இருவரது வருமானத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டும் என்று சிலர் யோசனை தெரிவித்ததும் கற்றறிந்த பெண்மணிகளிடம் அதற்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அரசும் அந்த அசட்டு யோசனையை ஏற்காது விட்டது. பெண்ணின் வருவாய் உரிமைக்கும் சொத்துரிமைக்கும் பங்கம் ஏற்படக் கூடாது என்று முடிவு செய்தது.

பாரதப் பிரதமரே பல சந்தர்ப்பங்களில் ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்று பேசியுள்ளார்.

அவ்வாறிருக்க, திருமணம் செய்து கொண்ட ஒரே காரணத்துக்காக ஒரு பெண் நகர்ப்புறத்தில் தான் நிலமோ வீடோ வைத்துக் கொள்ளும் உரிமையை இழந்துவிட வேண்டும் என்பது என்ன நியாயம்?

இதோடு போயிற்றா? விவசாய நிலங்களுக்கு உச்சவரம்புகள் நிர்ணயித்து அமுல்படுத்துவதற்கான வழி முறைகளை விளக்கும் அரசாங்கச் சுற்றறிக்கை, பெண்ணின் சீதனச் சொத்தை ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள உச்சவரம்புக்கு உட்படுத்த வேண்டும் என்கிறது. அதாவது கணவன் உச்சவரம்பு அளவுக்கு நிலம் வைத்திருந்தால் மனைவி தன் சீதனச் சொத்தை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிட வேண்டும்.

இதன் உடனடி விளைவு, யாருடைய சொத்தை அதிகப்படி எனக் கருதி அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பது என்பதில் ஏற்படக் கூடிய சச்சரவு; இதைத் தொடர்ந்து குடும்பத்தில் அமைதிக் குலைவு.

ஒரு பெண் தன் பெற்றோரிடமிருந்து சீதனமாகச் சொத்து பெறுவதிலோ அல்லது தானே சம்பாதித்து நிலம் வாங்கிக் கொள்வதிலோ என்ன தவறு? சட்ட ரீதியாகவோ தர்ம நியாயப்படியோ இதற்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்கக் கூடாது.

சில அதிதீவிரவாதிகள் இருக்கிறார்கள். இவர்கள், ''ஐயோ! போச்சு போச்சு! கணவன் உச்சவரம்பிலிருந்து தப்பிக்க மனைவி பெயரில் எழுதி வைத்து விடுவான்!'' என்று புலம்புகிறார்கள்!

இப்படிச் சில சந்தர்ப்பங்களில் நடப்பது உண்மை என்றாலும், அன்பு மேலிட்டு மனைவிக்குக் கணவன் பிற்காலப் பாதுகாப்புக்காகச் சொத்து எழுதி வைப்பது மன்னிக்க முடியாத குற்றமாகிவிடுமா?

ஒரு பெண்ணுக்கு ஆணைப் போலவே சம்பாதிக்க உரிமை இருக்க வேண்டும் என்று ஒப்புவோமானால் அவளுக்கு எதிர்காலப் பொருளாதாரப் பாதுகாப்புக் கருதி சேமிக்கவும் உரிமை இருக்க வேண்டும். அதே போல் ஆணுக்குச் சமமான அளவில் சொத்து சுதந்திரங்களை அனுபவிக்கவும் உரிமை இருக்க வேண்டும்.

இந்த உரிமைகளை வழங்காதபோனால் பெண்களுக்குச் சம அந்தஸ்து என்பது வாய்ச் சொல் வீரத்துடன் நின்றுவிட்டதாகவே அர்த்தம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

# லோக சஞ்சாரம்



(மாஜி முதலமைச்சரின் கோபாலபுரம் வீட்டுக்குள் எட்டிப் பார்த்தார் மூஷிகர். கலைஞர் தூக்கத்தில் 'லிக்கர்! ஸின் போலட்' என்று கூச்சலிட்டுவிட்டுத் திடுக்கிட்டு விழித்து எழுந்து அமர்ந்தார்.)

மூஷிகர்: பலே ! இடரென்று கிரிக்கெட் ஆர்வம் கரைபுரண்டு ஓடுகிறதே ! உடன் பிறப்புக்களுக் கெல்லாம் முரசொலியில் கடைசி டெஸ்டை விளக்க ஆரம்பித்துவிட்டீர்களே !

கலைஞர்: ஐயோ, அதில் அரசியல் கலப்பு கொஞ்சமும் இல்லை.

மூஷிகர்: எதற்கு அப்பன் குதிருக்குள் இல்லை என்று அலறுகிறீர்கள் ! அதில் அரசியல் கலப்பு இருப்பதாக யார் சொன்னார்கள் ? அதே டெஸ்டை வேறுவிதமாகவும் விமர்சனம் செய்பவர்கள் இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வந்தேன். நீங்கள் குறிப்பிடும் ' நம்மவர்கள் ' வெறும் சுருட்டல் போர்வழிகள் (அதாவது ஸ்பின் போலர்ஸ்). சுருட்டலையே சந்தித்துச் சந்தித்துப் பழகியதால் அவர்களது **உண்மை வேகத்துடன்** கூடிய தாக்குதலை நம்மவரால் சமாளிக்க முடியவில்லை. விஷயமறிந்தவர்களின் இந்த விமர்சனத்தில் என்ன தவறு ?

கலைஞர்: கிரிக்கெட் கிடக்கட்டும், சர்க்காரியா கமிஷன் விசாரணைக்குப் பண உதவி தம்பிமார்களிடமிருந்து எப்படிக் குவிகிறது, பார்த்தாயா ?

மூஷிகர்: நல்ல வேளை, பக்கத்திலேயே கணக்கு விவரமும் வருகிறது. ரசீது அச்சிடுவதானால் அதில் சீரியல் நெம்பர்கள் உள்ளனவா என்றும் கவனித்துக் கொள்ளுங்கள்.

கலைஞர்: விசாரணை, நடிகர் கட்சி பக்கமும் திரும்பியிருக்கிறது, தெரியுமல்லவா ? வருமான வரி இலாக்காவில் இதற்கெனப் புதுப் பிரிவு ஆரம்பமாகியிருக்கிறது.

மூஷிகர்: 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்று காமராஜர் சும்மாவா சொன்னார் ?

கலைஞர்: உன்னை உள்ளே விட்டதே தப்பு. இதோ பார், என்ன நடக்கிறதென்று....

[கலைஞர் தடியைத் தேடுவதற்குள் மூஷிகர் மாயமாய் மறைந்தார். ஏ. வி. எம். ஸ்டுடியோவில் மீண்டும் முளைத்தார்.]

மூஷிகர்: வணக்கம். ஏது ஸ்டுடியோ மீண்டும் சுருசுருப்படைகிறது போலிருக்கே ?

ஏவி.எம்.: ஆமாம். திரைப்படத் தொழிலில் தொய்ந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தைச் சீர்படுத்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறோம். அதற்காகவே வாரத்துக்கு ஒரு தமிழ் படத்துக்கு மேல் புதிதாகத் திரையிடக் கூடாது என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மூஷிகர்: இதனால் திரைப்படத் தொழில் அடையும் பொருளாதார ஆதாயம் ஒருபுறம் இருக்கட்டும்; இந்த ஏற்பாடு வாரப் பத்திரிகைகளின் சினிமா விமர்சகர்களுக்கு எப்பேர்ப்பட்ட வரப் பிரசாதம் தெரியுமா ?

ஏவி. எம். : சரியான மிக்கிமவுஸ் நீ !

(மூஷிகர் அங்கிருந்து ஒரு தாவுத் தாவினார். மறுபடியும் அவர் கால் தரையில் பாவியபோது கிஸ்ஸிஞ்சர் அருகில் கை குலுக்கியபடி இருந்தார்.)

மூஷிகர்: நோ, நோ! ரொம்பத் தப்பு!

கிஸ்ஸிஞ்சர் : என்ன தப்பு ?

மூஷிகர் : பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி தான்.


கிஸ்ஸிஞ்சர்: உதவியா? யார் சொன்னது? பணம் கொடுத்துப் பெற்றுப் போகிறார்கள். பார்த்தாயா, நிரந்தரமாகத் தொங்கும் இந்தப் போர்டை ? 'இன்று ரொக்கம் நாளை கடன் !'

மூஷிகர் : ஏட்டளவில் நீங்கள் கூறுவது சரி. ஆனால் தர்ம நியாயமாகாது. ''யுத்த தளவாடங்களைப் பணம் கொடுத்து வாங்கிப் போ ; ஆனால் வேறு வகைகளில் அமெரிக்கா உனக்குப் பொருளாதார உதவிகள் செய்யும்'' என்று புட்டோவிடம் நீங்கள் சொன்னால், வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயனாக வேண்டிய வரிப் பணத்தைப் பாகிஸ்தான் யுத்த தளவாடங்கள் வாங்கத் திருப்பிவிட முடியுமல்லவா ?

கிஸ்ஸிஞ்சர் : அந்த மாதிரி உதவிகளைப் பாரதத்துக்கும் நாங்கள் செய்யத் தயாராயிருக்கிறோமே !

மூஷிகர்: அதாவது பல முறை ஆக்கிரமிப்பு நடத்திய பாகிஸ்தானையும் பல முறை தற்காப்புக்காகப் போரிட்ட இந்தியாவையும் சமமாக மதித்து எடை போட்டுவிட்டீர்கள் ! எங்கள் ஊர் பழைய பேப்பர் வியாபாரிகூட இப்போதெல்லாம் நல்ல தராசில் சரியாக நிறுக்கிறார். நான் வருகிறேன்.

(மூஷிகர் ஒரு துள்ளுத் துள்ளி மறைந்து கல்கி விநாயகரின் பாதாரவிந்தங்களை நமஸ்கரித்துச் சித்திரமானார்.)




அமெரிக்கா
பாக்
உடன் பிறப்பே!
உயிரின் உயிரே!
உடலின் உடலே!
வாங்கி வாங்கிப்
பழகிய கைகள்
கொடுக்கும் காலம் வந்தது!
சர்க்காரியா கமிஷன் முன்
வழக்காட நிதி தேவை!
தாரீர்! தாரீர்!
அள்ளித் தாரீர்!
—தி.மு.க—
சர்க்காரியா கமிஷன்
முன் வழக்காடுவதற்காக
தி.மு.க. நிதி
திரட்டுகிறது!
குழந்தையை
நன்றாகக்
கவனிச்சுக்கோங்க!
பவுடர்..!
நகை!
சட்டை!
சோப்
சோப்!
தமிழ்
நாடு
மத்திய அமைச்சர்கள்
மத்திய அமைச்சர்கள் தமிழ் நாட்டிற்கு
விஜயம் செய்த வண்ணம் இருக்கின்றனர்!

# வெளி வந்து விட்டது!

புனிதமான புத்தகம்

**ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வர**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளின்**
**அருள்வாக்குகள்**

முதற் பகுதி




# தெய்வத்தின் குரல்

1932லிருந்து சுமார் நாற்பது ஆண்டுகளாக
ஆசாரிய சுவாமிகள் அருளிய மொழிகளை
ஆசிரியர் **திரு ரா. கணபதி** அவர்கள்
பொருள் வரிசையில் தொகுத்துத் தந்துள்ளார்கள்.

**வானதி பதிப்பகத்தில் மிக அழகிய புத்தகமாக வெளிவந்துள்ளது**

**சுமார் ஆயிரம் பக்கங்கள்**

ஓவியர் **வினு** அவர்களின் அழகிய மூவண்ண அட்டை

**விலை ரூ. 25/-**

பதிவுத் தபாலில் பெற ரூ. 28 மணியார்டர் செய்க
வி. பி. பி. மூலம் பெற விரும்பினால் ரூ. 29.50 ஆகும்

விவரங்களுக்கு

**வானதி பதிப்பகம்** 82/11, பாண்டி பஜார்,
தி. நகர், சென்னை–17
டெலிபோன்: 442810



# ஜீவகாருண்யம்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

இப்போது நான் ''ஜீவகாருண்யம்'', — ''பரோபகாரம்'' என்று இரண்டு வார்த்தைகள் சொன்னேன். யோசித்துப் பார்த்தால் இந்த இரண்டு வார்த்தையுமே தப்புதான். ஏனென்றால்,

காருண்யம் — கருணை காட்டுவது — என்றால் இப்படிக் கருணை காட்டுகிறவர் ஒரு படி உயர நிற்கிற மாதிரியும், கருணைக்குப் பாத்திரமாகிறவர் ஒரு படி கீழே நிற்கிற மாதிரியும் தொக்கி நிற்கிறது. நாம் உசந்த ஸ்தானத்தில் இருக்கிறோம், நம் உதவியைப் பெறுகிறவர் நம்மைவிடத் தாழ்த்தியாக இருக்கிறார், நாம் ''கருணை'' காட்டுகிறோம் என்று நினைக்கிற போதே நாம் செய்கிற உபகாரம் அசுத்தமாகி விடுகிறது. உபகாரம் செய்வதன் பயனாக நமக்கு எளிமை, அடக்கம் உண்டாக வேண்டும். மாறாக நாம் உபகாரம் பண்ணும் போது, போனால் போகிறது என்று யாருக்கோ கருணை காட்டுகிற மாதிரி நினைத்தோமானால், இது அஹங்காரத்துக்கு இடமாகி விடுகிறது. உபகாரத்தால் நம் ஆத்மாவை உயர்த்திக் கொள்வதற்கு நேர்மாறாக ஆத்ம ஹானியே உண்டாகிவிடும்.

கருணை, காருண்யம் என்கிற வார்த்தையைச் சொல்வதை விட அன்பு என்று சொல்லிவிட்டால் இந்த ஏற்றத் தாழ்வு தொனிக்காமல் இருக்கும். அன்பு என்பது நம்மவர்களிடமே நாம் ஸ்வபாவமாகச் செய்கிற காரியம். இதிலே, போனால் போகிறதென்று யாரோ அன்னியருக்கு இரக்கம் காட்டுகிற மாதிரியான அஹங்கார எண்ணம் இல்லை.



ஆனாலும்கூட நடைமுறை உலகில் இப்படி நம்மவர், அசலார் என்கிற பேதமேயில்லாமல் சகலரையும் ஒரே போல் பாவித்து, தாரதம்மியம் இல்லாமல் ஸ்வாபாவிகமான அன்பைச் செலுத்துவது என்றால் அது ஆரம்ப காலத்தில் சாத்தியம் இல்லாமல்தான் இருக்கிறது. இந்தப் பொது இயற்கையை ஒப்புக் கொள்கிறது போலத்தான் திருவள்ளுவர்கூட அன்பு, அருள் (அருள் என்பதைக் கருணை என்று வைத்துக் கொள்ளலாம்) என்று பிரித்து, (distinction) சொல்லி யிருக்கிறார். அவர் என்ன சொல்லுகிறார்? 'அருள் என்னும் அன்பீன் குழவி' என்கிறார். அன்பு ஈன்ற குழந்தையே அருள் என்று அர்த்தம்.

இப்போது நமக்கு வேண்டியவர்கள் என்று சிலரை மட்டும் நினைத்துக் கொண்டு அன்பு செலுத்துகிறோம் அல்லவா? இந்த 'வேண்டியவர்'களை நம் ஊரார், தேசத்தார், உலகத்தார் என்று மேலே மேலே விஸ்தரித்துக் கொண்டே போனால், அன்பிலிருந்தே படிப் படியாக அருள் பிறக்கிறது. அப்புறம் இப்படி அருள் பண்ணுகிறவனைப் பொறுத்தமட்டில் அது 'அருள்', 'கருணை' என்றெல்லாம்

உயர்வு மனப்பான்மையை (Superiority Complex) காட்டுகிற விஷயமாக இல்லாமல், ஸ்வபாவமான, சகஜமான அன்பாகவே ஆகிவிடுகிறது. ஆனாலும் இந்த அன்பைப் பெறுகிறவர்களோ, அது சாதாரணமாக நண்பர்களிடையே பந்துக்களிடையே இருக்கிற அன்பு மாதிரி இல்லாமல், நல்ல கனிவு பெற்றுத் தெய்வமான சக்தி பெற்றிருப்பதாக உணர்கிறார்கள். இந்தப் பக்குவமான அன்பை, 'அருள் அருள்' என்கிறார்கள்.

'எல்லா உயிர்களும் ஒன்றே ; எல்லாவற்றிலும் ஈச்வரன் இருக்கிறான்' என்று ஒருத்தன் உணர்கிற போதுதான் அவனுக்கு அருள் உண்டாகிறது. இவன், தன் மநுஷ்யர்களுடன் சமமான நிலையில் இருந்து கொண்டு பிரியம் காட்டுவதைவிட இன்னும் ஒரு படி கீழே இறங்கி, தன்னைக் குறைத்துக் கொண்டு, மற்றவனை ஈச்வரனாக நினைத்துத் தான் சேவை செய்கிறான். ''நைச்சியம்'' என்று இதை வைஷ்ணவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். தன்னைத் தாழ்ந்தவனாக, நீசனாக, நினைத்து இன்னொருத்தனுக்கு சேவை செய்வதுதான் ''நைச்யம்''. இப்படி இவன் தன்னைக் குறைத்துக் கொள்கிற போதுதான் இவனுடைய அன்பு வெறும் பேச்சாக, எண்ணமாக மட்டுமில்லாமல் அதற்குக் காரிய ரூபத்திலேயே தெய்விகமான சக்தி உண்டாகி, அது 'அருளாக' ஆகிவிடுகிறது. கொஞ்சம்கூட மமதையே இல்லாமல், ''நாம் பெரியவர், உபகாரம் பண்ணுகிறோம்'' என்ற அகந்தையே இல்லாமல் இவன் ஸமஸ்த பிராணிகளிடமும் ஈச்வர ஆராதனையாக அன்பைச் செலுத்துகிறபோது, அதுவே இவனை ஸகல பிராணிகளுக்கும் மேலே உயர்த்தி விடுகிறது. இவனுடைய அன்பு வெறும் பேச்சாகவும் எண்ணமாகவும் மட்டுமில்லாமல், காரியத்திலேயே ஈச்வராநுக்ரகத்தை வாங்கித் தரக்கூடிய அருட் சக்தியைப் பெற்று விடுகிறது.

இவனுடைய ஜீவகாருண்யத்தால் இவனே உயர்வதுதான் பெரிய பிரயோஜனமாகிறது. இவன் உபகாரம் என்று நினைத்து இன்னொருத்தனுக்குச் செய்வது அவனுக்கு அபகாரமாக ஆனாலும் ஆகலாம்; அல்லது இவனுடைய உபகாரத்தை அவன் விரும்பாமலும் இருக்கலாம். அதாவது பிறத்தியானைப் பொறுத்த மட்டில் இவனுடைய சேவை வீணாகவே போனாலும் போகலாம். ஆனால் இவனையே பொறுத்தமட்டில் இந்தச் சேவையானது இவனுடைய அஹங்காரத்தைக் கரைத்து, இவனை ஆத்மிகத்தில் உயர்த்திவிடுகிறது.

இதனால்தான் 'ஜீவகாருண்யம்' என்கிற மாதிரியே 'பரோபகாரம்' என்ற வார்த்தையும் ஒரு தினுசில் தப்புதான் என்றேன். பரனுக்கு (பிறத்தியானுக்கு) இவனுடைய சேவை உபகாரமாக இல்லாவிட்டாலும்கூட, ஸ்வயமாக இவனுக்கே சித்த பரிசுத்தியை உண்டாக்குவதால், இதை 'ஸ்வய உபகாரம்' என்றுதான் சொல்ல வேண்டும்.

இது வேடிக்கையாக இருக்கிறது: அதாவது நாம் கருணை பண்ணுகிறோம், அருள் காட்டுகிறோம் என்ற எண்ணமே இவனுக்கு இல்லாத போதுதான், இவனுக்குத் தெய்விகமான ''அருளுடைமை''யே உண்டாகிறது. இப்படியே இவன் சுயநலனைக் கொஞ்சம் கூட நினைக்காமல் சேவை செய்வதுதான் உண்மையில் ஆத்ம லாபமான பெரிய ''சுயோபகாரமாக'' இருக்கிறது.

நல்ல அத்வைத திருஷ்டி வந்துவிட்டால் ஸ்வயம், பரம் என்கிற பேதமே இல்லாமல், எல்லாம் ஈச்வர ஸ்வரூபமாகப் பார்த்து, பல தினுசில் கஷ்டப்படுகிறவர்களுக்கும் ஒருத்தன் தன்னுடைய இயற்கையான தர்மமாகவே ஆனந்தமாகப் பணி செய்துகொண்டிருப்பான். ''என் கடன்பணி செய்து கிடப்பதே'' என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்னது இந்த நிலையில்தான். (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

---

அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் என்கிற நகரில் உள்ள ஆராய்ச்சி சாலையில், பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டைன் ஆராய்ச்சி செய்து வந்தார். ''இதுதான் உங்கள் அறை'' என்று ஆராய்ச்சி சாலையினர் ஓர் அறையைக் காண்பித்தபோது, ஐன்ஸ்டைன் அங்கிருந்த சிறு குப்பைக் கூடையைப் பார்த்து, ''குப்பைக் கூடை மிகச் சின்னதாக இருக்கிறதே. இதை விடப் பெரிய குப்பைக் கூடை கிடைக்காதா?'' என்று கேட்டார்.

''எதற்காக இதைவிடப் பெரிய குப்பைக் கூடை?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு அவர், ''நான் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது அடிக்கடி தவறுகள் ஏற்படும். உடனே அந்தக் காகிதத்தைக் கசக்கி எறிந்துவிட்டு, மீண்டும் இன்னொரு காகிதத்தில் கணக்குப் போட்டுப் பார்ப்பேன். பிறகு அதையும் கசக்கி எறிந்துவிட்டு இன்னொரு காகிதம் எடுப்பேன். நான் என்ன மேதாவியா? அதனால் விடை வருவதற்குள் குப்பைக்கூடை நிரம்பிவிடும்'' என்றார்.

உதவி: நாடோடி



# உளம் கனிந்த நன்றி

**ஸ்ரீ ஜய ஹனுமான் வண்ணப்படத்தின் முதற் பதிப்பு விற்பனையை அமோகமாக்கி ஆதரித்த ஆஸ்திகப் பெருமக்களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றி.**

## ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் வண்ணப் படம்

பல அன்பர்களின் வேண்டுகோளின் படி, கல்கி ஓவியர் **வினு** வரைந்த, ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் அருள் பொழியும் இந்த வண்ணப்படம் விரைவில் வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

**ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் அங்கீகாரம் பெற்றது இப் படம்.**




○ ○ ○

## ஸ்ரீ ஜய ஹனுமான் வண்ணப் படம்

ஆயிரக்கணக்கான அன்பர்களின் விருப்பத்துக்கிணங்க ஸ்ரீ ஜய ஹனுமான் வண்ணப் படம், இரண்டாம் பதிப்பு தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலுமாகச் சேர்ந்த விரிவான பூஜை முறை புத்தகத்துடன் இப்பொழுது கிடைக்கிறது. ஓவியர் வினு வரைந்தது.

**ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களால் அருளாசி வழங்கப்பெற்ற பூஜைக்குரிய படம்.**



திருமணம், உத்தியோகம், வியாபாரம், கடன் நிவாரணம், தம்பதிக்குள் ஒற்றுமை, வித்யாலாபம், ஆரோக்கியம், சந்தானம், மனக்கவலை நீங்குதல், வியாஜ்யத்தில் ஜயம்போன்ற சகல காரியங்களும் 45 நாட்கள் ஸ்ரீ ஹனுமானைப் பூஜித்தால் கைகூடும் என்று சேங்காலிபுரம் பிரம்ம ஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர் அழுத்தமாகக் கூறியிருக்கிறார், தமது ஜெயமங்கள ஸ்தோத்திரப் புத்தகத்தில்.

**இப் படத்தைப் பூஜித்துப் பயனடைந்துள்ளதாகப் பல அன்பர்கள் தகவல் எழுதியுள்ளனர்.**

அளவு, விலை விவரம் :

| | | |
|---|---|---|
| **ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்** (படம்) | 13½"×20" | ரூ. 5.00 |
| | 9½"×15" | ரூ. 3.00 |

(பாக்கிங் உள்பட பதிவுத் தபால் செலவு ரூ. 3.50 தனி)

| | | |
|---|---|---|
| **(ஸ்ரீ ஜய ஹனுமான் படம் பூஜை புத்தகத்துடன்)** | 13½"×20" | ரூ. 5.00 |
| | 9½"×15" | ரூ. 3.00 |

(பாக்கிங் உள்பட பதிவுத் தபால் செலவு ரூ. 4.00 தனி)

**50 பிரதிகள் வாங்குபவர்களுக்கு 20% கமிஷன் உண்டு. ஏஜெண்டுகள் தேவை**

உங்கள் தேவைக்கு முழுத் தொகையையும் முன்னதாக M. O. செய்யவும்

உரிமையாளர்: **சரஸ்வதி வெங்கட்ராமன், w/o, ஓவியர்: வினு, 'கல்கி'**

**2, வேலாயுத முதலித் தெரு (மாடி) நுங்கம்பாக்கம், சென்னை-600 034**

(வள்ளுவர் கோட்டம், டாக்கீ நிலையம் அருகில்)

# எம்.ஜி.ஆர் கூறிய யோசனை

"நீங்கருத் தலை வணங்கு" படத்தில் நெஞ்சைவிட்டு நீங்காத காட்சி பற்றி ஏராளமான ரசிகர்கள் நம் காரியாலயத்துக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். படத்தின் கடைசி கிளைமாக்ஸ் காட்சிதான் பலரைக் கவர்ந்திருப்பதாகத் தெரியவந்தது.

இக்காட்சியில் லதா கிழிந்த புடவையைக் கைகளினால் பற்றிக் கொண்டு, செங்குத்தான பாறையிலிருந்து தொங்கியவாறு கதறுகிறார். கீழே 'கிடு கிடு' பாதாளத்தில் 'சோ' என்று அருவி வெள்ளம் பாய்ந்து ஓடுகிறது. சடும் மழை வேறு. அச்சமயம் எம். ஜி. ஆர். தீரத்துடன் போராடி அவரைக் காக்க முயன்று வெற்றி பெறுகிறார்.

இந்தக் காட்சி பற்றி விசாரிக்க டைரக்டர் ப. நீலகண்டன் அவர்களை அணுகிய போது அவர் சொன்னார் :

"நீங்கள் ஒரு நல்ல காரியம் செய்கிறீர்கள். திகைப்பையும், வியப்பையும் ஏற்படுத்தும் தந்திரக் காட்சிகள் மேல் நாட்டுப் படங்களில் நிறைய வருகின்றன. இவற்றையெல்லாம் எப்படித் தயாரித்திருப்பார்கள் என்று படம் பார்ப்பவர்கள் வியந்து போவார்கள். அவர்களது வியப்புக்குப் பதில் அளிக்கும் விதத்தில், மேற்படி படத் தயாரிப்பாளர்கள் 'எப்படி எடுத்தோம்?' என்ற தலைப்பில், படம் வெளி வந்த கையோடு புத்தகம் போட்டுவிடுகிறார்கள். இதை 'Technical Study' என்று கூறுகிறார்கள்.

"நான் மாஸ்கோவுக்குச் சென்றிருந்த போது ஒரு படப் பிடிப்பைப் பார்த்தேன். படம் தயாரித்துக் கொண்டிருந்த போதே அதில் உள்ள தந்திரக் காட்சிகளை எப்படி எடுத்தோம் என்பதை விளக்கி இன்னொரு படம் இன்னொரு காமிராவைக் கொண்டு எடுத்தார்கள். கலை நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் ஆவல் உள்ளவர்களுக்கு அது எத்தனை உதவியாயிருக்கும்!"

"இந்தக் 'கிளைமாக்ஸ்' காட்சி எந்த இடத்தில் படமாக்கப்பட்டது?" என வினவினேன்.

"ஒரே இடத்தில் படமாக்கப்பட்டதல்ல, சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி, ஹொகேனக்கல், வலமுரி க்ஷேத்ரா ஆகிய மூன்று இடங்களில், பல நாட்கள் முயன்று அக்காட்சியைப் படமாக்கினோம். இம் மூன்று நீர்வீழ்ச்சிகளுமே காவேரி நதியின் கிளைகள்தாம்."

"மேற்படி இடங்களை எப்படி, யார் தேர்ந்தெடுத்தது?"

"சாதாரணமாக வெளிப்புறப் படப்பிடிப்பு இடங்களை டைரக்டரும் அவரது உதவியாளர்களும் தேர்ந்தெடுப்பார்கள். இப் படத்தில், எம். ஜி. ஆர்.தான் இந்த இடங்களைத் தேர்ந்தெடுத்தார்."

"அப்படித் தேர்ந்தெடுக்க அவர் ரொம்ப அலைந்திருக்க வேண்டுமே அதற்கு அவகாசம் இருந்ததா ?"

"இல்லை, இவ்விடங்கள் ஏற்கனவே அவருக்குத் தெரிந்தவைதாம். 1953வது ஆண்டில் "சக்கரவர்த்தித் திருமகள்" என்ற படத்துக்காக இங்கு வந்து படப் பிடிப்பு நடத்தியிருக்கிறோம். எம். ஜி. ஆர்.தான் அதை எங்களுக்கு நினைவுபடுத்தினார். நானூறு அடி உயரப் பாறை, கதாநாயகியும், கதாநாயகனும் கீழே விழுந்துவிடாமல் இருக்க, சர்க்கஸில் 'பார்' வேலைகள் செய்யும் போது கீழே சில ஆட்கள் வலை பிடித்துக் கொண்டிருப்பார்களே, அம்மாதிரி பிடித்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்திருந்தோம். அந்தக் குறிப்பிட்ட 'கிளைமாக்ஸ்' காட்சி இரண்டு நிமிஷங்கள்தான் படத்தில் வருகிறது. ஆனால் இதைப் படமாக்க முழுசாக இரண்டு நாட்கள் ஆயின. இந்தக் காட்சியை எப்படிப் படம் பிடிப்பது என்று சிந்தித்து முன்னேற்பாடுகளைச் செய்ய ஆறு நாட்கள் ஆயின; இருநூறு ஆட்களின் உழைப்பு இன்றியமையாததாக இருந்தது : ஏராளமான பொருட் செலவு. இயற்கையாகவே நீர் வீழ்ச்சியில் பொங்கும் நுரைகளோடு செயற்கை நுரையையும் உண்டாக்க, தீயணைக்கும் படையினரின் உதவியை நாடினோம். 'டூப்' போட்டு எடுக்கலாம் என நினைத்தோம். லதா அதற்குச் சம்மதிக்கவில்லை. தைரியமாகத் தாமே இக்காட்சியில் நடித்தார். எம். ஜி. ஆர்., நம்பியார் பற்றிக் கூறவே வேண்டாம், தைரியம் அவர்களுடன் கூடப் பிறந்ததாயிற்றே!"

"எந்த அளவுக்கு முன்னேற்பாடுகளைக் கவனித்திருந்தீர்கள் என்பதற்கு ஓர் உதாரணம் கூற முடியுமா ?"

"ஓ, சொல்கிறேனே. இக்காட்சியில் லதாவின் புடவை கிழிந்துவிடுகிறதல்லவா ? படப் பிடிப்பு முடிவதற்குள் ஒன்றல்ல, ஐந்து புடவைகள் அப்படிக் கிழிய நேர்ந்தது ! நல்ல வேளை, ஒரே மாதிரி புடவைகள் பலவற்றை முன்யோசனையுடன் வாங்கி வைத்திருந்தோம்" என்றார் திரு நீலகண்டன்.

பேட்டி : காந்தன்





வாழ்க்கையில் சுயமாக வளம் பெறும் ஆடவர் இவர்...
...அதற்குத் துணை செய்ய அழகான ஆடைகளையும் அணிகிறார் !
நிச்சயமாக, மஃபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !


-M.461 TM

அமரர் கல்கி

# அலை ஓசை



## அத்தியாயம் 7

# பிரமிக்க வைத்த பவானி

சமூக சேவா சங்கத்தின் கட்டிடத்துக்குள் இரண்டு மூன்று அறைகள் இருந்தன. பெரிய கூடம் ஒன்றில் சீட்டாடுவதற்காகப் பல மேஜைகள் போடப்பட்டிருந்தன. ஓர் அறையில் புத்தக அலமாரிகள், சில மேஜை நாற்காலிகள். வேறு ஓர் அறையில் பிலியர்ட்ஸ் டேபிளைச் சுற்றிச் சிலர் ஜோக் அடித்துச் சிரித்தபடியே பந்துகளைக் குச்சியால் தட்டிக் கொண் டிருந்தார்கள். மூன்றுவதாகப் பின்புறம் இருந்த ஓர் அறைதான் மிக முக்கியமானது. அது தான் அங்கத்தினர்களுக்கு டிபன், காப்பி தயாராகும் சமையலறை. ராமப்பட்டணம் சோஷியல் சர்வீஸ் கிளப்பின் ரவா கேசரியும் உருளைக்கிழங்கு போண்டாவும் சுற்று வட்டாரத்தில் ஏழெட்டு மைல்களுக்கு ரொம்பப் பிரசித்தி.

சோஷியல் சர்வீஸ் கிளப் என்பதில் 'சர்வீஸ்' என்ற பதத்தை மறந்து விட்டு சோஷியல் கிளப்பாக அது பிரமாதமாக நடந்து வந்தது. கல்யாணசுந்தரம் அதில் சேர்ந்த பிறகு சமீப காலமாகப் புரட்சிகரமான சில மாறுதல்களைப் புகுத்தி யிருந்தான். அவனுக்கு இளம் அங்கத்தினர்களிடையே ஆதரவும் இருந்ததால் நூலகத்தில் ஆங்கில நாவல்களுடன் பல தமிழ்ப் புத்தகங்களும் வந்து சேர்ந்தன. அவற்றில் சில துப்பறியும் அல்லது சமூக நாவல்கள். வேறு பல 'இந்தப் புரட்சி', 'ஏழை அழுத கண்ணீர்' 'உலகம் உருப்படுவது எப்படி?', 'எரிமலை', அக்னி ஆறு' முதலிய பல பயங்கரப் பெயர்களைக் கொண்டிருந்தன.

இவற்றுள் ஒன்றைப் பாதி படித்துக்கொண்டிருந்த வாலிபன் ஒருவன் பட்டென்று அதை மூடிவிட்டு, ''இந்த உலகம் ஒருநாளும் உருப்படப் போவதில்லை'' என்ற மகத்தான உண்மையைப் பளிச்சென்று சொன்னான்.

''உலகத்தின் பேரிலே உனக்கு என்னப்பா அவ்வளவு கோபம்?'' என்றான் இன்னொருவன்.

''எனக்கு என்ன கோபம்? எனக்குக் கோபமே வராது. உண்மையைத்தான் சொல்கிறேன். இந்த உலகத்திலே ஏழை—பணக்காரன், முதலாளி — தொழிலாளி; மேல்சாதி—கீழ் சாதி, ஆண் சாதி — பெண்சாதி இப்படிப்பட்ட வித்தியாசங்கள் இருக்கிற வரையில் இந்த உலகம் உருப்படப் போகிறதே இல்லை.''

''அது சரிதானப்பா, இந்த வித்தியாசங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? அதை நீ சிந்தனை செய்து பார்த்தாயா?'' என்று மூன்றுவதாக ஒருவன் கேட்டான்.

''சிந்திப்பது என்பதுதான் நம்மில் யாரிடமுமே கிடையாதே? அதனால் தானே இந்தக் கதிக்கு வந்திருக்கிறோம்.''

''அடிப்படையான காரணம்தான் என்ன ? சிந்தித்திருக்கிற நீதான் சொல்லேன்.''

''மதந்தான் அப்பா, காரணம்! மதந்தான்! ஹிந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம், யூத மதம். இவற்றுக்குள்ளே குட்டி குட்டி மதங்கள்; சைவம் — வைஷ்ணவம் — புராடஸ்டண்ட் — ரோமன் கத்தோலிக். இப்படி மத வேறுபாடுகளாலேதான் இந்த உலகம் நாசமாய்ப் போகிறது!''

''மதத்தைச் சொல்லப் போய்விட்டாயே? அதற்கும் அடிப்படையான காரணம் என்ன என்பதை நீ சிந்தித்தாயா?''

''நீதான் சொல்லு!''

''கடவுள் அப்பா, கடவுள்! இந்த உலகத்திலிருந்து கடவுளையே ஒழித்துக் கட்டிவிட்டால் இந்த உலகத்தில் மதம் இல்லை, சாதி இல்லை, ஏழை பணக்காரன் இல்லை....''

''நீ இல்லை, நான் இல்லை, உலகமே இல்லை! ஏதோ உன்னுடைய மூளையிலேதான் முதன் முதலில் இந்த அபூர்வமான

யோசனை உதித்திருக்கிறது என்று நினைக்காதே! இரணிய கசிபு காலத்திலிருந்து எத்தனையோ பேர் கடவுளை ஒழித்துக் கட்டியாகி விட்டது.''

''நிறுத்துங்க அப்பா, உங்கள் வெறும் பேச்சை! பேசிப் பேசி என்ன பிரயோஜனம்? பேச்சைக் குறையுங்கள்; காரியத்தில் செய்து காட்டுங்கள்!''

''நாங்களா வேண்டாம் என்கிறோம்? காரியத்தில் ஏதாவது செய்து காட்டத்தான் இங்கே கூடியிருக்கிறோம். அந்தக் கல்யாண சுந்தரம் இன்னும் வந்து தொலையலையே?''

''கல்யாணம் வரும் வரை நாம் காத்திருப்பானேன்! நாம் ஆரம்பித்தால் அவன் வருகிற போது வந்து சேர்ந்து கொள்கிறான்.''

''சரி, ஆரம்பித்து விடுவோம்.''


சிலர் தபலா, ஆர்மோனியம் முதலிய வாத்தியக் கருவிகளைக் கொணர்ந்தார்கள். சுருதி கூட்டிக் கொண்டு கடவுள் வணக்கப் பாட்டைப் பாட ஆரம்பித்தார்கள்.

திடீரென்று ஒருவன் பெஞ்சு மீது ஏறி நின்று கொண்டு, ''ஆ! ஏழைகள்! ஏழைகள்! ஏழைகள் படும் பாட்டை நினைத்து என் ரத்தம் கொதிக்கிறது! இதயம் வெடிக்கிறது! என் தொண்டை காய்கிறது! அடே, பையா! ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வா!'' என்றான்.

''அடசீ! கேட்டதுதான் கேட்டாய், சோடாவாகக் கேட்கக்கூடாதோ? நாடக ஒத்திகைக்கென்று வாங்கி வைத்திருக்கிற சோடாக் கலரை யார் குடிச்சுத் தீர்ப்பது?''

இந்தச் சந்தர்ப்பத்தில் அறை வாசலில் வந்து நின்ற பவானி, ''நாடக ஒத்திகை ரொம்பத் தீவிரமாக நடக்கிறது போலிருக்கிறதே'' என்றாள்.

அறையிலிருந்த வாலிபர்கள் அனைவரும் அழுத்தம் திருத்தமாய் ஒலித்த அந்தப் பெண் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். பவானியைப் பார்த்ததும் பிரமித்துப் போய் நின்றார்கள்.



## அத்தியாயம் 8

# காதலை வளர்த்த கார்!

**ப**வானியைத் தெரியாதவர்கள் ராமப்பட்டணத்தில் யாரும் கிடையாது. அவளிடம் பேசிப் பழகாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவளை, அவள் அங்கு வந்த நாளிலிருந்தே அனைவரும் அறிவார்கள்.

எனவே அந்த வாலிபர்களுக்கு வாயடைத்துப் போயிற்றென்றால் அது, 'யார் இந்தப் பெண்?' என்று புரியாததால் அல்ல. 'பவானி இங்கே எப்படி வந்தாள்? எதற்காக?' என்று புரியாதது ஒரு காரணம். 'எவ்வளவு நேரமாக இங்கு நிற்கிறாள், தாங்கள் தர்க்கம் புரிந்ததையும் நாடக ஒத்திகை நடத்தியதையும் எவ்வளவு தூரம் பார்த்திருப்பாள்? அப்படி பார்த்திருந்தால் தங்களைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருப்பாள்?' என்றெல்லாம் சிந்தனைகள் அடுக்கடுக்காக எழுந்ததால் வியப்பும் வெட்கமும் ஒருங்கே அடைந்தது மற்றொரு காரணம்.

சிலவினாடிகள் பொறுத்துப் பிரமிப்பிலிருந்து விடுபட்ட ஒருவன், ''வாருங்கள், உட்காருங்கள்'' என்று ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு அதனைக் கைக்குட்டையால் துடைத்தான். அவ்வளவுதான், அத்தனை இளைஞர்களும் திக்பிரமையிலிருந்து விடுபட்டவர்களாக அவளை உபசரிக்கத் தொடங்கினார்கள்.

''டேய் பையா! காண்டீனில் பாதம் அல்வா பாக்கியிருக்கா? இல்லை எல்லாவற்றையும் விழுங்கித் தொலைத்து விட்டார்களா? போய்ப் பாரு!'' என்று அதட்டல் போட்டான் ஒருவன். இன்னொருவன், ''இழவு இந்த அறையில் ஃபானே இல்லை, வெந்து புழுங்குகிறது. அந்தக் கிழம் கட்டைகள் சீட்டாடுவதற்கு எதற்கு டேபிள் ஃபான்? சீட்டுப் பறக்கும். அதைப் போய்எடுத்துவருகிறேன்'' என்று கூறிவிட்டு விரைந்தான். மூன்றாவதாக ஒருவன் ஆரஞ்சு கலர் ஒன்றை உடைத்துக் கண்ணாடி டம்ளரில் ஊற்றினான்.

நாற்காலியில் அமர்ந்த பவானி, ''உங்கள் உபசரிப்புக்கெல்லாம் ரொம்ப தாங்ஸ். ஆனால் நீங்கள் சிரமப்பட வேண்டாம். எனக்கு ஒரு சின்ன உதவிதான் தேவை. மிஸ்டர் கல்யாண சுந்தரத்தைப் பார்க்க வந்தேன். அவர் இங்கே இல்லை என்று தெரிகிறது. அவர் வந்தால் ஒரு செய்தி சொல்லி விட்டால் போதும்'' என்றாள்.

''அவன் வந்தால் சொல்வது என்ன, அவனே வந்தாச்சு! வாடாப்பா கல்யாணம்! உன்னைத் தேடிக் கொண்டு அதிர்ஷ்ட தேவதையே வந்திருக்கிறது!'' என்று கரம் இறங்கிய குரல் ஒன்று ஒலித்தது.

பவானி திரும்பிப் பார்த்தாள். ''என் பாக்கியம்! என்னைத் தேடி வந்தீர்களா?'' என்று கல்யாணம் கேட்டபடியே அவளை நெருங்கினான்.

''உங்களைப் போன்ற ஒரு பரோபகாரி நண்பராகக் கிடைத்தது என் பாக்கியம் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் பவானி.

''மிஸ்டர் கல்யாணம்! இப்போது கூட ஓர் உதவி கோரித்தான் வந்தேன். எனக்காக அல்ல. இந்த ஊருக்குப் புதிதாக ஒரு குடும்பம் வந்திருக்கிறது. ஊர் எல்லையில் மதகடியில் அவர்கள் திண்டாடிக் கொண்டிருந்தார்கள். 'கல்யாண சுந்தரம் என்று இந்த ஊரில் இருக்கிறார். ரொம்ப நல்லவர். உங்களுக்கு நிச்சயம் உதவுவார், நான் போய் அவரை அனுப்புகிறேன்' என்று சொல்லி விட்டு வந்தேன். மாலை நேரத்தில் இங்கேதான் இருப்பீர்கள் என்ற நம்பிக்கை. வாசலில் மாஜிஸ்திரேட்டைப் பார்த்தேன். அவருடன் பேசிக் கொண்டிருந்ததில் வந்த காரியம் மறந்து தாமதமாகி விட்டது. நன்றாக இருட்டியும் விட்டதே! அவர்கள் அங்கே தவித்துக் கொண்டிருப்பார்கள்!''

''தவிப்பதா? நான் இருக்கும் போதா? அதுவும் நீங்கள் பிரியப்பட்டுச் சொன்ன பிறகா? நோ, நோ! அவர்களுக்கு ஜாகை பார்த்துக் கொடுத்து விட்டுத்தான் வருகிறேன்!''

''நிஜமாகவா? ஆல்ரெடி?''

''எஸ், உங்கள் விஷயத்தில் நீங்கள் 'என்' என்பதற்கு முன் என்னெயுடன் நான் நிற்பேன்.''

''என்றால் நம்பவே முடியவில்லையே?''

''நம்பிக்கை பிறக்கணும்னு என்னுடன் வாங்க. அழைத்துக் கொண்டு போய்க் காட்டுகிறேன். இங்கே ஒத்திகைக்கு எல்லாரும் காத்திருப்பார்கள், சொல்லி விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன். திரும்பி அவர்கள் தேவைகளை விசாரிக்க வருவதாகக் கூறிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். கம், லெட் அஸ் கோ!''

''ஓ.கே.'' என்றாள் பவானி மகிழ்ச்சியுடன். ''ஒத்திகை நடந்து கொண்டிருக்கிற சமயத்தில் குறுக்கிட்டதற்காக மன்னித்துக்



## மாஸ்கோவில் இப்படி அறிவித்திருக்கிறார்கள்!

''கருங்கடலில் கிடைத்த அபூர்வ மீன் வகைகள் நாளைக்குப் பதினொரு மணிக்கு விற்கப்படும்.''

மறுநாள் குறிப்பிட்ட கடை வாசலில் பெருந் திரளான கூட்டம்.

அங்கே இன்னும் ஓர் அறிவிப்பு ஒட்டினார்கள்: ''அந்த மீன் வகைகள் கருங்கடல் பகுதி மக்களுக்கு மட்டும் தான் விற்கப்படும்.''

பாதிக் கூட்டம் கலைந்து சென்றது.

உடனே இன்னொரு அறிவிப்பு: ''அவர்களிலும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்தான் விற்கப்படும்.''

இன்னும் பாதியாகக் கூட்டம் கரைந்தது.

''அந்த நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாக இருக்க வேண்டும்'' என்று அடுத்த அறிவிப்பு.

எஞ்சியவர் 200 பேர்.

அவர்களிடம் கடையில் இருந்த அதிகாரி ஒருவர் சொன்னார்: ''தோழர்களே, நீங்கள் எல்லாம் நம்மவர்களாகிவிட்ட பின் உங்களிடம் சொல்வதற்கென்ன? இங்கு மீன் வகைகளே எதுவும் விற்பனைக்கு இல்லை!''

மீனாட்சி மண்தலி,
தஞ்சாவூர் - சாமி



கொள்ளுங்கள்'' என்று தன்னைச்சுற்றிக் குழுமி நின்ற வாலிபர்களிடம் கூறி, கரம் கூப்பி விட்டு வாசலை நோக்கி நடந்தான்.

''நீங்கள் ஒத்திகையைத் தொடர்ந்து நடத்துங்க. நான் நாளைக்கு வந்து சேர்ந்து கொள்கிறேன்'' என்று கல்யாணமும் நண்பர்களைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் புறப் பட்டான்.

''ஆமாம், கல்யாணம் இப்போ வேறு ஒரு நாடகத்துக்கு ஒத்திகை பார்க்க வேண்டி யிருக்கு. 'காதல் கல்யாண நாடகம்!'' என்று ஒருவன் கூறியதும் மற்றவர் கொல்லென்று சிரித்ததும் கல்யாணத்தின் காதுகளுக்கு எட்டியது.

'முட்டாள்! காதல் கல்யாண நாடகமா இது? வாழ்க்கையே அல்லவா?' என்று தனக்குள் நண்பனைக் கடிந்துரைத்து முணு முணுத்தவாறே பவானியைப் பின் தொடர்ந் தான் கல்யாணம்.

**கா**ரில் அவளுக்குப் பின் கதவைத் திறந்து விடுவதா? முன் கதவையா? என்று கல்யா ணம் சற்றுத் தயங்குவதற்குள் பவானி தானாகவே முன்கதவைத் திறந்து அமர்ந்து கொண்டாள். கார் கிளம்பி வாசல்கேட்டை நோக்கிச் சென்ற போது மாஜிஸ்திரேட் இன்னும் அதே இடத்தில் அதே நாற்காலியில் அமர்ந்திருக்கக் கண்டாள் பவானி. காரி லிருந்தபடியே, ''வருகிறேன் ஸார்! குட் நைட்'' என்று கூறி விடை பெற்றாள். கோவர்த்தனன் கரம் அசைத்தாரேயொழிய அவ்விருவரும் சேர்ந்து போவதைப் பார்க்க அவர் மனம் எரிமலையாகக் கொந்தளித்தது.

இந்தப் பயணத்துக்குச் சீக்கிரம் முடிவு ஏற்பட வேண்டாம் என்று கருதியவனாகக் கல்யாணம் மெல்லக் காரை ஓட்டினான். மாசிலாமணி குடும்பத்தைச் சந்தித்துக் குடி வைத்த விவரங்களையெல்லாம் சாங்கோ பாங்கமாகக் கூறினான்.

அவனுடைய பிறருக்கு உதவுகிற குணத் தைப் போற்றிய பவானி, ''இந்த நாட கத்தைக்கூட ஏழை எளியோருக்கு ஏதேனும் உதவ வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நடத்தப் போகிறீர்களாமே? என்று அரங் கேறுகிறது? தேதி நிச்சயமாகி விட்டதா?'' என்று கேட்டாள்.

''தேதி என்னமோ நிச்சயித்து விட் டோம். ஆனால் கதாநாயகி வேஷத்துக்குத் தான் ஆள் இல்லை. ஆண் பிள்ளையைப் பெண் வேஷம் போட்டுக் கொள்ளச் சொல் வது முட்டாள்தனம் என்று எனக்குத் தோன்றுகிறது. அதில் 'ரியாலிடி' கொஞ்ச மும் இருப்பதில்லை. உருக்கமாக அமைய வேண்டிய காட்சிகூட நகைச்சுவையாகி விடுகிறது. கதாநாயகி வேஷம் ஏற்க யாரா வது ஒரு பெண்மணி முன்வந்தால் நாடகம் 'ஸக்ஸஸ்'; இல்லையேல், 'ஃபெய்லியர்'!''

''மேடை ஏறி நடிக்க இந்த ஊரில் எந்தப் பெண் முன்வருவாள்? வீண் ஆசை'' என்றாள் பவானி.

''அதனால்தான் இந்த ஊரைச் சேர்ந்தவர் களாயிராமல் பெரிய நகரத்திலிருந்து வந்த வர்களாகப் பிடித்துப் போடலாம் என்று யோசனை பண்ணுகிறேன். சென்னையிலிருந்து வந்திருக்கிறார்களே என்பதால் உடனே இல்லா விட்டாலும் இரண்டு நாட்கள் கழித்துக் கேட்டுப் பார்க்க உத்தேசம். அந்தப் பெண் கமலாவும் பார்க்கச் சுமாராக இருக்கிறாள். மேடை ஏறி நடிக்கச் சம்மதிப்பாள் என்று தோன்றுகிறதா உங்களுக்கு?''

''சிவசிவா! அவள் பெண் ஜன்மமாகிய என் முன்னால் நின்றே இரண்டு வார்த்தை பேச வில்லையே. அம்மாவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள். அவளாவது, மேடை ஏறி நடிக்கவாவது?''

இந்தப் பதிலையே பவானி கூற வேண்டும் என்று எதிர்பார்த்த கல்யாணம் திருப்தி அடைந்தவனாக, ''அப்படியானால் ஒன்று செய்யுங்கள்; நீங்களே கதாநாயகி பாகத்தை ஏற்று நடித்து விடுங்கள்'' என்றான்.

''அதற்கென்ன? செய்து விட்டால் போகி றது!'' என்றாள் பவானி.


இவ்வளவு சுலபமாக அவள் சம்மதித்து விடுவாள் என்று எதிர்பாராத கல்யாணம்


வீட்டு வேலையிலே
களைப்படையும்
போது ...
உடனடி சக்தி தருவது
க்ளாக்ஸோஸ்-D !
நிமிட நேரங்களில் புத்துணர்ச்சி பெற, க்ளாக்ஸோஸ்-D அருந்துங்கள். குடிநீர், தேநீர், காப்பி, பழச் சாறு ஆகியவற்றிலேயோ, அப்படியே தனிப்படவோ சாப்பிட இனியது. எண்ணற்ற வேலைகளைச் சமாளிக்க உதவும். நடுக் காலைநேரப் பானமாக அருந்தி வாருங்கள்.
க்ளாக்ஸோஸ்-D®
க்ளாக்ஸோ தயாரிப்பு
நிமிடங்களில் தென்பூட்டுகிறது உடம்பிலே
dCP/GL/33 e. Tam.

# விலையை ஒப்பிடுக.
# தரத்தை சோதித்திடுக.

## பாய்ண்ட்

தரமான டிட்டர்ஜண்ட்
சலவைப் பவுடர்




MCA/PD/4

பெங்களூர் அரசினர் சோப்பு
தொழிற்சாலையின் ஒரு தரமான தயாரிப்பு

திருக்கிட்டதில் கார் தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. பவானி பதற்றமடைந்து''ஸ்டெடி, ஸ்டெடி'' என்று எச்சரித்தபடியே ஸ்டியரிங்கைப் பற்றக் கரத்தை நீட்டினாள். அவள் சாய்ந்த போது அவள் தோள்கள் கல்யாணத்தின் தோள்களை உரசின. அவளுடைய நீண்ட அழகிய விரல்கள் கல்யாணத்தின் விரல்களைத் தீண்டியதில் அவற்றின் மிருதுத் தன்மையை அவன் உணர்ந்தான்.

அவ்வளவுதான்! கல்யாணத்தின் உடம்பெல்லாம் சிலிர்த்து தெளிந்தது. ஸ்டியரிங் கைப் பற்றியிருந்த அவன் கரங்கள் மட்டும் நிதானத்துடன் இருக்குமா என்ன?

கார் பாம்புப் பாதை வகுத்துப் பிறகு அதிலிருந்தும் பிரிந்து போய்ச் சாலையோரக் குப்பைத் தொட்டி ஒன்றன் மீது 'ணங்' என்று மோதிக் கொண்டு நின்றது.

''ஐயோ!'' என்று அலறியபடியே கரங்களில் முகம் புதைத்துக் குனிந்து கொண்டாள் பவானி.

அவள் மறுபடியும் கண் திறந்து நிமிர்ந்து பார்த்த போது, தெரு விளக்கின் மங்கிய ஒளியில் ஒரு விசித்திரமான காட்சியைக் கண்டாள். கல்யாணம் கீழே இறங்கிக் கார் எந்த அளவுக்குச் சேதம் அடைந்திருக்கிறது என்று பார்த்துத் திருப்தியுடன் தலையசைத்து விட்டு அதன்-'பானெட்'டின் மேல்குனிந்து அதனை முத்தமிட்டான்!

பிறகு திரும்பி வந்து மீண்டும் பவானிக்குப் பக்கத்தில் அமர்ந்தான். ''ஒண்டர்ஃபுல், ஒண்டர்ஃபுல்! நாடகத்தில் நான்தான் கதா நாயகன்! வேறு யார் போட்டிக்கு வந்தாலும் விடப் போவதில்லை'' என்றான்.

''காருக்கு ரொம்ப சேதமோ?'' என்று கவலையுடன் கேட்டாள் பவானி.

''இடது பக்கம் மட்கார்டில் பலத்த சேதம். சொட்டை விழுந்திருக்கிறது, பெரிதாக. ஆனால் நான் அதை ரிப்பேர் செய்யவே போவதில்லை. திஸ் இஸ் மை லக்கி டே! அதன் நினைவாக அந்தப்'பெண்'டை அப்படியே வைத்திருக்கப் போகிறேன்.''

பவானி குபீரென்று அடக்க மாட்டாமல் சிரித்தாள்.

வான வில்லின் வண்ணங்களையும் மல்லிகை மணத்தையும் பட்டின் மென்மையையும் ஜல தரங்க நாதத்தையும் ஒருங்கே ஒரே சமயத்தில் உணர்ந்தான் கல்யாணம். (தொடரும்)

××××××××××××××××××××××××



## விவாத மேடை

## கிரிக்கெட்டில் பௌன்ஸர்கள் தேவையா?

உங்கள் கருத்தை விளக்கிச் சுருக்கமாக எழுதுங்கள்.

**முடிவு தேதி: மே 11உ**

**மே 23ந் தேதி விளையாட்டுச் சிறப்பிதழில்**

பிரசுரமாகும் கடிதங்களுக்குப் பரிசு உண்டு.

**ஆசிரியர், கல்கி, சென்னை - 600031**

××××××××××××××××××××××××



**அமரர் கல்கி**

**நினைவுச் சிறுகதைப் போட்டி**

சரித்திர அல்லது சமுதாய நோக்குடன் விஞ்ஞான அல்லது புதுமைக் கருத்துக்களும் கதைகளில் இடம் பெறட்டும்; பழைய பாணியுடன் நவயுக நடையும் துள்ளி வரட்டும்.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ... | ரூ. 1,000 |
| இரண்டாம் பரிசு | ... | ரூ. 500 |
| மூன்றும் பரிசு இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம் | ... | ரூ. 500 |

பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதைக்கும் ரூ. 100 சன்மானம் வழங்குகிறோம்.

**முடிவு தேதி: 30-6-76**

**ஆசிரியர், கல்கி, சென்னை - 31**



# துணிவே துணை

பொன்வயல் என்ற ஊரில்தான் எத்தனை மர்மங்கள்! அவ்வூர் மக்களின் மௌடீகமான காளி பக்தி, காளியை வைத்துக் கொண்டு சிலர் சதிச் செயல்கள் செய்ய அனுமதிக்கிறது. இந்தச் சிறு ஊரின் மர்மங்களை அறிவதற்குப் போலீஸார் தீவிரமாய்ச் செயல்படுகின்றனர். அதன் விளைவு, ஓர் இளம் போலீஸ் அதிகாரி துர்மரணத்துக்கு ஆளாகிறார். இடைவேளைக்குப் பிறகுதான் போலீஸ் இலாகாவில் ஒரு சுறுசுறுப்பு ஏற்படுகிறது; திரைக் கதையிலும் விறுவிறுப்பு ஏற்படுகிறது.

ஜேம்ஸ்பாண்டு பாணி நடிப்பு ஜெய்சங்கருக்குக் கைவந்த கலை. பிய்த்து உதறிவிடுகிறார்! சண்டைக் காட்சிகளில் நடிக்க அவருக்குச் சொல்லித் தரவேண்டுமா? அவர் நடிப்பாற்றலை எடுத்துக் காட்ட — அவர் அதிர்ஷ்டம் — இரட்டை வேடம் கிடைத்திருக்கிறது. கொள்ளைக் கூட்டத் தலைவியைக் கண்டு அவள் வைத்த பந்தயங்களிலெல்லாம் வெற்றி பெற்று அவள் மதிப்பில் உயர்ந்து மனத்திலும் இடம் பிடித்து விடுகிறார்.

ஊரை விட்டே வெளியேற முயன்ற அயோக்கியர்களை ஜெய்சங்கர் ஹெலிகாப்டரில் துரத்திப் பிடிப்பது மெய் சிலிர்க்க வைக்கும் காட்சி.

பொன் வயல் கிராமத்துத் தெரு, காளி கோயில் முதலியனவெல்லாம் மிகவும் இயற்கையான சூழ்நிலையில் படமாக்கப்பட்டிருக்கின்றன.

ஜெய்சங்கருக்கு அடுத்தபடியாக நம் உள்ளத்தில் பதிகிறவர் — பழைய நடிகை ராஜசுலோசனா. அநுபவம் அற்புதமாக வெளிப்படுகிறது. ஆனால் ஜெய்சங்கரும் அவருமாகச் சேர்ந்து நடிக்கும் சில காட்சிகள் எப்படித்தான் சென்ஸாரின் கத்திரிக் கோலுக்குத் தப்பியதோ, தெரியவில்லை! படுமட்டம்.

அறிமுக நடிகை ஜெயப் பிரபா, அபர்ணா இருவரும் பொன்வயலில் வளர்ந்த செழுமையான பயிராய் வளைய வருகின்றனர்.

இந்த வண்ணப் படத்தின் விசேஷ அம்சம் கலை நுணுக்கங்கள் நிறைந்த பாபுவின் ஒளிப்பதிவு; திகைப்புச் சுரங்கமாக உருவாக்கியிருக்கிறார்.

சொல்லி வைத்தாற்போல் நிகழும் சம்பவங்கள் நிறைய இருந்தாலும் படம் பார்க்கச் சுவையாயிருக்கிறது.

கதை, வசனம், பஞ்சு அருணாசலத்தினால் லாகவமாகப் புனையப் பட்டிருக்கின்றன. டைரக்டர் எஸ். பி. முத்துராமன் திறமையாகத் தம் பொறுப்பை நிறைவேற்றியிருக்கிறார்.

''துணிவே துணை'' துணிந்து புனைந்த சித்திரம்தான். தயாரிப்பாளர்களுக்கு அது துணை புரிய வேண்டும்.

— காந்தன்



# ரோஜாப்பூ

லட்சுமி சுப்பிரமணியம்



சாந்தா இப்போது தன் நினைப்பில் இல்லை. ஸ்குரு முடுக்கிய பொம்மை மாதிரி செய்ததையே திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருந்தாள். கண்ணாடி எதிரே முகத்தைத் திருப்பித் திருப்பி முதுகைப் பார்த்துக் கொள்வதும், சற்றுத் தள்ளி வந்து இடையை முன்னும் பின்னுமாகக் கவனிப்பதுமாக இருந்தாள்.

கண்ணாடிக்கு மேலே இருந்த ஜீனத் அமனின் படம் சொக்க வைப்பது போலச் சிரித்தது. கழுத்துக் குழிவுக்குக் கொஞ்சம் கீழேயே இறங்கிவிட்ட மேல் சட்டை இறுகப் பிடித்த இடையில் நறுக்காக வழித்த உடல் அமைப்பு தெரியும் சரிவு. கால்களை ஒட்டித் தழுவினாற் போன்ற பெல்பாட்டம், கீழ்ப் பகுதியில் அகன்று விசிறிற்று. சட்டத்துக்குள் சிரித்த அந்தப் படத்தின் வழுவழுப்பை அவள் விரலால் தடவி, மானசீகமாக ரசித்ததுண்டு. எவ்வளவு அருமையான உடல் அமைப்பு? அதை அழகாய்க் காட்டும் 'சிக்'கான உடை?

அதைப் பார்த்து, அதேபோல் இருக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து, அம்மாவின் முகச் சுளிப்பை ஒதுக்கி, அப்பாவின் சம்மதத்தை நயந்து பெற்று, பிறந்த நாளுக்கு இந்த உடை வேண்டும் என்று தைத்துக் கொண்டாயிற்று. தைத்து வந்த உடுப்பைப் போட்டுப் பார்த்துக் கொள்ளும் ஒத்திகை இப்போது.

அம்மாவுக்கு எதிரே போய் ஒய்யாரமாக நின்றாள். கண்களைச் சிமிட்டித் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து, ''எப்படி இருக்கிறது, மம்மி?'' என்று கேட்டாள். தங்கம்மாவுக்கு அடக்கி வைத்திருந்த வெறுப்பு உள் மனத்திலிருந்து ஓங்கி ஜ்வாலை விட்டு எரிந்தது.

''இப்படியே வெளியே போகப் போகிறாயா?''

''பின்னே வீட்டுக்குள்ளே உலாவுகிறதுக்காகவா தைத்தேன்? இன்று எனக்குப் பிறந்த நாள். தோழிகளோடு பீச்சுக்குப் போகப் போகிறேன்.''

''இந்த உடையிலே பீச்சுக்கா? அங்கே வருகிற அத்தனை பேரும் பார்க்கவா?''

''பார்த்தால் என்னம்மா? நான் 'டீசண்ட்' ஆக இல்லை?'' என்று உதட்டை முறுக்கிக் கொண்டு அங்கே வந்த அப்பாவைச் சிபாரிசுக்காக இழுப்பது போலத் திரும்பிப் பார்த்தாள். பச்சை முற்றாத அந்த இளமையையும், கள்ளமில்லாத அந்தப் பேச்சையும் கவனித்தபடி, மலர்ந்து போய் நின்றார் சாரதி.

'' 'டீஸண்ட்' என்கிற கேள்வி இல்லையம்மா. உன்னைப் பொது இடத்திலே நாலு பேர் பார்க்கிற போது, உன்னுடைய உடையோ பாவனைகளோ, தனிச்சென்று தனியாகக் கவர்ச்சியாகத் தெரியக் கூடாது. ''அதோ அந்தப் பெண்!'' என்று கண் பார்வையாலே சுட்டிக் காட்டுவது போல் இருக்கக் கூடாது. அவ்வளவுதான்; உனக்குத் தெரியாததை நாங்கள் சொல்ல வேணுமா? நீ ஒரு 'கிராஜுவேட்' ஆகப் போகிறாய். இருபது வயதாகிறது....''

''ஆமாம். படிப்பதில் மட்டும் இல்லை. வாழ்க்கை அனுபவத்திலும் 'கிராஜுவேட்' ஆகப் போகிறேன். தைரியமாக அடி எடுத்து வைக்கப் போகிறேன்!'' என்று தோளைக் குலுக்கிக் கொண்டாள் சாந்தா.

''ஜாக்கிரதையாக அடியெடுத்து வை. ஊரறிய ஒரு முறை சறுக்கினால் அப்புறம் ஒரே சறுக்கல்தான்'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் தங்கம்மா.

''போகட்டும் விடு. இந்த வயதில் என்னென்னவோ குழந்தை ஆசைகள் இருப்பது

நியாயந்தானே?'' என்று சொல்லிவிட்டுச் சாரதி உள்ளே போய் விட்டார்.

கடற்கரையில் பவானி, ஷீலா, நீரஜா என்று ஒரு சிறு கூட்டத்துடன் பவனி வந்து கொண்டிருந்தாள் சாந்தா. மனத்தில் பிடிபடாத பெருமை. அவர்களுக்குள்ளே அவளுடையதுதான் கண்ணைக் கட்டி நிறுத்தும் 'சிக்'கான உடை. இன்ன நிறச் சட்டை இன்ன நிற 'பாண்ட்' என்று அவளை பஸ்ஸில் அடையாளம் காணும் கண்கள். விரலின் நகச் சிவப்பை, 'வாட்ச் ஸ்டிராப்'பை, கால் செருப்பின் குதிகால் தூக்கலைக் கவனிக்கும் கண்கள். தோள் பை ஊஞ்சலாட இரட்டைப் பின்னலில் ஒன்றை முன்னால் தொங்க விட்டுக் கொண்டு நடக்கும்போது, கூடவே அசைந்தாடும் கண்கள்.

ஷீலாவின் கைப் பிடிச் சங்கிலியில் நாய்க் குட்டி தொடர்ந்து வந்தது.

நாயை வேடிக்கை பார்க்கும் சாக்கில் வாலிபர்கள் கூட்டம் ஒன்று தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. நடக்க நடக்கச் சிறிது சிறிதாகப் பின்தங்கிவிட்டது. ஒருவன் மட்டும் பிடிவாதமாகத் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தான். மெதுவாகச் சினிமாப் பாட்டின் முனகல் வேறு.

'' ஷீலா! உன்னுடைய நாய்க் குட்டியை விட்டு விடு, போகட்டும்! சங்கிலி இல்லாத நாய்க் குட்டி ஒன்று நமக்குப் பின்னால் துணை வந்து கொண்டிருக்கிறது!'' சாந்தா பலமாகக் கத்தினாள்.

'கொல்' என்று எல்லோரும் சிரித்தார்கள். கரை ஓரம் கால்களை அலைகள் கழுவ நின்று கொண்டிருந்த சிலரும்தான். சாந்தா சிரிக்கவில்லை. திரும்பிப் பார்க்கவும் இல்லை. அந்த முகம் சட்டென்று இருண்டு போனதை அவளால் மனக் கண்ணில் பார்க்க முடிந்தது. அப்புறம் அவர்களை அவன் பின் தொடரவில்லை......

அன்று பரீட்சை முடிந்து பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தாள். கொஞ்சம் நெரிசல் தான். ஒரு கை உயரே கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்தது. இன்னொரு கை டிபன் பாக்ஸ், நோட்டுப் புத்தகப் பையை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தது. பின்னலை எடுத்துக் கட்டியிருந்ததால், பின் கழுத்தின் பளபளப்பும், பருவப் பொலிவும், அழுத்தமும் தோளின் சரிவும் இன்னும் தெளிந்து தெரிந்தன. சற்றுத் தள்ளி நின்ற அந்த வாலிபனை அந்தத் தோற்றம் கண்டி அருகே இழுத்திருக்க வேண்டும்.

அவன் ஒட்டினாற்போல் வந்து நின்றான். அவள் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. கை இலேசாக உடம்பில் இடித்தது. அவன் முணுமுணுப்பை அவள் பொருட்படுத்தவில்லை. வளைவுகளில் பஸ் திரும்பிய போது ஒட்டினாற் போலத் தொட்டது. சாந்தா முகத்தைச் சுளித்துக் கொண்டாள். பின்னாலிருந்து யாரோ ஒருவர் இறங்குவதற்காக இடித்துத் தள்ளிக் கொண்டு நடந்து வந்தார். நெருக்கம் அதிகமாயிற்று. அவனுடைய விரல்கள் அவளுடைய இடைக்குக் கீழே ஊர்ந்தன. கம்பளிப் பூச்சி நகர்ந்தது போல் நெளிந்தாள் சாந்தா.

நிக்கல் குரோமியக் குழாயைப் பையுடன் சேர்த்து இறுகப் பற்றிக் கொண்டு, செருப்புக் காலைச் சற்று உயர்த்திச் 'சதக்'கென்று இறக்



ஒனுள். நெஞ்சில் ஒரு குரூரத் திருப்தி நிறைந்தது.

அந்தப் பையனின் கால் விரல்களில் ரத்தம் கசிந்திருக்கும் கட்டாயமாக. முன்னுக்குப் போகச் சொல்லி முணுமுணுக்கும் கண்டக்டர் ஒரு நொடி அதை ரஸித்துப் புன்னகை செய்தான். அடுத்த 'ஸ்டாப்'பில் அந்த வாலிபன் இறங்கிப் போய்விட்டான். நெஞ்சில் ஓர் அல்லி ராணிக் கர்வம் தலை தூக்கிற்று.

அம்மாவுக்கு இதைச் சொல்ல வேண்டாம். அவள் அநாவசியமாகக் கலங்கிப் போவாள்.

அன்று 'ஹோலி'ப் பண்டிகை. ஆஷா, ஷப்னு, சிந்துஜா இப்படி அந்தப் பகுதியில் உள்ள தன் தோழிகளை அழைத்துக்கொண்டு விடியற்காலையிலேயே கிளம்பிப் போனவள், ஒரு மணிக்கு உடையெல்லாம் மசியும் வண்ணமுமாக வந்து சேர்ந்தாள். அவள் போட்டிருந்த ஸால்வார் - கமீஸ் முதுகுப்புறம் கொஞ்சம் கிழிந்துகூடப் போயிருந்தது.

''என்ன சாந்தா இது? உனக்கே நன்ருக இருக்கிறதா? உனக்கு என்ன ஹோலிப் பண்டிகை?''

''சிநேகிதிகள் கூப்பிட்டார்கள். போய்ச் சேர்ந்து கொண்டேன். ஒன்ருகச் சேர்ந்தாலே கொண்டாட்டம் தானே? இந்த விளையாட்டுக்கு வித்தியாச பேதமே கிடையாது. வர்ணம் பூசிக் கொள்வது மட்டுமில்லை. நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஆஷாவின் அண்ணனைத் தூக்கித் தண்ணீர்த் தொட்டியில் போட்டு விட்டோம்!''

''என்ன இது? ஆண் பெண் வித்தியாசம் கூட இல்லாமல்—''

''போம்மா. உனக்கு எங்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுகிற பக்குவம் இல்லை. முப்பது வருஷங்களுக்கு முன் இருந்த கட்டுப்பெட்டி வழக்கங்களையே நினைத்துக்கொண்டிருக்கிருய். 'ஜெனரேஷன் கேப்'- சந்ததி இடைவெளி — என்கிருர்களே, அது நம்முடைய வீட்டில்தான் நிறைய இருக்கிறது!'' என்று குமுறினுள் சாந்தா. கண்கள் ஊசி முனையாகச் சிறுத்தன.

''உனக்குத் தெரியாது. நான் இந்தக் காலத்துப் பெண். என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும். நீ சும்மா இரு'' உடலும் குரலும் நடுங்கின.

பிறந்த நாள் உடை அணிந்து கொண்டு கிளம்பினுள் சாந்தா. மாலை சினிமாவுக்கு அவளும் பவானியும் போவதாக இருந்தது. பதிவு செய்த டிக்கட்டுகள் அவளிடமே இருந்தன. தியேட்டர் வாசலில் இருவரும் சந்தித்துக் கொள்வதாகத் திட்டம்.

மணி ஆறு. படம் ஆரம்பிக்கப் பதினைந்து நிமிடங்கள் கூட இல்லை. பொறுமை இல்லாமல் காத்துக் கொண்டு, மணிக்கட்டின் கடிகாரத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தபடி நின்ருள் சாந்தா.

சலித்துப் போய் அங்கே அருகில் இருந்த பொது டெலிபோன் ஒன்றில் பவானியின் வீட்டுக்குப் பேசினுள். எதிர்பாராமல் விருந்தாளிகள் வந்து விட்டார்களாம். அதனுல் அவள் வர முடியவில்லையாம். வீட்டுக்குப் போன் செய்திருக்கிருள். அதற்குள் சாந்தா கிளம்பி விட்டாள்.

படம் ஆரம்பித்து விட்டது. கிளம்பி அவ்வளவு தூரம் வந்த பிறகு திரும்பிப் போக மனம் இல்லை. இரண்டாவது டிக்கட்டை என்ன செய்வது?

''ஸ்பேர் டிக்கட் இருக்கிறதா? நான் வாங்கிக் கொள்ளவாமா?'' என்ற குரல் கேட்டது. பார்வைக்கு நாகரிகமான தோற்றம். வயது நாற்பது இருக்கலாம். ஆனுல் முப்பதுக்கு மேல் மதிப்புப் போட முடியாது. குரலிலும் பார்வையிலும் ஒரு தனி நயம் தெரிந்தது.

''உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் கொடுங்கள்.''

சாந்தா இரண்டாவது டிக்கட்டை நீட்டினுள். ஐந்து ரூபாய் நோட்டை நீட்டிவிட்டு ''சில்லறை அப்புறம்!'' என்று சொல்லியபடி உள்ளே வந்து விட்டார் அந்த மனிதர். அது ஹிந்திப் படம். அவளுக்குச் சில உரையாடல்கள் புரியவில்லை. பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் அவளுக்கு அக்கறையாகப் பொறுமையாக அர்த்தம் சொல்லிக்கொண்டு வந்தார். சிருங்காரம் ததும்பும் வசனங்கள் வரும்போது, அவர் சொல்லத் தயங்குவது புரிந்தது. ஆனுல் ஒரு வார்த்தையையும் விட்டு விடவில்லை. குங்கிலிய ஜ்வாலையாகக் குபீரென்று அவளுக்கு மட்டும் வெட்கம் பொங்கி எழுந்தது. நல்ல வேளையாக இருளில் அவள் முகம் தெரியவில்லை அவருக்கு.

படம் முடிந்து வெளியே வந்தார்கள். குளிர் சாதனம் செய்த ஹாலிலிருந்து வெளியில் வந்த வெதுவெதுப்பு. வாசலில் திரளாகக் கூட்டம். பஸ் நிறைந்து வழிந்தது. அந்தக் கூட்டத்தில் எப்படி ஏறுவது?

''நான் காரில்தான் வந்திருக்கிறேன். உன்னை 'ட்ராப்' பண்ணி விடுகிறேன்.''

''தோ... தாங்க்ஸ்...''

''ஓ! இட் ஈஸ் ஆல்ரைட்! வா போகலாம். எனக்கு அந்தப் பக்கம் வேலை இருக்கிறது. டிரைவருடன்தான் வந்திருக்கிறேன். எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை.''


பதனமாக வற்புறுத்தும் குரல். அவளால் மறுக்க முடியவில்லை. உள்ளே ஏறிப் பின்புறம் அவளும் பக்கத்தில் அமர்ந்தாள். சினிமாவை விமர்சனம் செய்து கொண்டே வந்தார். அவருடைய கருத்துக்கள் அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அவளுக்குப் பிடித்தவற்றையும் சொல்லிக் கொண்டே வந்தாள்.

அந்த ஐந்து' ஸ்டார் ஹோட்டல் வழியாகப் போகும்போது, அவர் சைகையில் கார் உள்ளே நுழைந்து விட்டது.

''என்னது? எதற்காக இங்கே போகிருேம்?'' என்ருள் சாந்தா வியப்போடு.

---

## கைநாட்டு ஓவியர் !



ஃபிரெஞ்சு ஓவியர் ஃப்யூமி, தாம் வரைந்த ஓவியங்களுக்குக் கீழே தம் கையொப்பத்தை இடுவதில்லை; கைநாட்டுதான் போடுகிருர். அவர்எழுதப் படிக்கத் தெரியாதவர் என்பதல்ல காரணம்; ஓவியத் திருட்டு நடந்துவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கைதான். அதாவது அவர் ஓவியம் போலவே யாரேனும் வரைந்தால்கூடக் கட்டை விரல் ரேகையைப் பதிக்க முடியாதல்லவா ?

-- பெஜுண்ட் -- முத்து




HC-18-140-tm

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:

**M/s. பாரி & கோ., லிமிடெட், சென்னை, கோயமுத்தூர், மதுரை, திருச்சி, செகந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், கன்னிக்கோட்டை, கொச்சின், பெங்களூர் மற்றும் மங்களூர்**

# ஹேலோ ஷாம்பூகள்-உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே...




## உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன் வளமோங்கித் திகழவே, உபயோகிப்பீர் புரதம் நிறைந்த ஹேலோ எக் ஷாம்பூ

விசேஷ போஷாக்கு மிக்க ஹேலோ எக் ஷாம்பூவின் வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக, உங்கள் தலையின் மேல் தசைகளும், கேசமும் வலுப்பெறுகின்றன. கேசம் இயற்கைப் பளபளப்புடன் வளமோங்கித் திகழ்கிறது.

**இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு —ஹேலோ கேசப் பராமரிப்பு!**

**ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:** இந்த விசேஷ உத்தியின்படி தயாரிக்கப்பட்ட ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

**ஹேலோ லெமன் ஃப்ரெஷ் ஷாம்பூ:** உங்கள் கேசத்திற்கு இயற்கையான, தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

**ஹேலோ கான்ஸெண்ட்ரேட் ஷாம்பூ:** ஏராளமான நுரைவளத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.




**ஹேலோ ஷாம்பூகள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப் படுகின்றன.**

''இங்கே காப்பி அருமையாக இருக்கும். சென்னையிலேயே இந்த மாதிரி காப்பி கிடைக்காது. கம் ஆன். ஐந்து நிமிஷம்! ரொம்ப நாழி ஆகிவிடவில்லை...'' என்று மணிக்கட்டைப் பார்த்துக் கொண்டார். எண்களே இல்லாத சதுர வாட்ச் அது. வைர ஊசியாய் முள் பளபளத்தது.

மேஜையின் முன்னால் உட்கார்ந்ததும் ''உனக்கு என்ன பிடிக்கும்?'' என்று கேட்டார்.

''காப்பி மட்டும் போதும்!''

அவர் கேட்கவில்லை. இரண்டு அயிட்டங்கள் ஆர்டர் கொடுத்து விட்டார். வீடு திரும்பி சாப்பிட முடியாது. அம்மாவுக்கு என்ன சமாதானம் சொல்வது?

''உன் வீட்டு ஃபோன் நம்பர் என்ன?''—அவர் கேட்டார்.

''ஏன், எதற்கு?''

''நீ வீடு திரும்ப நேரம் ஆகும் என்று ஃபோன் பண்ணி விடுகிறேன். 'கார் கொஞ்சம் ரிப்பேர். மெக்கானிக்கைத் தூக்கத்திலிருந்து எழுப்பிப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன். அரை மணியில் ரெடியாகிவிடும். கவலைப்பட வேண்டாம். சாந்தா பத்திரமாக என்னோடுதான் இருக்கிறாள்' என்று சொன்னால் உன் அப்பா அப்படியே நம்பிவிடுவார்!''

அவர் புன்னகையைக் கலவரத்துடன் பார்த்தபடியே, ''ஏன் அப்படிப் பொய் சொல்ல வேண்டும்?'' என்றாள் சாந்தா.

''பயப்படாதே சாந்தா! நான் ரொம்பக் கௌரவமான மனிதன் என்று பெயர் வாங்கியவன். உன் அப்பாவுக்கு என்னைத் தெரியும். ஒன்றும் தப்பாகவே எடுத்துக்கொள்ள மாட்டார். இங்கே இந்த ஓட்டலில் மாற்றுப் பெயரில் ஓர் அறை எப்போதும் போட்டு வைத்திருக்கிறேன். ஸ்பெஷல் ரூம். அதிலுள்ள வசதிகளைப் பார்த்து அனுபவிக்கவே அரை மணி நேரமாகும்!''

நாற்காலி தரதரவென்று தேய்த்துக் கொண்டு பின்னால் நகரச் சாந்தா கோபத்துடன் எழுந்தாள். அவள் உடம்பு முழுதும் நடுங்கிக் கொண்டிருந்தது. ''யூ ஸ்கவுண்ட்ரல்!'' என்று அவள் கத்தத்தான் நினைத்தாள். ஆனால் குரல் எழும்பவில்லை.

''சாந்தா! அந்த ஹோலிப் பண்டிகைக் கேளிக்கையின் போது நானும் அங்கே இருந்தேன். ஒருவேளை வண்ணப் பூச்சு காரணமாக உனக்கு இன்று என்னை அடையாளம் புரியாதிருக்கலாம். அன்று நீ சகஜமாக விளையாடியபோதே என் மனசைக் கவர்ந்து விட்டாய். நீ யார் என்று விசாரித்துத் தெரிந்து கொண்டேன். ஆஷாவின் அண்ணனைத் தூக்கித் தண்ணீர்த் தொட்டியில் போட்டு அமுக்க உதவினாயே அப்போ உன் சிரிப்பு என் நெஞ்சைக் கொள்ளை கொண்ட மாதிரி வேறு எதுவுமே என்னைக் கவர்ந்தது இல்லை. சாந்தா! மறுபடியும் அப்படி ஒரு சிரிப்புச் சிரித்துக் காட்டேன்! ஐ வில் கிவ் எ தௌஸண்ட் ருபீஸ் ஃபார் தட் அலோன்! எஸ் எ தௌஸண்ட்!''

சாந்தா 'பளார்' என்று அவரை அறைய நினைத்தாள். ஆனால் கை வலுவிழந்து கிடந்தது. அங்கிருந்து தப்பி ஓடினால் போதும் என்று தோன்றியது. 'கால்களே! தளர்ந்து விடாதீர்கள்; தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள்!' என்று வேண்டிக் கொண்டு வேகமாக வாசலை நோக்கி ஓடினாள். அவர் தன்னைப் பின்தொடர்ந்து நாலு பேர் பார்க்க ஓடிவர மாட்டார். ஏனென்றால் அவர் கௌரவம் பார்க்கும் மனிதர்! தான் தப்பி விடலாம்தான்!

ஆனாலும் என்ன பயங்கரம்! புனிதமான ஹோலிப் பண்டிகையின்போது தான் கள்ளம் கபடமில்லாமல் நடந்துகொண்ட விதம் தன்னை இவ்வளவு கேவலமாக மதிப்பிட ஒரு மனிதனைத் தூண்டி விட்டிருக்கிறதே! இப்படித்தானே வேறு பலரும் தன்னை எடை போட்டிருப்பார்கள்! இவன் பணக்காரன்; கௌரவப் போர்வையில் வலைய வரும் கயவன். அதனால் தைரியமாக மனம் திறந்து ஆயிரம் ரூபாய்க்கு என்னை விலை பேச முற்பட்டான். வேறு பலர் இப்படிப் பேசத் துணிவோ தகுதியோ இல்லாமல் மௌனமாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் மனமும் இவனுடையதைப் போலத்தான் விகாரமாகி யிருக்கும். அப்படி நாம் ஏன் நடந்து கொண்டோம்? ரோஜாவுக்குப் பாதுகாப்பாக முள் இருக்கிறது என்ற தைரியம்! ஆனால் அதற்காக ரோஜாவைப் பறிக்காமலா விட்டு விடுகிறார்கள்?

சாந்தா ஹோட்டல் வாசலில் நின்ற பல டாக்ஸிகளில் ஒன்றில் ஏறிச் சீக்கிரமாக வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தால் மீட்டருக்கு மேல் இரண்டோ மூன்றோ போட்டுத் தருவதாகச் சொன்னாள்.

அம்மா வாசலில் கவலையோடு காத்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் அந்த முகத்தில் சட்டென்று ஓர் ஆறுதல் விடிந்தது. அவள் அலட்சியமாகப் பரிகாசம் செய்யும் அச்சம் இல்லை அது. தன் பயத்தின் நிழலையே அங்கே பார்ப்பது போல் இருந்தது அவளுக்கு.

உள்ளே வந்தவளைத் திரும்பிப் பார்க்காமலே தங்கம்மா பேசினாள். ''நீ போனதும் பவானி போன் பண்ணினாள். நீ சினிமாவுக்குத் தனியாகப் போய் விட்டதை எண்ணிப் புலம்பிக் கொண்டிருந்தேன்...''

பின்னாலிருந்து விக்கலும் அழுகையுமாக வந்த ஒலியைக் கேட்டு அவள் பேச்சு நிறுத்திவிட்டாற்போல் நின்றது. திரும்பி மகளைப் பார்த்தாள். அழுகையில் நகங்கும் சாந்தாவின் முகம் தெரிந்தது. கோபித்துக்கொள்ள வந்த நினைவெல்லாம் மாறிக் கருணை பொங்க அவளை இழுத்து அணைத்தாள். அப்படியே அவளைப் பிடித்தவாறு கீழே உட்கார்ந்து கொண்டு கூந்தலை மெல்லக் கோதி விட்டாள்.

மடியில் பதிந்த முகத்திலிருந்து அலை அலையாக எழுந்த விசிப்பு இலேசில் அடங்கவில்லை.

தாயும் மகளும் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள இன்னும் கொஞ்ச நேரம் ஆகும்...

---

## தினசரி குடை




இத்தாலியில் பிளாஸ்டிக் செய்தித் தாள்களைத் தயாரித்திருக்கிறார்கள். ரயிலில் பஸ்ஸில் படிக்கலாம் என்பதோடு, குடை எடுத்துக் கொண்டு போக மறந்துவிட்டால் இதையே குடையாக, தலைக்குப் பிடித்துக் கொள்ளலாம். குளித்தபடியே பேப்பர் படிப்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.


- பிரான்ஸ் சாயர் -- சாமி

# டினோபால்* பெறும் புதிய பெயர்


# ரானிபால்+



**ரானிபால்+**
(பருத்தித் துணிகளுக்கு)




**ரானிபால்+-எஸ்**
(செயற்கை இழை மற்றும் கலப்பு இழைத் துணிகளுக்கு)




**அதே பொருள், அதே திறன், ஆனால் பெயர் மட்டும் புதிது!**

## சிறந்த வெண்மைச் சலவைக்கே ரானிபால்+

**Suhrid Geigy**
LIMITED

+ ஸுஹ்ரித் கெய்கி லிமிடெட்டின் ட்ரேட் மார்க் ஆகும்
* ஸிபா கெய்கி லிமிடெட்டின் லைஸென்ஸ்படி முன்னாளில் விற்பனை செய்யப்பட்டது.

Shilpi SGT 6A/76 tam

அத்தியாயம் 3

## அங்கும் அவள் வந்தாள்!

மண்ணாளும் மன்னவன் விண்ணாளும் வேந்தனை எண்ணித் துறவியானான்.

''கண்ணா கண்ணா!'' என்று கனிந்துருகும் அவன் வாய், பெரியாழ்வார் காலடியில் கரைந்துருகிற்றே அன்றி, ஏதும் பேச இயலவில்லை.

கண்ணீர் பெரியாழ்வாரின் கால்களை நனைத்தது.

பக்திக் கனலில் புடம் போட்டெடுத்த பெரியாழ்வார் பாசக் கனலில் கருகி நின்ற குலசேகர ஆழ்வாரைத் தேற்றினார்.

''இவை இவைதான் நடக்கும் என்று இறைவன் விதித்திருக்கும்போது, எவர் அதைத் தடுத்துவிட முடியும்?'' என்பதை மீண்டும் அவர் நினைவுபடுத்தினார்.

''குலசேகரா! நீ துறவு நிலையைக் களைந்தெறிந்து அரசனாகவே மீண்டும் வஞ்சிக்குத் திரும்பினால் அரசியல் நிலை மாறிவிடக் கூடும். அது உன்னால் இயலுமா?'' என்று கேட்டார்.

'இயலாது' என்பதைத் தலையசைத்துத் தெரிவித்தார் குலசேகர ஆழ்வார்.

''அரசியல் சதுரங்கங்கள், ஆரவாரப் போர்க்களங்கள், அரண்மனைப் பரி



வாரங்கள் அனைத்தையும் மறந்த பிறகே அரசன் துறவியாக முடியும். துறவு நிலை பெற்ற பிறகு ஏற்கனவே அவன் கட்டியிருந்த ஆடைகள் எல்லாம் கிழிந்த ஆடைகளே. அவிழ்த்துப் போட்ட அந்த ஆடைகளில் ஒன்று புதிதாகக் கிழிந்து போய் விட்டதென்று அழுது பயன் என்ன? பொதுச் சாலையிலிருந்து உன் பாதை காடு திரும்பி விட்டது. இனி சாலையில் வழியனுப்பியவர்களின் க்ஷேம லாபங்களைப் பற்றிச் சிந்திப்பதில் அர்த்தமென்ன? இனி நீ ஒரு ஞான புஷ்பம். பனியில் நனைவதும், வெயிலில் காய்வதும், இறுதியில் மண்ணிலே சாய்வதும், மாதவனின் வைகுந்தத்தில் இடம் பிடிப்பதுமே இனி உன் கடமைகள்.

''அரசன் என்ற கடமையை உதறிய பிற்பாடு, அரச பீடத்தில் உனக்கென்ன கடமை இருக்கிறது? அந்தப் பீடத்தில் மகன் இருந்தாலும், மாற்றான் இருந்தாலும் துறவிக்கு ஒன்றே! நினைவுகள் அலைக்கழிக்கும், நெஞ்சு தடுமாறும். லௌகீகத்திலிருந்து துறவறத்துக்கு வரும்போது, சில அடையாளச் சின்னங்களும் கூடவே வரும். அவை மீண்டும் உன்னை லௌகீகத்துக்கே அழைத்துச் சென்று விட்டால் கவலை இல்லை.



''ஆனால் வைகை ஆற்றின் கரையிலே நின்றுகொண்டு கங்கை ஆற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்த நினைப்பது பேதைமை.

''பூமியின் சுழற்சி எவனால் இயக்கப்படுகிறதோ அவனாலேயே வாழ்க்கையின் நிகழ்ச்சிகளும் இயக்கப்படுகின்றன. காலம் அறிந்து அவற்றைக் கட்டுப்படுத்தும் உக்தியும் அந்தத் தேரோட்டியின் கைகளிலே இருக்கிறது.

''சேர நாடு என்று ஒரு நாடு இருப்பதையும், அங்கே வஞ்சி என்றொரு நகரம் இருப்பதையும், அதிலே மார்த்தாண்டவர்மன் என்றொரு மகன் இருப்பதையும், அவனுக்கு உறவினருக்குள்ளே பகை இருப்பதையும்


நீ அறவே மறந்தால் ஒழியத் தெய்வீக உணர்வில் உனக்கு நிம்மதி கிட்டாது.

''இதே மகன் பிறந்த உடனேயே இறந்திருந்தால் எப்படி நீ அதைச் சில நாட்களிலேயே மறந்திருப்பாயோ, அப்படியே இப்போதும் மறந்துவிடு.

''நேரே திருக்கண்ணபுரம் போ. நின்ற கோலத்தில் உலகை வென்று முடித்த சௌரிராஜனிடம் உன்னை அர்ப்பணித்துவிடு. மற்றவற்றை அவன் கவனித்துக் கொள்வான்.''

— குலசேகர ஆழ்வார் கூருமலேயே நிகழ்ச்சிகளைக் குறிப்பால் அறிந்த பெரியாழ்வார், அவர் துயரங்களுக்கு இந்த முடிவுரையைக் கூறினார்:

''தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நான் வீட்டை விட்டுப் போகிறேன், போகிறேன் என்றால் போக முடியாது. முதலில் தூணைக் கைவிடு; பிறகு உன் பயணம் சுலபமாகிவிடும்'' என்று கூறி முடித்தார்.



அறிவறியாத குழந்தை பள்ளியில் பாடம் கேட்பதுபோல் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த குலசேகர ஆழ்வார், ஒரு பெருமூச்சில் துயரங்களை ஜீரணித்தார்.

பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்களில் ஒன்றான திருக்கண்ணபுரத்துக்கு அவர் புறப்பட்டார். அவர் விடைபெறும்போது கோதை நாச்சியார், ''கொஞ்சம் நில்லுங்கள்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

கண்ணபுரத் திருமாலைப் பற்றித்தான் எழுதிய பாடல் ஒன்றை அவர் கையில் கொண்டு வந்து கொடுத்தார். குலசேகர ஆழ்வார் அதைப் படித்துப் பார்த்தார்:

காட்டில் வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
ஓட்டரா வந்தென் கைப்
பற்றித் தன்னொடும்
கூட்டு மாகில்நீ கூடிடு
கூடலே

ஒரு முறைக்கு இரு முறை அதை அவர் வாய்விட்டுப் பாடினார்.

கண்ணபுரத்தானைக் கூடிக் களித்தால் வஞ்சிப்புரத்து வஞ்சம், நெஞ்சை விட்டு மறைந்துவிடும்; உண்மைதான்.

குலசேகர ஆழ்வார் பரிவாரங்களோடு புறப்பட்டு விட்டார்.

இது. திருக்கண்ணபுரம்.

கண்ணபுர நாயகி சமேதராய், நின்ற திருக்கோலத்தில் காட்சி தரும் சௌரிராஜன் இந்தக் கிராமத்திலேதான் கோயில் கொண்டிருக்கிறான்.

ஏற்கனவே பெரியாழ்வாராலும், கோதை நாச்சியாராலும் மங்களாசாஸனம் செய்யப்பட்டது திருக்கண்ணபுரம் என்ற திருப்பதி. கண்வ மகரிஷிக்குக் காட்சி தந்த இடம் என்று இதனைக் கூறுவார்கள்.

காவிரிக் கிளையின் வடகரையில் திருப்புகலூர், தெற்கில் திருக்கண்ணபுரம். சோழ நாட்டுத் திருப்பதி.

இந்தத் திருப்பதிக்கே குலசேகர ஆழ்வார் வந்து கொண்டிருந்தார்.

இதயத்தில் பாய்ந்த முள்ளை அவர் எடுத்துவிட்டார். ஆனால், ரத்தம் மட்டும் கசிந்து கொண்டிருந்தது.

மதுரையைத் தாண்டிக் காட்டு வழியாக ஆழ்வாரின் பல்லக்கும் பரிவாரங்களும் வந்து கொண்டிருந்த போது நன்றாக இருட்டிவிட்டது. அங்கிருந்த பட்டி ஒன்றின் அருகிலேயே அவர்கள் தங்கினார்கள். அவர்களது பொருள்களைச் சுமந்து வந்து கொண்டிருந்த தேர்களும் அங்கே நிறுத்தப்பட்டன. அவற்றிலிருந்த தீவட்டிகளைப் பரிவாரங்கள் ஏற்றத் தொடங்கின.

நல்ல புல்வெளியில் ஆழ்வாரின் கூடாரம் அடிக்கப்பட்டது.

பட்டி தொட்டிகளிலிருந்த ஆண்களும், பெண்களும் அந்தத் துறவி அங்கு தங்குவது கண்டு கூடிவிட்டார்கள்.

எல்லோரையும் வாழ்த்திய குலசேகர ஆழ்வார் கூடாரத்துக்குள் நுழைந்தார். அவருக்குத் திருஅமுது படைக்கச் சீடர்கள் விரைந்தனர். ஆழ்வார் உணவு கொள்ள மறுத்துவிட்டார். மேலே விரிப்பெதுவும் இல்லாமல் கையைத் தலையணையாக்கிப் பள்ளி கொண்டு விட்டார்.

தனிமையில் மனம் மீண்டும் வஞ்சி நோக்கிப் பாயத் தொடங்கிற்று; தடுத்துவிட்டார்.

தூக்கம் அவர் கண்களைத் தழுவத் தொடங்கிற்று. அமைதி அவர் நெஞ்சத்தை ஆட்கொள்ளத் தொடங்கிற்று.

அப்போது, ''ஐயா!'' என்றொரு குரல் கேட்டது.

ஆழ்வார் எழுந்து உட்கார்ந்தார்.

எதிரே ஓர் அழகிய இளம் பெண்.

ஆழ்வாருக்குத் தான் மிதிலைக்கு வந்திருப்பது போல் தோன்றிற்று.

கண்ணைப் பறிக்கும் சிவப்புப் பட்டுச் சேலை கட்டி, இடையில் தங்க இடை அணி அணிந்து, கழுத்தில் மாங்கல்யம் திகழ, நெற்றியில் செந்தூரம் ஒளி வீச, கால்களில் தண்டை அணிந்து, கை வளையல்கள் மின்ன — காட்சி கொடுத்தாள் அந்தப் பெண். அவள் கைகளில் இரண்டு வெள்ளிப் பாத்திரங்கள் இருந்தன. இரண்டிலும் 'அடிசில்' எனப்படும் சுவையமுது இருந்தது.

ஆழ்வார் தன்னை அறியாமல் அந்தப் பெண்ணை வணங்கினார். அந்தப் பெண் அவர் அருகிலேயே அமர்ந்தாள். ஆழ்வாருக்குத் தான் அரண்மனையில் உட்கார்ந்திருப்பது போல் ஒரு பிரமை உண்டாயிற்று. இளம் வயதில் தன் அன்னை தனக்கு உணவூட்டிய நினைவு வந்தது.

'யார் நீ?' என்று அவர், அவளைக் கேட்கவில்லை, ஏனோ கேட்கத் தோன்றவில்லை.


அவள் பேசினாள் :

ராஜாஜி சிந்தனை


## நாகரிக மணியில் இரு நிமிஷங்கள்!

இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் படித்தால் அந்த நூல்கள் எழுந்த காலத்திலும் அதற்கு முன்னரும் நம்முடைய ஜனங்கள் ஒழுங்கான ஆட்சி, கலைகள் வளர்ச்சி, வியாபாரப் பெருக்கம், கைத்தொழில் அபிவிருத்தி, கல்வி மிகுதி முதலிய அம்சங்களுடன் எத்துணை உயர்ந்த நாகரிகம் உடையவர்களாக இருந்தார்கள் என்பது தெரியவரும். அந்தக் காலத்து நாகரிகத்தைவிட நாம் இன்று அதிகமாகப் பெற்றுவிட்டோமா என்பதுகூடச் சந்தேகம்தான். அப்படி அவர்கள் உயர்ந்த நாகரிகம் உடையவர்களாயிருந்தது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.

பிரிட்டிஷார் ஆட்சி நிலைநாட்டப்பெற்றது ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்திலேயே. அது முதல் இதுவரை பிரிட்டிஷ் ஆட்சி நடப்பதெல்லாம் நூற்றைம்பது ஆண்டுகளாகத்தான். ஆகவே நம்முடைய மொத்த சரித்திர காலத்துடன் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தை ஒப்பிட்டால், ஒரு மணி நேரத்துக்கும் இரு நிமிஷ நேரத்துக்கும் உள்ள வித்தியாசமே என்பது புலனாகும். ஆகவே நம்முடைய நாகரிகமணியில் ஆங்கில ஆட்சி இரு நிமிஷங்களே. — இந்திய தேச சரித்திரம் என்ற கட்டுரையில்




everest/392/SP-tm



# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் “சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்.”

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் “சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்” அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்ப கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

TNSCB : 112.

## புதுமைப் பெண்

ஆடும் ஊஞ்சலுடன் ஆடாத மனமும்
பாடும் குரலுடன் பண்பான பேச்சும்
சாடும் வீரமும் சேரும் வனப்பும்
நாடும் உண்மையை, நளினப் பெண்மையை.

மேலட்டை வண்ணப்படம்: ஏ. ஆர். வி. பத்ரா



"மிகவும் களைத்துப் போய் இருக்கிறாயே. இதை அருந்து."

அவள் ஒருமையில் பேசினாள்.

என்ன உரிமை ?

ஆழ்வார் அதையும் கேட்கவில்லை, ஏனோ கேட்கத் தோன்றவில்லை.

அவர் திருவமுது அருந்தினார்.

அவள் அவர் கைகளைக் கழுவி, தன் முந்தானையாலேயே துடைத்து விட்டாள்.

"நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. தம்பி மார்த்தாண்டவர்மன் இப்போது அகஸ்தீசுவரம் காட்டில் இருக்கிறான். திருவேங்கடத்தான் ஸ்ரீவல்லபர் அவனைக் கவனித்துக் கொள்கிறார். மெல்லிளங் கோதை கொஞ்சம் வாடியிருக்கிறாள். எல்லாம் போகப் போகச் சரியாகிவிடும்" என்றாள் அவள்.

'இவை யெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஆழ்வார் கேட்கவில்லை; கேட்கவும் தோன்றவில்லை.

"ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் வனவாசத்தைப் பற்றி நீ எவ்வளவோ பேசி இருக்கிறாயே. அவர்களுக்கு ஒரு கோவிலையும் எழுப்பி இருக்கிறாயே. மார்த்தாண்டவர்மனின் வனவாசம் அதற்குச் சற்றும் குறைந்ததல்ல. அவனும் ஒரு நாள் நாடு திரும்புவான்" என்றாள் அவள்.

இப்போதும் ஆழ்வார் எதையும் கேட்கவில்லை. ஏனோ அவர் வாய் அடைத்துவிட்டது போல் தோன்றிற்று.

"சரி! நேரமாகிவிட்டது. நீ நன்றாகத் துயில் கொள்!" என்றாள் அவள்.

ஆழ்வார் பள்ளி கொண்டார்.

இப்போது புல்வெளியில் படுப்பதாகத் தோன்றவில்லை; ஏதோ பஞ்சணையில் படுப்பதாகத் தோன்றிற்று.

பொழுது விடிந்தது.

எப்பொழுதுமே ஓர் இடத்தில் பாடி இறங்கினால், 'வெள்ளெனும் பாற் பொழுதிலேயே' எழுந்து பிறரை எழுப்பும் ஆழ்வார், இப்போது சூரியோதயத்துக்குப் பின்பே எழுந்தார்.

எழுந்த வேகத்தில் அங்குமிங்கும் தேடினார். பரிவாரங்களுக்குள்ளே ஓடினார். சுற்றியிருந்த கிராமத்துப் பெண்களை யெல்லாம் பார்த்தார். காவல் இருந்த காவல்காரர்களைப் பார்த்து, "இரவு நேரத்தில் யார் வந்து எனக்கு அமுது படைத்தது?" என்று கேட்டார்.

"யாரும் வரவில்லையே, பிரபு?" என்றார்கள், அவர்கள்.

"இல்லை ; யாரோ வந்தார்கள்; நீங்கள் தூங்கிவிட்டீர்கள்" என்றார்.

காவல்காரர்கள் கைகட்டி, வாய் பொத்தி நின்றார்கள்.

ஆழ்வார் திடீரென்று சாந்தம் அடைந்தார்.

"நிச்சயமாகத் தெரியுமா ? அழகாக ஆடை அணிந்த அழகான இளம் பெண் — பார்வைக்குச் சீதாபிராட்டியாரைப் போல் இருப்பார். அவர் வந்து எனக்கு அமுது படைத்தாரே !" என்றார்.

"இல்லை பிரபு! நாங்கள் இங்கேயே தான் இருக்கிறோம். ஒரு நொடிப் பொழுதும் நாங்கள் கண்ணயரவும் இல்லை; இந்த இடத்தைவிட்டு விலகவும் இல்லை" என்றார்கள், அவர்கள்.

"நான் கனவு கண்டிருக்கிறேன்" என்றார், ஆழ்வார்.

அவர்கள் பதில் பேசவில்லை.

பல்லக்கு பரிவாரங்கள் கிளம்பின.

**ப**ல்லக்கு சோழ நாட்டில் திருப்புகலூரை நெருங்கியது. திருப்புகலூர் எல்லையில் ஆழ்வாரின் வருகையை அறிந்து ஒரு பெரும் கூட்டம் கூடிவிட்டது. பல குலமகளிர் ஆரத்தித் தட்டோடு காத்திருந்தார்கள்.

பல்லக்கு நின்றது.

எல்லாப் பெண்களும் ஆரத்தி எடுக்க முந்தும்போது, "நில்லுங்கள்" என்ற குரல் கேட்டது; அவர்கள் அசையாமல் நின்றார்கள்.

ஒரு வெள்ளித் தட்டில் ஆரத்தியை ஏந்தியபடி, ஓர் அழகான பெண் ஆழ்வாரின் எதிரே தோன்றினாள். ஆழ்வாருக்கு உடலெல்லாம் வியர்த்தது.

இரவில் கூடாரத்தில் தனக்கு அமுது படைத்த அதே பெண்.

"ஐயா, சுகமாக வந்து சேர்ந்தாயா ?" என்று அவள் கேட்டாள்.

அதே குரல்.

இப்போது ஆழ்வார் மௌனியாக இருக்கவில்லை. ''நீ யார் தாயே?'' என்று ஆவலோடு கேட்டார்.

''உன் தாய்தான்'' என்று சொல்லிச் சிரித்தபடி, அவள் ஆரத்தி எடுத்தாள்.

''உனக்கு எந்த ஊர்?'' என்று ஆழ்வார் கேட்டார்.

''எந்த ஊர் என்று எப்படிச் சொல்வது?'' என்று அவள் மீண்டும் சிரித்தாள்.

சுற்றியிருந்த பெண்கள் எல்லாரும், ''அவளொரு பைத்தியம் சாமி!'' என்று கூறி, அவளை அப்புறத்தில் தள்ளி விட்டுத் தாங்கள் ஆரத்தி எடுத்தார்கள்.

அவள் அந்தப் பெண்களைப் பார்த்து முறைத்துவிட்டு, ஒரு குடிசைக்குள் நுழைந்தாள்.

ஆழ்வாருக்கு நிம்மதி இல்லை. நெஞ்சு படபடத்தது. யாரையும் அவர் கவனிக்கவில்லை. பளிச்சென்று கீழே இறங்கி அந்தப் பெண்களை விலக்கிக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தார்.

சுற்றுமுற்றும் தேடினார். அங்கே யாரையும் காணவில்லை. திகைப்போடு மீண்டும் பல்லக்கில் வந்து அமர்ந்தார்.

''உண்மையிலேயே அவள் பைத்தியம் தான் சுவாமி!'' என்றார்கள் பெண்கள்.

பல்லக்கு புறப்பட்டது.

காவிரிக் கரையின் மீதிருந்த கட்டுப் பாலத்தைக் கடந்து பல்லக்கு திருக்கண்ணபுரம் வந்தது.

கண்ணபுரத்து வாசலிலேயே மேள தாளங்களோடு ஆலய அறங்காவலர்கள் அவரை வரவேற்றார்கள்.

ஆழ்வார் தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூடத்துக்குள் சென்று அநுஷ்டானங்களை முடித்தார்.

உடனே திருமாலின் நின்ற கோலத்தைக் காண ஆலயத்துக்குள் நுழைந்தார். கண்ணபுரத்தான் மீது கவி மலர் சொரிந்தார்.

இரவிலே தனக்கு அமுது ஊட்டிய தாயை நினைத்து, ராகவனை அவர் தாலாட்டினார்.

மன்னுபுகழ்க் கௌசலைதன்
  மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள்
  சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ்
  கணபுரத்தென் கருமணியே!
என்னுடைய வின்னமுதே!
  இராகவனே தாலேலோ!

கொங்குமலி கருங்குழலாள்
  கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன்
  திருமருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்தமலி
  கணபுரத்தென் கருமணியே
எங்கள்குலத் தின்னமுதே!
  இராகவனே! தாலேலோ!

. . . . . . . . . . . . .

சுற்றமெல்லாம் பின்தொடரத்
  தொல்கான மடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே!
  அயோத்திநகர்க் கதிபதியே!
சுற்றவர்கள் தாம்வாழும்
  கணபுரத்தென் கருமணியே!
சிற்றவைதன் சொற்கொண்ட
  சீராமா! தாலேலோ!

கன்னிநன்மா மதிள்புடைசூழ்
  கணபுரத்தென் காகுத்தன்
தன்னடிமேல் தாலேலோ
  வென்றுரைத்த தமிழ்மாலை
கொல்நவிலும் வேல்வலவன்
  குடைக்குலசே கரன்சொன்ன
பன்னியநூல் பத்தும்வல்லார்
  பாங்காய பத்தர்களே!

—ராகவனைத் தாலாட்டி முடித்த ஆழ்வார் நன்கு இருட்டிய பிறகு, ஆலயத்தில் இருந்து வெளியேறினார்.

கூடத்தின் முன்புறத்தே பரிவாரங்கள் தங்கின.

ஆழ்வார் தனியாகக் கூடத்துக்குள் நுழைந்தார்.

மங்கலான விளக்குகள் உள்ளே ஏராளமாக எரிந்து கொண்டிருந்தன. அவருக்கென்று விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட அநுஷ்டான அறைக்குள் அவர் நுழைந்தார். இரண்டு சர விளக்குகள் மட்டும் அந்த அறையில் தொங்கிக் கொண்டிருந்தன. அந்த நந்தா விளக்குகள் ஆலயத்துக்கென்று கோதை நாச்சியாரால் அளிக்கப்பட்டவை. அந்த விளக்குகளைக் கொஞ்சம் தூண்டிவிட்டு, இடையில் கட்டியிருந்த பட்டை அவிழ்த்துத் தரையில் விரித்தபடி அதன் மீது அமர்ந்தார் அவர். சற்று நேரத்தில் அறை எங்கும் சிவப்பு வெளிச்சம் படர்ந்தது. ஆழ்வார் அங்குமிங்கும் பார்த்தார்.

ஒரு பெண் நடந்து வரும் சலங்கை ஒலி கேட்டது. ஆனால் எதுவும் கண்ணுக்குப் புலனாகவில்லை.

ஆழ்வார் தம்மை அறியாமல் ''யாரது?'' என்றார்.

''அதற்குள்ளாகவா என்னை மறந்து விட்டாய்?'' என்று குரல் கேட்டது.

அவர் சிவப்பு வெளிச்சத்தைக் கூர்ந்து கவனித்தார். அங்கே அதே பெண்; அதே சிவப்புச் சேலை.

அவர் அப்போது கவனிக்காத ஒன்றை இப்போது கவனித்தார்.

அவள் மூக்கில் சிவப்பு மூக்குத்தி இருந்தது. (தொடரும்)

# தாய்மார்களே!
# டாக்டர்கள் குழந்தை உணவில் எதை எதிர்பார்க்கிறார்களோ, அது அமுல்ஸ்ப்ரேயில் உள்ளது.

அமுல்ஸ்ப்ரேயில் உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும், வலுவுடனும் வளருவதற்குத் தேவையான வைட்டமின்கள், கனிஜப் பொருட்கள் மற்றும் புரதங்கள் அடங்கியுள்ளன.

வைட்டமின்கள்—நோய்த்தொற்றை எதிர்க்க, நன்றாக பசி எடுக்க, ஆரோக்கியமான நரம்புகள், ஈறுகள், கண்கள் மற்றும் பற்களுக்கு.

நியாஸின்—சீரண சக்தியை வளர்க்க, உடல் உறிஞ்சிக் கொள்ள. ஆரோக்கியமான சருமத்துக்கு. கால்ஷியம், பாஸ்பரஸ் போன்ற கனிஜங்கள் எலும்புகள் சீராக அமைய. இரும்புச் சத்து, ரத்த அமைப்புக்கு. புரதம், செல் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. அமுல்ஸ்ப்ரேயில் தரமுயர்ந்த புரதங்கள் அடங்கியுள்ளன.

அமுல்ஸ்ப்ரேயை, பிறந்து சில நாட்களான குழந்தைகள் கூட சீரணிக்க முடியும். ஒவ்வொரு சொட்டுப் பாலும் மிக நுண்ணிய பவுடராக மாற்றப்படுகிறது. கொழுப்பும் அவ்வாறே மாற்றப் படுகிறது. இதனால் குழந்தை இதை எளிதில் சீரணிக்க முடிகிறது.

அமுல்ஸ்ப்ரே விரைவில் எளிதாகத் தயாரிக்கவல்லது. ஸ்ப்ரே-ட்ரை முறையில் தயாரிக்கப் படும் நுண்ணிய பவுடரான அமுல்ஸ்ப்ரே எளிதில் விரைவில் கரைகிறது. ஆகையால் அது பாட்டிலின் நிப்பிள் துவாரத்தில் அடைத்துக் கொள்வதில்லை. எனவே, குழந்தை அதிக காற்றை விழுங்குவதில்லை.

**பாலஅமுல் மற்றும் வளரும் குழந்தை**

3-வது மாதத்தில் உங்கள் குழந்தைக்கு அமுல்ஸ்ப்ரேயைத் தவிர, பாலஅமுல் தானிய உணவு தரத் தொடங்குங்கள்.

**அதிக விவரங்கட்கு இலவசமாக அமுல் குழந்தைப் புத்தகம்.**

அமுல் குழந்தைப் புத்தகத்தை இலவசமாகப் பெற த.பெ. 10124, பம்பாய் 400 001 என்னும் முகவரிக்கு எழுதுக. 50 பைசா தபால் தலையுடன் உங்கள் முழு முகவரியையும் அனுப்புக.




## அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.

Indian Standards Institution

விற்பனைக்கு விடுப்போர்: குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

# வட்ட மேஜை

அமரர் ராஜாஜியின் பிரதிநிதியாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் நாற்பத்திரண்டு வருடங்கள் பணியாற்றிய வீரபாகு காலமாகிவிட்டார்.

எம். ஸி. வி. என்று அன்புடன் அழைக்கப்படும் வீரபாகு வர்த்தகக் குடும்பத்தில் பிறந்தவர்.

சட்டக் கல்வி பயின்று தூத்துக்குடியில் வழக்குரைஞர் தொழில் செய்தார். வ.உ.சி.யின் உறவினராகையால் தேச பக்திமேலிட்டு, படிப்பு காலத்திலேயே கதர் விற்பனை செய்யத் தொடங்கினார். சமூகப் பணி செய்தார்.

1934ல் மஹாத்மாஜி தூத்துக்குடிக்கு விஜயம் செய்தபோது தம் வீட்டில் தங்க வைத்து உபசரித்தார். ''உனது வீட்டைத் தர்மசாலையாக்கிவிட்டுச் செல்கிறேன்'' என்றார் மகாத்மா. அதன் பொருளறிந்து செயல்பட்டார் மு.சி.வி.

பிறகு ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றார். யுத்த எதிர்ப்புப் பிரசாரம் செய்து சிறை சென்றார். அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகவும் முதல் நாடாளுமன்ற அங்கத்தினராயும் இருந்தார். சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர் பின்னர் பொதுவாழ்வு தூய்மை அடைய உழைத்தார்.

1972ல்கூட ராஜாஜியின் மன நிலையை அறிந்து மாவட்டத்தில் தம் நண்பர்களுடன் மதுவிலக்கு பாத யாத்திரை நடத்தினார்.

வீரபாகுவின் வீரமும் தன்னலமற்ற உழைப்பும் பாரத நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடியேறட்டும்.

விட்டலபுரம்
26–4–76 வி.எஸ். வேங்கடாச்சாரி

ஒவ்வொரு மாணவனது கல்வி வாழ்க்கையிலும் ஒரு திருப்பு முனையாக இருப்பது எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை. இந்த ஆண்டு நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் கணக்குப் பேப்பருக்கு நேரமே போதாமல் தவித்தனர் மாணவர்கள். ஆங்கிலப் பேப்பரில் கவிதைப் பகுதி கடும் சோதனை! ஒரு குறிப்பிட்ட வார்த்தை கொடுத்து அதற்கு அர்த்தமுள்ள மாற்று வார்த்தையைஅடைப்பில் தருவது வழக்கம். ஐந்து வார்த்தை அடைப்பில் இருந்தால் ஒன்றுவது பொருந்தும். இந்த ஆண்டில் ஒரு கேள்விக்கு அடைப்பில் உள்ள எந்த வார்த்தையும் அர்த்தப் பொருத்தமில்லாமல் உள்ளது. ஏதோ மேலெழுந்த வாரியாக ஏற்பட்ட தவறு இது? இரண்டரை லட்சம் கேள்வித்தாள்களுக்கு ஆதாரமாய்க் கேள்வி தயாரிப்பவரா இவ்வளவு அலட்சியமாய் இருப்பது?

திருச்சி என். பாலசுப்ரமண்யன்
13 – 4 – 76

"நீராடிய நெருப்பு'' கட்டுரையில் ரா. வீழிநாதன் அவர்கள் 'பேய்க்கோபுரம்' என்று ஏன் வந்தது என்று தெரிந்து கொள்ள முடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதுபற்றிக் காஞ்சி புதுப் பெரியவர் ரேடியோவில், அருள்வாக்கில் கூறியது:

''....பல கோபுரங்களில் மேல் கோபுரம் ஒன்று. அந்த மேல் கோபுரம் நாளடைவில் மேக்கோபுரம் என்று ஆகித் தற்கால வழக்கில் பேய்க்கோபுரம் என ஆகிவிட்டது போலும்! பேய்க்கும் கோபுரத்துக்கும் சம்பந்தம் இல்லை.''

16–4–76
மதுரை வி. ராமசுப்பிரமணியம்

இதுவரை வெளிவராத அமரர் கல்கி அவர்களின் நாவலைப் படிக்கப் போகிறோம் என்றதுமே என் உள்ளம் சிலிர்த்தது. 'கல்கி'க்கே உரிய நகைச்சுவை நடை. இந்தக் கதையை வெளிக் கொணர்ந்து வாசகர்களுக்கு வழங்கிய திரு ராஜேந்திரன் அவர்களை என்ன பாராட்டினாலும் தகும்.

நெய்யூர் எம். ஜெயபாலன்

கல்கியின் கதைகளைக் கொட்டை எழுத்தில் படித்தால்தான் நிறைவாயிருக்கும்.... பொடி எழுத்தில் போடுகிறீர்களே!

திருச்சி – 12
17–4–76 பட்டம்மாள் பாலகிருஷ்ணன்

"சுதா காத்திருப்பாள்'' போன்ற ஒரு கதைக்காகக் காலம் காலமாகக் காத்திருக்கலாம். அக்கண்ணனுக்கு என் மனமார்ந்த பாராட்டு.

தருமபுரி
20–4–76 ஆர். கணேசன்

சித்திரைச் சிறப்பிதழில் மூன்று கதைகளுமே சிறப்புத்தான்! ஆனாலும்....நெஞ்சின் அடி மட்டத்தில் சிலிர்ப்பு உண்டாக்குவது என்னமோ சிறுகதை, 'சுதா காத்திருப்பாள்' என்பதுதான். இந்த அற்புதமான கதையைப் படித்து முடித்ததும் 'சபாஷ்' என்று நம்மையும் அறியாமல் வாய் சுதாவின் நெஞ்சுறுதியைப் பாராட்டுகிறது.

என்றாலும், ஓர் ஏக்கம் பிறக்கிறது.... இந்தக் கதைக்குச் 'சிறப்புச் சிறுகதை' என்ற முத்திரை ஏன் விழவில்லை ?

மானாமதுரை
18–4–76 சின்னை வெங்கட்ராமன்

(இன்றையக் கதை என்ற வரிசையில் முதல் கதையாக இடம் பெற்றதால் சிறப்புச் சிறுகதை என்ற முத்திரை விழவில்லையே தவிர அதன் தரத்தை உணர்ந்து சிறப்புச் சிறுகதைக்குரிய சன்மானத்தைத் திரு அக்கண்ணனுக்கு அனுப்பினோம். —ஆசிரியர்)

# ராணி துர்காவதி

கோவி.மணிசேகரன்

கோட்டைக்குள் குமுறலும் கூச்சலுமாக உலவினாள் வீராங்கனை துர்காவதி. என்ன கொடுமை செய்து விட்டோம்? அக்பரின் எல்லைக்குள் புகுந்து கொள்ளையடித்தோமா? கொடுமை நடத்தினோமா? கொழுந்து விட்டெரிகிற பழம் பகையைப் பாராட்டினோமா? எதற்காக இந்தப் படையெடுப்பு? ஏன் அசப்கான் முற்றுகையிட வேண்டும்?

ஓலை எழுதி யனுப்ப நேரமில்லை; அனுப்பினாலும் பாதையில்லை. கோட்டை முற்றுகையும் கொடும் யுத்தமும் மாதக் கணக்கில் நீண்டு வருகின்றனவே!

இரவு முழுவதும் அரசி துர்காவதிக்கு உறக்கம் கொள்ளவில்லை. தொலைவில், மகன் நாராயணன் 'நாராயணா'வென்று கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தான். சின்னஞ் சிறுவனை அவன் பொருட்டுத்தானே நாட்டின் ஆட்சியை மேற்கொண்டு நடத்தி வருவதே! அவன் மட்டும் இல்லையென்றால் சுமங்கலிக் கோலமுடன் உடன்கட்டை ஏறியிருப்பாளே! ஏன் இந்த விதவைக் கோலம்! எதற்காக இந்த வீராங்கனை கர்ஜனை செய்கிறாள்.

ஒரு சமயம்—

அக்பர் பாதுஷாவே இவளுடைய வீரத்தையும் வியக்கத்தக்க இளமை அழகையும் கேள்விப்பட்டு...

அது என் இப்போது? அப்போதும் கற்பில் துர்காவதி வீராங்கனையாகவே பதிலளித்தாள். அந்தப் பதில்தானே அக்பர் பாதுஷாவை அதிரச் செய்தது! அது முதற்கொண்டே காந்தவன விஷயத்தில் அவர் ஒதுங்கியே இருந்தார். நாடு பிடிக்கும் வெறியில் — சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்துகிற பேராசையில் பல நாடுகளை அவர் கவர்ந்தாலும் காந்தாவனம்விஷயத்தில் அவர் கவனமாகவே நடந்து கொண்டார். மேலும் அரசி துர்காவதியை எதிர்த்துப் போரிட்டவர்கள் இதுவரை வென்றது கிடையாது. காரணம் என்ன, அவள் வலுச் சண்டைக்குப் போக மாட்டாள்; வந்த சண்டையை விட மாட்டாள். அதற்காக அவளை ஆதரிக்கப் பலர் காத்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் ஏன்தான் தளபதி ஆசப்கான் படையெடுத்தானோ?

தலைக்கு முக்காட்டிட்டுக் கொண்டு வீரத் துணைவர்களுடன் படை முகாமைப் பார்வையிடப் புறப்பட்டாள் துர்காவதி. ஒற்றைத் தீப்பந்தம் மட்டும் அவளுக்கு வழிகாட்டியது.

அரசியார் வருகை கண்டு கோட்டைத் தலைமைத் தளபதி ஓடோடி வந்து எதிர்கொண்டு வரவேற்றான்.

''அவசரமிருந்து சொல்லியனுப்பி யிருந்தால் நானே வந்திருப்பேனே? அரசியாருக்கு ஏன் இந்தச் சிரமம்?'' தலைமைத் தளபதி பணிவாகச் சொன்னான்.

படைக் கூடாரங்களைப் பார்வையிட்ட துர்காவதி, ''தளபதி! முற்றுகை எத்தனை தினங்கள் நீடித்தாலும் கவலையில்லை. தாழ்த்தப்பட்ட ஓர் அரசு என்று பெயர் வாங்கியது வீரத்தால் முதலிடம் பெற்று விளங்குகிறது. இப்படையெடுப்பை முறியடித்தால் — அக்பரை வென்றுவிட்டோம் என்கிற புகழ் மேலோங்குமானால், வேறு சரித்திரமே தேவையில்லை. துர்காவதி நிம்மதியாகச் சாகலாம்'' என்றாள் கடுகடுத்த குரலுடன். தலைமைத் தளபதியும் தலை தாழ்த்தி, ''எப்படியும் வெற்றி முழக்க மிடுவேன் அரசியாரே!'' என்றான் பெருமிதத்துடன்.

எல்லைக்கப்பால்—

இதே நிலைதான் முகலாயத் தளபதி ஆசப்கான் கூடாரத்திலும். வார்த்தைகள் வலை பின்னிக் கொண்டிருந்தன.

ஆயினும் ஒரு திருத்தம்—

அங்கே துர்காவதியின் நாவசைந்து கொண்டிருந்தது. இங்கே அக்பரிடமிருந்து வந்த ஓலை பேயறைந்து கொண்டிருந்தது.

தம்மைக் கேட்காமல் காந்தாவனத்தின் மீது படையெடுக்கச் சொன்னது யார் என்று கடுமையாக ஆரம்பத்திலேயே ஆசப்கானைக் கண்டித்திருந்தார் பாதுஷா. அவர் மனம் கலங்கிப் போயிருந்தது. ஆனாலும் யுத்தத்தை நிறுத்துவது இனி முடியாத காரியம். முன் வைத்த கால் முன் வைத்த



படியே இருக்கட்டும். எந்த விதத்திலும் வெற்றி கண்டே தீரவேண்டும். காந்தாவன அரசி துர்காவதி போர்க் கலையில் வல்லவள். ஏதாவது பின்வாங்குகிற நிலை ஏற்பட்டால் உடன் தெரிவிக்க வேண்டும். கடைசி வீரன் உயிருடன் இருக்கிற வரை முற்றுகை நீடிக்கட்டும் என்று பயங்கரமான ஆணை பிறப்பித்

இருந்தார். தளபதி ஆசப்கானுக்கே அஸ்தியில் காய்ச்சல் கண்டது. பதவிக்காகவும் பட்டத்துக்காகவும் ஆசைப்பட்டான் ஆசப்கான். வடக்கில் இந்த ஒரு கோட்டை மட்டும் ஏன் தனித்து இயங்க வேண்டும் என்று பல கோட்டைகளை அடிமைப்படுத்தி வந்த ஆசப்கான் எண்ணினான்.

விடிந்ததும் யுத்தம் ஆரம்பமாயிற்று.

எத்தனை முயன்றும் அரசி துர்காவதியின் சௌரகா கோட்டையைப் பணிய வைக்க முடியவில்லை. மேலும் பல நாட்கள் நடந்த யுத்தத்தில் ஆசப்கான் எந்த நிலையிலும் பிடிபட்டு விடுவான் என்கிற நிலையே உருவாயிற்று. அக்பர் பாதுஷாவின் வரலாற்றில் துர்காவதிப் போர் தோல்வி காணக்கூடாது. செய்தி தில்லி நோக்கி விரைந்தது.

அக்பர் பாதுஷாவா இப்படி முடிவெடுப்பது?

வானில் ஊர்ந்து கொண்டிருந்த வெள்ளிய நிலவு வேதனையுடன் நகைப்பதுபோலிருந்தது. பாதுஷாவுக்கு வேறு வழியில்லை. மாவீரன், புகழ் வாய்ந்த அக்பர் பாதுஷா, கேவலம் ஒரு சிற்றரசியிடம் தோற்பதா? எப்போதோ அடக்கியிருக்க வேண்டிய சிற்றரசு அது! ஆனால் ஏதோ ஒரு காரணத்துக்காக விட்டு விட்டார். இப்போது அது பெரிய கோடரியாக வளர்ந்து கூர் நீட்டி மார்புக்குக் குறி வைக்கிறது. இனிமேல் சாம்ராஜ்யப் படைகளையே திரட்டிக் கொண்டு போய் வென்றாலும் ஒரு சிற்றரசுக்கு இத்தனை திரளான படையா என்ற கேள்வி முளைக்கும். இதை விடச் சிறந்தது ராஜதந்திரம்தானே!

அதுவரையும் பேசாமல் பின்னங்கை கட்டிக் கொண்டு உலவி வந்த அக்பர் பாதுஷா மெல்ல நின்று திரும்பினார். பிரதான மந்திரியான 'பக்ஷி' அமைதியுடன் என்ன பதில் வருகிறது என்று எதிர்பார்த்தார்.

''பக்ஷி! ராஜ தந்திரமான புதிய வழி என்ன? சொல்லுங்கள்'' என்றார் பாதுஷா.

யுத்தப் பிரதான மந்திரி நாயகம் பக்ஷி பதிலளித்தார். ''அரண்மனைக்குச் செல்கிற சுரங்கப் பாதையை அறிகிற மார்க்கம் தேட வேண்டும். அதற்கான கூலியைக் கொடுத்து விட்டால் காட்டிக் கொடுக்க ஆள் இருக்கிறது. தாங்கள் நேர்ப் பாதையை விரும்புகிறவர். உத்தரவிட்டால் நானே,...''

பாதுஷா குறுக்கிட்டார். ''தேவைதானா? அதுவும் ஒரு பெண்ணரசியிடம்?''

''அவசியம் தேவை. ஒரு பெண்ணிடம் தோல்வி கண்டோம் என்பதைவிட இந்த மார்க்கம் அவமானம் நிறைந்ததாகாது!''

அக்பர் பாதுஷாவுக்கு இது புறம்பானதாக இருந்தாலும் வேறு வழியில்லை. ஒப்புதலைத் தெரிவித்து விட்டார். ஆனால் அவர் உள்மனம்



## ஆதிசங்கருக்கு லக்ஷார்ச்சனை



ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள் அவர்களது ஆக்ஞையின் பேரில் ஏப்ரல் 30ந் தேதியிலிருந்து மே மாதம் 14ந் தேதி வரை ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் கோவிலில் வீற்றிருக்கும் ஆதி சங்கரருக்கு லக்ஷார்ச்சனையும் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவமும் நடைபெறவிருக்கிறது. ஆஸ்திக பக்தர்கள் இந்தப் பகவத் கைங்கரியத்தில் பங்கு கொண்டு ஆசார்யாளின் அனுக்கிரகத்துக்குப் பாத்திரர்களாகக் கோருகிறோம். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ சங்கர ஜெயந்தி லட்சார்ச்சனை கமிட்டி, 117, ராஜ வீதி, காஞ்சிபுரம்-2

ஒரு பிராயச்சித்தத்துக்கும் துணிந்து கொண்டிருந்தது.

ஒரு நாட்டின் வளர்ச்சி அங்கு வாழ்ந்து, புகழ் பரப்புகிற கைவினைக் கலைஞர்களால்; புகழ் மங்கிப் புழுதியாவது அங்கு வாழ்கிற கைக் கூலிகளால். சௌரகா கோட்டை கைக்கூலியால் கண்ணீர் வடிக்க ஆயத்தமானது.

காந்தாவனம் வீழ்ந்தது.

அசைக்க முடியாத அரசி துர்காவதியின் அரசை அக்பர் பாதுஷா குறுக்கு வழியில் அசைத்து வீழ்ச்சியடையச் செய்து விட்டார். எப்படி வீழ்ந்தால் என்ன? வெற்றி பெற்று விட்ட பெருமிதம் ஆசப்கானுக்கு.

சௌரகா கோட்டை உச்சியில் அக்பர் பாதுஷாவின் கொடி பறந்தது.

அரசி துர்காவதியின் சடலத்தை அக்பர் பாதுஷாவின் உத்தரவுப்படி சகல அரச மரியாதைகளுடன் புதைப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்ற வண்ணம் இருந்தன. அப்போது தில்லியிலிருந்து ஐந்து வீரர்கள் அவசரமாக வந்தனர். அவர்கள் பாதுஷாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான உடனுதவிகள்.

''என்ன?'' தளபதி ஆசப்கான் கம்பீரமாகவே கேட்டான்.

''ஆசப்! பாதுஷா ஒரு தங்கப் பேழை அனுப்பியிருக்கிறார். அதை அரசி துர்காவதியின் சடலத்துடன் புதைக்க வேண்டும் என்பது அவர் கட்டளை!'' என்றான் தலைமை தாங்கி வந்த உடனுதவி.

''பேழையில் என்ன இருக்கிறது?''

''எங்களுக்கே தெரியாது. அரக்கு (சீல்) வைக்கப்பட்டிருக்கிறது.''

''என்னிடம் கொடுத்து விட்டுச் செல்லலாம்.''

''நாங்கள் உடனுதவிகள். எங்களைப் பாதுஷா அனுப்பியிருக்கிறார் என்றால் அதனை நாங்கள் தாம் செய்ய வேண்டும்.''

''ஓகோ.''

ஆசப்கான் மேலும் பேசிக்கொள்ள முடியுமா? உடனுதவிகள் பெரும் தர்க்கவாதக் காரர்களாயிற்றே!

அரசி துர்காதேவியின் சடலம் அரச மரியாதைகளுடன் புதைக்கப்பட்டது. உடன் அந்தத் தங்கப் பேழையையும் ஒருவரும் அறியாமல் புதைக்கப்பட்டது. காந்தாவனத்தின் கதை முடிந்து விட்டது.

மறுநாள் ஆசப் கானின் படைகள் தில்லி நோக்கிப் புறப்படவிருந்தன.

அன்றிரவு —

ஆசப்கான் மனம் நிலை கொள்ளவில்லை. தங்கப் பேழையில் என்ன இருக்க முடியும்?

ஆசப்கானின் இரகசிய ஆட்கள் பிணந்தோண்டிகளாயினர். அவர்களிடம் கிடைத்த தங்கப் பேழையினுள் ஓர் ஓலை நறுக்கு. அதில்— ராணி துர்காவதிக்கு அக்பர் பாதுஷாவின் அஞ்சலி —

''இன்று வீரம் கண்டவள் நீ! முன்பு விவேகம் கண்டவள் நீ! என்வரை இந்தப் போரில் வெற்றி கண்டவளும் நீ! ஆசப்கானின் அவசர நிலை குறுக்கு வழியில் வீழ்த்த நேரிட்டது. அவனை நீ மன்னிப்பாயாக! உன் ஆன்மா சாந்தமடையட்டும்! அக்பர் பாதுஷாவின் வரலாற்றில் வெற்றியடைந்தவள் நீ!''

படிக்கப் படிக்க ஆசப்கானுடைய முகம் தீப்பந்தச் சிவப்பில் மேலும் சிவப்பேறியது. அதனை எடுத்து அருகில் வீரன் ஒருவன் கையில் எரிந்து கொண்டிருந்த அந்தத் தீப்பந்தத்தில் கொளுத்திச் சாம்பலாக்கினான். தங்கப் பேழையை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

தில்லி மாநகரமே தளபதி ஆசப்கானுடைய விஜயம் கண்டு ஆரவாரத்துடன் வரவேற்றது. அக்பர் பாதுஷாவைத் தவிர ஏனைய அனைவருமே தளபதியின் மாவீரக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்து வரவேற்றனர்.

ஒரு பொன்னான நாளில் அரசக் கொலு மண்டபம் கூடித் தளபதி ஆசப்கானுக்குக் கௌரவ விருது வழங்கியது. 'மான்சப்தார்' என்ற மாண்புமிகு பட்டத்தை ஏற்றான் தளபதி ஆசப்கான். ஆயினும் வழக்கமாக வழங்க வேண்டிய பரிசு அவனுக்கு வழங்கப் படவில்லை. மான்சப்தார் ஆசப்கான் மனம் அலைபடாத பாடு பட்டது. கடைசியில் வாய் திறந்தே கேட்டு விட்டான்:

''பாதுஷா! உங்கள் பொன்னான கையால் பரிசு பெற ஆசைப்படுகிறேன்.''

அக்பர் பாதுஷா அர்த்த புஷ்டியுடன் சிரித்தார். அவையின் அனைத்துச் செவிகளும் கூர் தீட்டிக் கவனித்தன. அக்பரின் கண்கள் மெல்ல அவையை வலம் வந்து, காற்றோடு குழைந்த வார்த்தைகளை—இரகசிய தோரணையில் அசைத்தது:

''ஆசப்! உன் வெற்றியை மெச்சி ராணி துர்காவதி தங்கப் பேழையையே பரிசாகக் கொடுத்து விட்டாளே .. அது போதாதா?''

அதிர்ந்து போனான் ஆசப்கான்.

ஆனால் அவை?

ஒன்றும் புரியாமல் ஒரு முகத்தை இன்னொரு முகம் சுருக்கங்கள் நெளிய மௌன பாஷையில் கேள்விக்குறியை எழுப்பிக் கொண்டன.

வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

# தலைவலி உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



## 2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO

Nicholas

மைக்ரோட்பைன் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.62 TM

பெரும்பாலான கேசச் சாயங்கள் மங்கிவிடக் காரணம்
அவை உரோமத்திற்கு வெறும் மேல் பூச்சுப் போடுகின்றன.

# ட்ரூ-டோன்

## ஒவ்வொரு உரோமத்தையும் ஊடுருவுகிறது, மேம்பட்ட நிரந்தர இயற்கைப் பொலிவை அளிக்கிறது உங்கள் கேசத்திற்கு







லிக்விட்

நீங்கள் தேர்ந்தெடுக்க:
ட்ரூ-டோன் லிக்விட் ஹேர் டையு
மற்றும் வடியாது படியும் கேசச்
சாயமான ட்ரூ-டோன் ஜெல்.

உங்கள் கேசத்தைப் பளபள
மென்மையோடு படிமானமாக
வைப்பதற்கென, இரண்டுமே
உள்ளமைப்பான ஹேர் கண்டிஷனர்
அடங்கியவை.




ஜெல்

> கேசத்திற்கு முதல் தடவையாக சாயமிட உத்தேசமா? எழுதிப்
> பெறுங்கள் இலவசக் கையேடு: "ஹேர் டையிங் எக்ஸ்பெரியன்ஸ்"

கருநிறத்திலும் கருஞ் சிவப்பிலும் கிடைக்கிறது.
ஆடவருக்கென விசேஷ பேக்.

everest/269/JKH-tm.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்:

**M/s. பாரி & கோ., லிமிடெட், சென்னை, கோயமுத்தூர், மதுரை, திருச்சி, செகந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம், கள்ளிக்கோட்டை, கொச்சின், பெங்களூர் மற்றும் மங்களூர்**

# டயபடீஸ் டாக்டர்:

# காயம் ஆறத் தாமதமானால்...



"காய்கறி நறுக்கிக் கொண்டிருந்தபோது கட்டை விரலில் காயம் பட்டது. பதினேழு நாட்களாகியும் ஆறவில்லை. இதற்கு முன்பு எத்தனையோ தடவை இப்படிக் காயம் பட்டிருக்கிறது. ஆனால், ஒரு வாரத்துக்குள் ஆறிவிடுவது வழக்கம். வீட்டில் ஆயின்ட்மென்ட் இருந்தது. அதைத் தடவியும் குணமாகவில்லை, டாக்டர்!'' என்றார் அந்தப் பெண்மணி.

''வயது என்ன ஆகிறது?''

''நாற்பத்து மூனு.''

''சிறுநீர் கழிப்பதில் மாறுதல் ஏதாவது உண்டா?''

''அடிக்கடி பாத்ரூமுக்குப் போகிறாள், டாக்டர்!'' என்றார் அவரது கணவர்.

''நரம்புகளில் எல்லாம் குடைகிற மாதிரி வலியும் இருக்கிறது. அசதியும் அதிகமாக இருக்கிறது. முன்பெல்லாம் வீட்டு வேலைகளை நானே செய்து வந்தேன். இப்போது ஒரு வருஷமாகவே, சமையல் செய்வதற்குள்ளேயே போதும் என்றாகிவிடுகிறது'' என்று தம் நிலைமையை விளக்ினார் அந்த அம்மாள்.

சிறுநீரில் சர்க்கரையின் விகிதம், இரத்தத்தில் சர்க்கரையின் விகிதம் இவற்றைப் பரிசோதனை செய்து கொண்டு 'ரிசல்ட்' கொண்டுவரச்சொன்னேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த அம்மாள் கொண்டு வந்த பரிசோதனையின் முடிவு என் அனுமானம் சரி என்பதை உறுதிப்படுத்தியது.

அந்தப் பெண்மணியிடம், ''உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. இனிமேல் உணவில் சர்க்கரையே சேர்த்துக் கொள்ளக் கூடாது'' என்றதும், அந்த அம்மாள், ''ஐயோ! நீரிழிவா?'' என்று பதறினார்.

''ஏன் பயப்படுகிறீர்கள்? அப்படி ஒன்றும் உயிருக்கு ஆபத்து உண்டாக்கக் கூடிய நோய் இல்லை இது. நான் கூறும் உணவுக் கட்டுப்பாட்டைச் சரிவர அனுசரித்து வந்தால் நீங்கள் திடமாக முழு ஆயுட் காலம் வாழலாம். மருந்து எழுதித் தருகிறேன். மாத்திரை மட்டும்தான். அதைத் தினமும் தவறாமல் சாப்பிட்டு வந்தால் போதும்.''

''இந்த நோய்க்குத் தினமும் இன்செக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டும் என்று சொல்வார்களே, டாக்டர்?''

''உங்கள் மனைவிக்கு ஊசி போடும் அளவுக்கு நோய் கடுமையாக இல்லை. ஆரம்ப நிலைதான். அவ்வப்போது சிறுநீர், இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்'' என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தேன். அந்த அம்மாளுக்கு ஒரே வாரத்தில் கட்டை விரல் காயம் ஆறிவிட்டது.

**''இது பரம்பரையாக வரக்கூடிய நோயா, டாக்டர்?''**

''வரக்கூடியதுதான். அத்தகையவர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும். பெற்றோருக்கு இல்லாவிடினும் மக்களுக்கு இந்நோய் பொதுவாக நாற்பது வயதுக்கு மேல் வரக்கூடும். உடல் அதிகம் பருப்பதும், மன உளைச்சல், பிரச்னைகள் (Stress) இவையும் இந்நோய் ஏற்படத் தூண்டுதலாக அமைகின்றன. தேகப் பயிற்சி செய்வதுநல்லது.''

**''இந் நோயின் விளைவாக, நோய் கண்டவர் எப்படியெல்லாம் பாதிக்கப்படலாம்?''**

''உடலில் ஏற்படும் ரணம், புண்கள் எளிதில் ஆறாது. ஒருவித மயக்கம் ஏற்படக் கூடும். நரம்புகள் பாதிக்கப்படலாம். இருதயம், கண்கள், மூளை தாக்கப்படலாம். இக்கோளாறுகள் எல்லாமே ஒரு நீரிழிவு நோயாளிக்கு வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

''இந்நோய் உணவுக் கட்டுப்பாடு, மருந்து மூலம் கட்டுக்குள் அடங்கும். ஆனால், நிரந்தரமாகக் குணப்படுத்திவிட முடியாது. எனவே, நோயாளி டாக்டர் வகுக்கும் உணவுக் கட்டுப்பாட்டினை என்றும் கைவிட்டு விடலாகாது.''

**''இந்த நோய் எதனால் ஏற்படுகிறது டாக்டர்?''**

''வயிற்றில் பான்கிரியாஸ் என்ற சுரப்பி இன்சுலின் தயாரிக்கிறது. இந்தச் சுரப்பி சக்தி இழந்து உடலில் இன்சுலின் தயாரிப்பு குறைந்தால் ரத்தத்தில் சர்க்கரை விகிதம் அதிகமாகும். இதைத்தான் டையாபெடிஸ் என்கிறோம்.''

**டாக்டர் ஸாம் ஜி. பி. மோஸஸ் கூறக் கேட்டு எழுதியவர்: ஆர். பி.**

---

நீரிழிவு நோய் வராமல் தடுக்கத் தேகப் பயிற்சி செய்வது நல்லது. எளிய செலவில்லாத தேகப்பயிற்சி அதிகாலையில் விரைவாக நடப்பதே.

"அண்ணா !"

ராகவன் பரீட்சை பேப்பர் திருத்திக் கொண்டிருந்தான். குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். அறைக் கதவைத் திறந்து பிரகாஷ் நின்றிருந்தான்.

"என்ன டாக்டர் பிரகாஷ் ?" என்றான் ராகவன் — தம்பி ஒரு டாக்டர் என்ற பெருமித உணர்வோடு.

"பேப்பர் திருத்துறீங்களா? கேரி ஆன்... பிறகு பேசலாம்..." என்றான் பிரகாஷ்.

"பரவாயில்லே... வா, உள்ளே...."

பிரகாஷ், ராகவனின் மேஜைகளுக்கு எதிரில் இருந்த ஈஸிசேரில் சாய்ந்தான்.

"ஒன்றுமில்லே....சூர்யாவினுடைய கல்யாண விஷயமாக உங்ககிட்டே பேசணும்."

சூர்யா அவர்களுடைய தங்கை. ஒரே தங்கை. அவளுடைய கல்யாண விஷயம். அதைவிடப் பரீட்சைப் பேப்பர் திருத்துவது அவ்வளவு முக்கியமில்லே.

ராகவன் அந்தப் பேப்பர்களைத் தள்ளி வைத்தான். மிகவும் அக்கறையோடு தம்பியின் முகத்தைப் பார்த்தான்.

"டாக்டர் ராஜேந்திரனை உங்களுக்குத் தெரியுமில்லையா ?"

"ஓ எஸ்... ஐ நோ ஹிம்...." என்றான் ராகவன்.

" ராஜேந்திரன் பிராமிஸிங் டாக்டர். எம். டி. செய்யப் போகிறான். அது முடிந்ததும் ஃபாரின் போக நினைத்திருக்கிறான். வெரி பிராமிஸிங்.... அவனுடைய ஃபாமிலியே டாக்டர்ஸ் ஃபாமிலி...."

"ஐ நோ.... அப்போதே நீ சொல்லியிருக்கிறாய்."

"டின்னருக்கு வந்திருந்தபோது சூர்யாவைப் பார்த்தான் ராஜேந்திரன். ஹி வாண்ட்ஸ் டு மேரி ஹெர்...."

ராகவன் பேசாமல் இருந்தான்.

"அவன் வீட்டில் பல இடங்களில் பெண் பார்க்கிறார்களாம். ஆனால் அவனுக்கு என்னவோ சூரியாவைப் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ஆசை. பத்து நாளைக்கு முன்பே என்னிடம் சொன்னான். நான் உங்களைக் கேட்டுச் சொல்வதாகச் சொன்னேன். நீங்கள் சம்மதித்தால் அவனுடைய பெற்றோர்களிடம் சொல்லிப் பெண் பார்க்க வரச் சொல்லலாம். வாட் டு யூ சே ?"

ராகவன் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது. "எனக்கென்னவோ இது மிகவும் நல்ல இடமாகத் தெரிகிறது. ராஜேந்திரனுக்குப் பெண் கொடுத்தால் எனக்கும் ஒரு நன்மை ஏற்படும்" என்றான் பிரகாஷ்.

பேச்சில் புதிய கோணம். தங்கைக்குக் கல்யாணம் நடந்தால் அண்ணனுக்கு என்ன நன்மை !

"நியலி? என்ன நன்மை?" என்று கேட்டான் ராகவன்.

"டோண்ட் மிஸ்டேக் மி. ராஜேந்திரன் தங்கை கமலா ஃபைனல் இயர் எம். பி.பி.எஸ் படிக்கிறாள். வி லவ் ஈச் அதர். ராஜேந்திரனுக்குப் பெண் கொடுத்தால், கமலாவை நான் கல்யாணம் செய்து கொள்வது சுலபம். மிகவும் வசதியான குடும்பம். ராஜேந்திரன் ஏற்பாடு செய்து விடுவான்."

ராகவனுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி — பெரிய குடும்பத்தில் பெண் கொடுத்துப் பெண் எடுப்பது பற்றி. அதே சமயம் மறு பக்கம் ஒரு குழப்பம். இரண்டு தினங்களுக்கு முன்பு — பிரகாஷுக்கு அடுத்த தம்பி — அதாவது மூன்றுமவன் — மூர்த்தி சொன்னதை ராகவன் இப்போது நினைத்துக் கொண்டான். அதனால் தான் குழப்பம். ஆனால் அந்தக் குழப்பத்தை ராகவன் பிரகாஷிடம் காட்டிக் கொள்ளவில்லை. தன் மகிழ்ச்சியை மட்டுமே வெளிப்படுத்தினான்.

"ஐ ஆம் வெரி ஹாப்பி பிரகாஷ். நல்ல அலையன்ஸ். எல்லாருமே உட்கார்ந்து பேசித் தீர்மானிக்கலாம்."

"தாங்க்யூ" என்று எழுந்தான் பிரகாஷ்.



# வர்க்கப் போராட்டம்...

— டி.கே.டி. துரைராஜன் —

ராகவன் ஒரு பள்ளியின் பிரின்ஸிபால்.

அவனுக்கு இப்போது நாற்பது வயது. இரண்டு வருஷங்களுக்கு முன்பே அவன் பிரின்ஸ்பால் ஆகிவிட்டான். அவ்வளவு இளம் வயதில் அந்த ஸ்தானத்துக்கு வர முடியுமா? அதுவும் அந்தப் பள்ளி வருஷந்தோறும் நல்ல ரிசல்ட் காண்பிக்கக் கூடிய ஒன்று. ராகவனைவிட வயதிலும் — அநுபவத்திலும் மூத்த பலர் அந்தப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் கிடைக்காத அந்தத் தலைமைப் பதவி ராகவனுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது?

ராகவனின் உண்மையான உழைப்புத்தான் அதற்குக் காரணம்.

'எனக்குத் திருமணம் வேண்டாம்' என்று சொல்லிவிட்டான் ராகவன். உறவினர்களும், நண்பர்களும் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் மறுத்துவிட்டான்.

இப்போது அந்தப் பள்ளியின் ஜீவன் ராகவன்தான்.

பிரகாஷ் சொன்ன செய்தி ராகவன் மனத்தைக் குழப்பிவிட்டது. யாரிடமாவது அதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று அவன் நினைத்தான். ஆனால் யாரிடம்....?

தாயாரிடம் பேசலாம். அதுதான் முறை. ஆனால் அவர்களால் எந்த முடிவுக்கும் வர முடியாது. எல்லாப் பொறுப்பையும் ராகவனிடமே விட்டு விடுவார்கள். தாயார் மட்டுமல்ல. தம்பிகளும் அப்படித்தான். எந்த விஷயத்திலும் அண்ணன் தீர்மானித்தால் சரி.

முதல் தம்பி பிரகாஷ் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று ராகவன் தீர்மானித்தான். அடுத்தவன் மூர்த்தியை இன்ஜினியராக்கியது ராகவனின் தீர்மானம்தான். மூன்றாவது தம்பி சுகுமார் ஓர் அட்வகேட். அதுவும் ராகவன் தேர்ந்தெடுத்த கேரியர்.

இப்படி அனைவரும் ராகவனின் யோசனைப்படி நடப்பவர்கள். அவர்களாக எந்த யோசனையும் சொல்ல மாட்டார்கள். தங்கள் ஆசைகளை வெளியிடுவதோடு சரி.

ராகவனுக்கு ராம்ஜியின் நினைவு வந்தது.

ராம்ஜி, அந்தப் பள்ளியில் கணக்கு ஆசிரியராகப் பணியாற்றுபவன். அவன் வேலைக்குச் சேர்ந்து ஓரிரு ஆண்டுகள்தான் ஆகின்றன. ராகவனைப் போலவேதான் ராம்ஜியும். தனது வேலையில் அவ்வளவு ஈடுபாடு. 'என்னைப் போலவே நீயும் மாறிவிடப் போகிறாய்' என்று ராம்ஜியை ராகவன் கேலி செய்ததும் உண்டு.


ராம்ஜிக்கு இருபத்தைந்து வயதோ— என்னவோ. ஆனாலும் நல்ல வினயம். விஷய ஞானம் உள்ளவன். பள்ளி நிர்வாகப் பிரச்னைகளிலும் சில சமயங்களில் அவனுடைய ஆலோசனைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான் ராகவன். மேலும் ராம்ஜி ஒரு குடும்ப நண்பன் மாதிரி.

சூர்யாவின் கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேச அவன்தான் சரியான ஆள்.

பள்ளிக்கூட விஷயமாக ஏதோ சில வற்றைப் பேசி விட்டு ராகவன் சொந்தப் பிரச்னைக்கு வந்தான்.

''ராம்ஜி! சூரியாவின் கல்யாண விஷயமாக உன்னிடம் பேச வேண்டும்.''

ராம்ஜியின் முகத்தில் புன்னகை அரும்பியது. ''ஹௌ இஸ் ஷி? பார்த்துப் பதினைந்து இருபது நாட்களாயிற்று. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று பார்க்க





"எமர்ஜென்ஸி பாருங்க...எங்கே...சமர்த்தா ஆபீஸ் கிளம்பணும். இந்தாங்க சாக்லேட்... !"

வந்தேனே... அப்போது பார்த்தது...." என்றான் ராம்ஜி.

பிரகாஷ் சொன்ன விவரத்தை ராகவன் சொன்னான். ராம்ஜி அதைத் தீர்க்கமாகக் கேட்ட பிறகு, "நல்ல அலையன்ஸ்" என்று சுருக்கமாகக் கூறினான்.

"நல்ல அலையன்ஸ்தான். ஆனால் வேறொரு பிரச்னை. சொல்லப் போனால் தமாஷான பிரச்னை...." என்றான் ராகவன். தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

"என்ன பிரச்னை ?"

" என்னுடைய இரண்டாவது தம்பி மூர்த்தி — இன்ஜினீயராக இருக்கிறானே—அவனுக்கு ஸ்டேட்ஸுக்குப் போக வேண்டும் என்பது லட்சியம். மூர்த்தி வேலை செய்யும் கம்பெனியில் சுந்தரம் என்றொருவன்—மூர்த்தியின் நண்பன் — இன்ஜினீயராக இருக்கிறான். சுந்தரத்தின் பெரியண்ணா ஒருவர் ஸ்டேட்ஸில் பெரிய கம்பெனியில் பணியாற்றுகிறார். அவர் நினைத்தால் மூர்த்திக்கு ஸ்டேட்ஸில் ஒரு நல்ல வேலைக்கு ஏற்பாடு செய்ய முடியும்."

"வெல் அண்ட் குட்... சுந்தரத்தின் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டியதுதானே !"

"பொறு. அந்தச் சுந்தரம், சூர்யாவை ஒரு நாள் பார்த்தானாம். அதாவது மூர்த்தியுடன் எங்கள் வீட்டுக்கு அவன் வந்த போது பார்த்திருக்கிறான். அவ்வளவுதான். ஹி ஹேஸ் ஃபாலன் இன் லவ் வித் சூர்யா.... பிரகாஷின் விருப்பத்துக்கு இணங்குவதா ? அல்லது மூர்த்தியின் கோரிக்கையை நிறைவேற்றுவதா? நீ ஒரு யோசனை சொல்லேன்" என்றான் ராகவன்.

"இந்தப் பிரச்னையில் நீங்கள் முதலிடம் தர வேண்டியது சூர்யாவின் எண்ணத்துக்குத் தான். இது அந்தப் பெண்ணின் வாழ்க்கைப் பிரச்னை. அவள்தான் தீர்மானிக்க வேண்டும்...." என்றான் ராம்ஜி திட்டவட்டமாக.

"நல்ல யோசனைதான்.... தாங்க்யூ.... ராம்ஜி...." என்று எழுந்தான் ராகவன்.

**சா**ப்பாடு நேரம் கடந்து விட்டிருந்தது. ராம்ஜியிடம் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

ராகவன் வீட்டுக்கு வந்தபோது குமார் மட்டுமே இருந்தான். அட்வகேட். கடைசித் தம்பி. மற்ற அனைவரும் மதிய உணவை முடித்துக் கொண்டு மாட்னி ஷோவுக்குப் போய் விட்டார்கள்.

"நீ ஏன் போகலே?" என்று கேட்டவாறு டைனிங் ஹாலுக்கு விரைந்தான் ராகவன்.

" உங்களிடம் தனியாகப் பேசணும். அது தான் போகலே..." என்று பின்தொடர்ந்து சென்றான் குமார்.

இருவரும் டைனிங் டேபிளில் எதிரெதிரே அமர்ந்து கொண்டார்கள். ஆயா பரிமாறத் தொடங்கினாள்.

"என்ன விஷயம் குமார் ?" என்று கேட்டான் ராகவன் சாதத்தை அளைந்தவாறு.

"எல்லாம் என்னுடைய புரொபேஷன் சம்பந்தமாகத்தான்... அட்வகேட் மகாதேவனை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். எவ்வளவோ பேர் அவரிடம் ஜூனியராவதற்கு முயற்சி பண்றாங்க. ஆனால் யாரையும் அவர் ஏத்துக்கல்லே. குறிப்பாக ஒரு நாலைந்து பேர். அவர்களும் நல்ல திறமைசாலிகள். அவர்களோடு என்னையும் ஜூனியராக வைத்துக் கொள்ளச் சம்மதித்திருக்கிறார்...."

" ரியலி? கங்கிராஜுலேஷன்ஸ்..உனக்கு எப்படி அவரைத் தெரியும்?"

"நேரடியாகத் தெரியாது. அவருடைய மகன் மூலமாகத்தான் இந்த ஏற்பாடு. அவன் பெயர் ரங்கநாத். என்கூட சட்டம் படிச்சான். நீங்களும் பார்த்திருக்கீங்க...."

"யாரு ?" என்று சில விநாடிகள் யோசித்தான் ராகவன். பிறகு, "ஆமாம். ஆமாம். ஒரு நாள் நாடகத்துக்குப் போயிருந்த பொழுது அறிமுகப்படுத்தி வச்சியே..." என்று நினைவுகூர்ந்தான்.

"ரங்கநாத் சூர்யாவைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புகிறான்...."

வாயருகே கொண்டு போன சாதத்தை நிறுத்திவிட்டான் ராகவன்.

ராகவன் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

**ஹா**லின் நடுவில் —

டபிள் செட் சோபாவின் ஓர் ஓரத்தில் சூர்யா அமர்ந்திருந்தாள் — தலை குனிந்தவாறு. அப்படியொன்றும் பிரமாதமான அழகியில்லை — அவளுக்கா இத்தனை போட்டி!

ஆனால் அழகு — கவர்ச்சி எல்லாம் அவரவர் டேஸ்ட்தானே !

சூர்யாவுக்கு அருகில் தாயார் — ஜானகி— அமர்ந்திருந்தாள். அந்த அன்னையின் முகத்தில் எல்லை காணாத பெருமிதம். இருக்காதா, பின்பு! ஒரே பெண். அவளுடைய கரம் பிடிக்கப் பெரிய பெரிய இடங்களிலிருந்தெல்லாம் போட்டி !

சோபாவின் பின்புறமாகச் சற்றுத் தள்ளித் தம்பியர் மூவரும் நின்றிருந்தார்கள். ஒருவன் மற்றவனுக்குத் தெரியாமல் ரகசியமாக வரன் பார்த்தது இப்போது எல்லாருக்கும் தெரிந்து விட்டது.

டாக்டர் — இன்ஜினீயர் — அட்வகேட்.



"இந்தாங்க கத்தரிக்காய் பஜ்ஜி."
"அட கஷ்டகாலமே! கத்தரிக்காய் மலிவா வித்தா இப்படித்தானா...?"

ராகவன் அங்குமிங்கும் சிறு நடை போட்டவாறு பேசினான் :

"உனக்காக மூன்று அண்ணன்மார்களும் மூன்று வரன் பார்த்திருக்கிறாங்க. ஆனால் நான்....?" என்று சில விநாடிகள் நிறுத்திய ராகவன், "அஃப்கோர்ஸ்... நானும் ஒரு மாப்பிள்ளையை மனசிலே நினைச்சிருக்கேன். விஞ்ஞானி டாக்டர் கோபால்...." என்றான்.

யாரும் அதை எதிர்பார்க்கவில்லை. சூர்யாவைத் தவிர மற்றவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். வெளிப்படையான வியப்பு !

"சூர்யா ! உன் முடிவு என்னம்மா ?"

சூர்யாவுக்கு வியர்க்கத் தொடங்கியது.

அவள் மெதுவாகத் தாயாரின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

"சொல்லும்மா... இவங்க முன்னால் சொல்றதுக்கு உனக்குப் பயமாக இருந்தால் என்னிடம் தனியாகச் சொல்லு..." என்றாள் ஜானகி.

"அண்ணா....! என்னுடைய முடிவைச் சொல்றேன்.... ஆனால் யாரும் தவறாக நினைக்கக் கூடாது...." என்றாள் சூர்யா.

"இல்லே... இல்லே.... பயப்படாமல் சொல்லு...." என்று ஒரே சமயத்தில் ஐந்து குரல்கள்.

"விஞ்ஞானி – டாக்டர் – இன்ஜினீயர் – லாயர்..... இவர்களில் ஒருத்திக்கு மனைவியாவதைவிட, எவ்வளவோ விஞ்ஞானிகளையும், டாக்டர்களையும், இன்ஜினீயர்களையும், வக்கீல்களையும் உருவாக்குகிற டீச்சர் வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மனைவியாவதைத்தான் நான் விரும்புகிறேன்...."

அனைவரும் திகைத்துப் போனார்கள். இல்லை; அது ஓர் அதிர்ச்சி.

"நீங்கள் கேட்டதால் என்னுடைய முடிவைச் சொன்னேன். அந்த டீச்சர் யார் என்றும் சொல்கிறேன். ராம்ஜிதான். பிற்காலத்தில் அவர் புகழ் வாய்ந்த ஒருத்தராக வராவிட்டாலும் நிச்சயம் ராகவன்னா மாதிரி ஓர் உண்மையான டீச்சராக வருவார். இல்லையா ராகவன்னா...?" என்று தலையை நிமிர்த்தி ராகவனைப் பார்த்தாள் சூர்யா.

ராகவன் செயலற்று நின்று விட்டான்.

சில விநாடிகள் கனத்த அமைதியில் கழிந்தன. பிறகு ஜானகி எழுந்தாள். தன் பிள்ளைகளைப் பார்த்தாள். சூர்யாவையும் பார்த்தாள். கடைசியில் கூறினாள் :

"அவள் முடிவைச் சொல்லச் சொன்னீங்க..... அவள் சொல்லிட்டா. மற்ற ஏற்பாடுகளைச் செய்யுங்க. ராம்ஜி நல்ல பையன்தான். இல்லியா ராகவா?"

ராகவன் பதில் பேசவில்லை.

அவன் சிந்தனை 'டீச்சர் வர்க்கம்' என்று சூர்யா சொன்ன அந்த வார்த்தையிலே பதிந்திருந்தது.

ஆம். அது ஒரு வர்க்கம்தான். பெரிய பெரிய பட்டம் பதவி பெற்ற வர்க்கங்களையெல்லாம் உருவாக்கி மேலே கொணர்ந்து ஒன்றோடொன்று போட்டியிட்டுப் போராட வைத்துவிட்டு, அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் எங்கோ ஆழத்தில் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் வர்க்கம் !



## ரசிக்கத்தக்க நடனம்

தமிழிசைச் சங்கம் முதல் தடவையாக அகில இந்திய நடன விழாவை ஏப்ரல் 10 லிருந்து 16ந் தேதி வரை அண்ணாமலை மன்றத்தில் நடத்தியது. பிர்ஜு மகராஜ் கதக்கும் சோனல் மான்சிங்கின் ஒடிஸியும், வேதாந்தம் சத்யநாராயண குழுவினரின் குச்சிப்புடி நடனமும் கேரளா கலா மண்டலத்தினரின் கதக்களியும் சிறப்பிடம் பெற்றிருந்தன. தமிழகத்தின் தலைசிறந்த நாட்டிய மணிகளோடு இளம் நாட்டியச் சிறுமிகளும் நடன விருந்தளித்தனர். இளம் நடனமணிகளுக்கான சிறப்புப் பரிசைப் புதுதில்லியைச் சேர்ந்த ரஸிகா கன்னா ஸ்ரீமதி பாலசரஸ்வதியிடமிருந்து பெற்றார். இவர் புதுதில்லி சர்வகலாசாலை பி. ஏ. ஆனர்ஸ் பட்டதாரி. மியூஸிக் அகாடமி பாலசரஸ்வதி பள்ளியில் ஆறு வருஷங்கள் முறையாக நடனம் பயின்றவர். பிறகு டில்லியில் லலிதா சாஸ்திரியிடம் கற்று அரங்கேற்றம் பெற்றாள். இந்திய சர்க்காரின் உதவித் தொகை பெற்று அடையாறு லக்ஷ்மணனிடம் மூன்று வருஷங்கள் பரத நாட்டியம் பயின்றார் குமாரி ரஸிகா. இந்த அளவுக்கு அனுபவம் பெற்றவர் இனி இளம் நடனமணி இல்லைதானே!

# சவாலைச் சந்தித்தேன்:

# சொந்தத்தில் ஒரு வீடு!

எங்களுக்குக் கோமளீசுவரன் பேட்டைப் பகுதியில் சொந்த வீடு இருந்தது. ஆனால் பல பொருளாதாரச் சிக்கல்களை முன்னிட்டு அந்த வீட்டை என் தகப்பனார் விற்றுவிட்டார். ஒரு வாடகை வீட்டுக்குக் குடி பெயர்ந்தோம்.

என் சகோதரன் கொஞ்சம் சித்த சுவாதீனமற்றவன். இரவு நேரங்களில் அவன் சற்றுத் தொல்லை கொடுப்பான், கத்துவான். நாங்கள் சகித்துக் கொண்டிருந்தோம்.



ஆனால் நாங்கள் குடியிருந்த வீட்டுக்கு மேற்பார்வைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த நபருக்குப் பொறுமையுமில்லை; இந்தக் கூச்சலைச் சகித்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியமும் இல்லை.

ஒருநாள் அவர் என்னிடம் வந்தார். "நங்கநல்லூரில் ஒரு நல்ல வீடு இருக்கிறது. வாருங்கள் காட்டுகிறேன். உங்கள் குடும்பத்துக்கு வசதியானது" என்றார். அவருடன் நங்கநல்லூருக்குக் கிளம்பினேன்.

வீடு என்னவோ சௌகரியமாக இருக்கும் போல் தோன்றியது. வாடகையும் நூறு ரூபாய்தான்.

வீட்டையெல்லாம் சுற்றிக் காட்டிய அந்த ஆசாமி கடைசியாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

"இந்த வீட்டுக்கு நீங்கள் வருவதானால் ஒரு நிபந்தனைக்கு ஒப்புக்கொள்ள வேண்டும். உங்க அண்ணனை இந்த வீட்டுக்கு அழைத்து வரக்கூடாது! புரியுதா?" என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரே ஆத்திரம். ஆனால் ஆத்திரத்தை ஒரு நிறுசாக அடக்கிக் கொண்டு "இதோ பாருங்கள்! எனக்கு இருக்காப் போல ஓர் அண்ணன் உங்களுக்கு இருந்தால் என்ன செய்வீங்க?" என்றேன்.

மனிதர் கொஞ்சம் கூடக் கூசாமல் பதில் சொன்னார்: "அப்படி ஓர் அண்ணன் இருந்தால் அவன் மென்னியை முறிச்சு வீட்டுத் தலையை முழுகுவேன்" என்றார்.

"அட பாவி!" என்று அலறிவிட்டேன். அந்தக் கணத்திலேயே என் மனத்தில் ஓர் உறுதி பிறந்தது. என்ன சொல்கிறோம் என்று யோசியாமலே "இந்தாய்யா! இப்பக் குடியிருக்கிற வீட்டை விட்டுக் கிளம்புவதாக இருந்தால் சொந்த வீட்டுக்குத்தான் போவேன்!" என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு அந்த மனிதனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வீட்டுக்குத் திரும்பினேன். பண வசதி இல்லை. ஏதோ வெறியில் சொல்லி விட்டேன்!

இரவு முழுவதும் இதே மன உளைச்சல். மறு நாள் காலை மன அமைதி தேடித் திருப்பதிக்குக் கிளம்பி விட்டேன். கூடச் சில நண்பர்களும் வந்தார்கள். பெருமாளைத் தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்த போது, பாரத நாட்டுப் பாங்கிகளில் பலவற்றைத் தேசிய மயமாக்கிவிட்டதாக வானொலியில் செய்தி ஒலி பரப்பிக் கொண்டிருந்தார்கள். இதைக் கேட்ட கூட வந்த நண்பர்களில் ஒருவர் அசரீரி போல், "வாமன் ராவ்! இனிமேல் நீர் கூட வீடு கட்டலாம் ஐயா! பாங்குகள் கடன் கொடுக்கும்!" என்று சொல்லி வைத்தார். என் உடல் புல்லரித்தது.

ஊர் திரும்பியவுடன், நண்பர்களிடம் புரட்டிய பணம் ஒரு 'பிளாட்'டை வாங்க உதவியது. வாங்கிய பிளாட்டை ரிஜிஸ்தர் செய்ய வேண்டுமே! அதற்குத் தவித்தபோது மற்றொரு நண்பர் வலிய வந்து முந்நூற்றி எண்பது ரூபாய் பதிவுக் கட்டணத்துக்காகக் கொடுத்து உதவினார். இன்னும் அவர் அந்தப் பணத்தைத் திருப்பி வாங்கிக் கொள்ளவில்லை! 'இருக்கட்டுமே! இருக்கட்டுமே!' என்று இன்னும் சொல்கிறார்.

பிளாட்டை வாங்கியவுடன் அதைக் காண்பித்து பாங்கியில் உடனடியாக இருபதினாயிரம் ரூபாய் கடனுதவி கிடைக்க என் நண்பர்களே உதவினார்கள்.

1970ம் ஆண்டு நவம்பர் ஐந்தாம் தேதியன்று கிரகப் பிரவேசம் நடத்தி எங்கள் குடும்பம் பம்மலுக்கு வந்து சேர்ந்தது. ஆம்! என் சகோதரன் உட்படத்தான்!


வீட்டுக்குப் பெயர் 'ஏழு மலை!' ஆங்கிலத்தில் 'செவன் ஹில்ஸ்'.

**திரு வாமன ராவ் கூறக் கேட்டு எழுதியவர்:**

**பட்டினத்தார்.**


ஜனதா மீல்ஸ் நானே 10 நிமிஷம் கழிச்சு வாங்க சார்!
மீரா கபே ஜனதா சாப்பாடு ரூ 1
இன்னும் நாழியாகும் அரை மணி கழிச்சு வரணும்!
மீராகபே ஜனதா சாப்பாடு ரூ 1
அரைமணின்னு கரெக்டா அரை மணிக்கு வந்து நிக்கறீரே! கொஞ்சம் முன்னே பின்னே ஆகலாம். அப்புறமா வாரும்... பார்க்கலாம்!
மீராகபே ஜனதா சாப்பாடு ரூ 1

# ஜனதா மீல்ஸ்


''என்ன பண்டாரம், ஜனதா மீல்ஸ் தானே?''
''பண்டாரம்னு இளப்பமா? ஒரு ஸ்பெஷல் மீல்ஸ் டிக்கட் கொடுங்க.''
''ஜனதா மீல்ஸ்காரங்க இலையை எல்லாம் அவங்களே எடுத்துப் போடணும்.''
''நல்ல வேளே! ஹோட்டல் பாத்திரத்துக்கும் பத்து தேய்க்கணும்னு சொல்லாம விட்டாரே!''
ஓட்டை டம்ளரைச் சர்வரிடம் கொடுத்தவாறு: ''அம்பி! இதை ஜனதா மீல்ஸ்காரருக்குக் கொடு.''
சுசி பவன்
ஹோட்டல் முதலாளி: கல்யாண விருந்துக்கு ஆர்டரா? சொல்லுங்க எழுதிக்கறேன். என்னென்ன அயிட்டங்கள், எத்தனை பேருக்கு?
வந்தவர்: வந்துங்க... 200 பேருக்கு ஜனதா மீல்ஸ்!

# பொன்னியின் புதல்வர்

சுந்தா



## 32. புகழும் பெருமையும்

**புகழெனில் யாதோ பொன்மலர் மணமோ**
**அகமகிழ் இசையோ ஆனந்தத் தேனோ**

கல்கிக்குப் பெருமை அளிப்பதான ஒரு நிகழ்ச்சி 1949 இறுதியில் திருநெல்வேலி ஊர் ஒன்றில் நடைபெற்றது; கல்கியின் படத்தை ரசிகமணி திறந்து வைத்த நிகழ்ச்சி அது. அதைப் பற்றி முன்கூட்டிக் கல்கி தகவல் அறிந்த போது, டி. கே. சி.க்கு விநயத்துடன் ஒரு கடிதம் எழுதினார் :

(சென்னை 7–12–49) சென்ற பதினைந்து வருஷ காலமாக நான் எழுதும் கட்டுரைகள் கதைகளைத் தாங்கள் வாரந்தோறும் திறந்து வைத்து விளக்குப் போட்டு விளக்கம் கொடுத்து வருகிறீர்கள். தாங்கள் எடுத்துச் சொன்ன பிறகு, நான் எழுதிய விஷயங்கள் எனக்கே அதிகத் தெளிவைக் கொடுத்து மகிழ்ச்சி அளித்திருக்கின்றன. இது உபசாரமாகக் கூறுவதல்ல.

இப்போது கடையநல்லூர் நண்பர்களின் விருப்பத்துக்கு இணங்க, அந்த ஊர்ப் பாரதியார் சங்கத்தில், ''கல்கி'' ஆசிரியர் படத்தைத் தாங்கள் திறந்து வைக்கப் போவதாக அறிகிறேன். நண்பர்களுடைய அபிமானத்தைப் பெரிதும் பாராட்டுகிறேன். ஆயினும் தங்களுக்கு இந்த வேலையைக் கொடுத்திருக்கக் கூடாது என்று கருதுகிறேன். வயதினாலும் தொண்டினாலும் பெரியவர்களாய் உள்ளவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதை (இது.)

'' மாங்காய் பால் உண்டு மலைமேல்
இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி ?''

என்ற பொருள் விளங்காத பாட்டு ஒன்று ஞாபகம் வருகிறது. அது போன்ற காரியந் தான் ''கல்கி'' ஆசிரியர் படத்தைத் திறந்து வைப்பதும். விளங்காத பாடல்களுக்குச் சில சமயம் தங்கள் மூலம் விளக்கம் ஏற்படுவது உண்டு. அது போலவே, அர்த்தம் இல்லாத உருவப் படத் திறப்புக்கும் தாங்கள் ஒருவேளை விளக்கம் கொடுத்துச் சிறக்கச் செய்யக் கூடும். ஆகையால், இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இதில் கல்கி குறிப்பிட்டுள்ள பாடல் குதம்பைச் சித்தரின் வாக்கு. இப்பாடலில் உள்ள மாங்காய்ப் பாலையும் தேங்காய்ப் பாலையும் குற்றாலச் சித்தர் விளக்கினாரோ என்னவோ! ஆனால், படத்தைத் திறந்து வைக்கையில், அதற்கு உரியவர் மீது புகழ்ச்சிப் பாலை சாரல் காலத்து அருவியெனப் பொழிந்திருப்பார். உரியவரை இதய பூர்வமாகப் புகழ்வது, அவருடைய ஆனந்தத் தத்துவத்தின் அம்சம்.


படத் திறப்பு சமயத்தில், கல்கியின் ''மோகினித் தீவு'' அவருடைய பத்திரிகையில் தொடராக வந்து கொண்டிருந்தது. அதன் முதல் அத்தியாயத்தை நவம்பர் 27ம் தேதிய இதழில் படித்த உடனேயே, அதைப் பாராட்டிக் கல்கிக்கு டி. கே. சி. கடிதம் எழுதினார் :

(குற்றாலம் 1–12–49) பள்ளிப் பையனாக இருந்த போது, ஜியாகிரபி மேல் எனக்கு ஒரு பிரியம். ஏதாவது மலை, நதி, புல்வெளி, காடு என்று வர வேண்டியது; அவ்வளவுதான். அந்தப் பிரதேசங்களுக்கு அப்படியே போய்விடுவேன். வாத்தியார், வகுப்பு,



✖ இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் 'கலா ரசிக சிகாமணி' பட்டத்தைக் கல்கி பெறக் காரணமாயிருந்த செயலாளர்கள் நா. ராமச்சந்திரன், எஸ். வி. வேணுகோபால்.









பினாக்போர்டு, வார்னிஷ் மணக்கும் மாப்பு, பிரம்பு எல்லாம் மாயமாய் மறைந்துவிடும். அந்த மாதிரி கருடவாகனம் ஏறிச்சென்ற எனக்கு மோகினித் தீவு மிக உவந்ததாய் இருக்கிறது. அங்கேயே போய்விட்டேன். மலை என்ன, பகைமை என்ன, சிற்ப மலைகள் என்ன — எல்லாமாகச் சேர்ந்து நிவாந்தரத்துக்கே தீர்ப்புக் கொடுத்துவிட்டது.

களத்தையே இவ்வளவு அழகாகச் சிருஷ்டி செய்திருக்கிறது. இனிமேல் வருவார்கள் பாத்திரங்கள்! கட்டடங்களும் ஜோராய் வரும்!

நல்ல விருந்து தமிழனுக்கு....

என்னுடைய தேக ஆரோக்கியம் கொஞ்சம் கடிகாரப் பெண்டுலம் மாதிரிப் பத்து நாட்களாக வம்பு ஒன்றும் பண்ணாமல் அடக்க ஒடுக்கமாய் இருந்தது. நேற்றுக் கொஞ்சம் சேஷ்டை பண்ண ஆரம்பித்தது. இன்று சரியாய் இருக்கிறது. இன்ஸுலின் போடாமலே தட்டிக் கொடுத்துச் சரி பண்ணலாம் என்று எண்ணுகிறேன்.

சற்றே உடல்நிலை இருந்திய வேளை பார்த்து நண்பருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதிப் போட்டுவிட்டார் குற்றாலத் தமிழ் வள்ளல். இருந்திராவிட்டாலும், தாமே பேனாப் பிடித்து எழுத முடிந்திராவிட்டாலும் பேரன் நடராஜனைக் கொண்டு எழுதச் சொல்லியிருப்பார்; அப்படியே தம் இறுதி நாட்களில் செய்தார். 1934 மத்தியில் ''ஓ, மாம்பழமே !'' கட்டுரையைப் பற்றி கல்கிக்கு எழுதியது அவருடைய முதல் பாராட்டுக் கடிதம். அது முதல் சுமார் இருபது வருட காலம், அவருடைய வாழ்நாளின் இறுதி வரை, அவருடைய புகழ் அஞ்சல்கள் இடையறாமல் கல்கிக்கு வந்து கொண்டேயிருந்தன. அவற்றை எப்படி எண்ணி முடியாதோ, அப்படியே அவற்றினால் கல்கி அடைந்த மகிழ்ச்சியை அளவிடவும் முடியாது.

புகழ்ச்சியானது எப்படி உவகையுடன் ஊக்கத்தையும் ஊட்டவல்லது என்பதை, ஒரு கதையுடன் இணைத்துச் சொல்லியிருக்கிறார் கல்கி :

வீரர், கலைஞர், எழுத்தாளர் ஆகியவர்களை அவ்வப்போது உற்சாகப்படுத்த யாராவது வேண்டும். வீரத்தையும் கலைத் திறனையும் இலக்கிய ஆற்றலையும் உற்சாகப்படுத்துவதன் மூலம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கலாம். இதற்குச் சிறந்த உதாரணம் இராமாயணத்தில் இருக்கிறது. இலங்கைக்குப் போய்ச் சீதையைக் காணச் சமுத்திரத்தைத் தாண்டியாக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டபோது, பல வான

* டப்பா சங்கீதத்தைக் கிண்டல் செய்து கல்கியில் வெளிவந்த கார்ட்டூன். திரு சாம்நிதி (ராகு) வரைந்தது.





* கர்நாடக சங்கீதத்தின் உயர்வுக்கும் பிராபல்யத்துக்கும் பெரிதும் பாடுபட்டார் கல்கி. தமிழிசைச் சங்கத்தில் திரு ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும், திரு தி. சு. அவிநாசிலிங்கமும் அமர்ந்திருக்கக் கல்கி பேசுகிறார். பெரம்பூர் சங்கீத சபாவில் திரு பி. வி. ராஜமன்னார் அருகே அமர்ந்திருக்கக் கல்கி பேசுகிறார்.

## சோபித்தவர் !



சோபர்ஸ் கிரிக்கெட் விளையாட்டிலிருந்து விலகும் போது கூறியது: ''மிகப் பிரமாதமாக விளையாடும் நீங்கள் ஏன் இப்போது விலக வேண்டும்?'' என்று பலர் கேட்கிறார்கள். இவ்வாறு கேட்கும்போதே நான் விலகி விடுவதுதான் மரியாதை, கௌரவம்! 'போகிறானா, இல்லையா' என்று விரட்டுமளவுக்கு வைத்துக் கொள்ளக் கூடாது, பாருங்கள்! —சாமி

---

ரங்கள் தத்தம் ஆற்றலைப்பற்றிப் பேசினார்கள். ஆனால் அனுமாரோ அடக்கத்துடன் சும்மா இருந்தார். அவருடைய சக்தியை நன்கு உணர்ந்திருந்த ஜாம்பவான் அப்போது முன் வந்து, அனுமார் எத்தகைய பேராற்றல் படைத்தவர் என்பதை எடுத்துச் சொன்னார். சொல்லச் சொல்ல அனுமாருக்கு உற்சாகம் வளர்ந்தது. அவருடைய உருவமும் வளர்ந்து வந்து விசுவரூபம் ஆயிற்று. அவ்வளவுதான். கடலை எளிதில் கடந்தார். சீதையைச் சந்தித்துப் பேசியதோடல்லாமல், இலங்கையையும் இராவணாதிகளின் உள்ளத்தையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டுத் திரும்பினார்.

இப்படி உற்சாகப்படுத்துவது வீரக் கலைக்கு வேண்டியிருப்பது போல் எழுத்துக் கலைக்கும் வேண்டியிருக்கிறது. உண்மையான எழுத்துத் திறன் இருந்தால், உற்சாகப்படுத்துவதனால் அது சுடர்விட்டுப் பிரகாசிக்கும். வித்துவான்களும் புலவர்களும் கவிஞர்களும் இராஜ சபைகளைத் தேடிச் சென்றது பணச் சன்மானத்தை மட்டும் கருதியல்ல. பணத்தைத் திருணமாகக் கருதிய புலவர்களும் இராஜ சபைகளுக்குச் சென்றார்கள். சன்மானத்தைக் காட்டிலும் சபையின் பாராட்டுதலை முன் விட்டே அவர்கள் சென்றார்கள்.

இந்த வரிகள், வ. ரா. மணி மலரில் கல்கி எழுதிய கட்டுரை ஒன்றில் உள்ளவை.

அந்த மலரின் நாயகருக்கு மணி விழாக் கொண்டாடுவதில் எப்படிக் கல்கி ஈடுபட்டிருந்தார் என்பதை ஏற்கனவே அறிவோம்; இன்னும் சிலருக்கான புகழ் விழாக்களையும் முன் நின்றே துணை நின்றே அவர் நடத்தி வைத்ததையும் அறிவோம்.

அப்படிப் பிறரின் புகழைக் கொண்டாடிய கல்கிக்கு, சென்னையில் பெரிதாக ஒரு பாராட்டு விழா நடத்த வேண்டும் என, ஆக்கூர் அனந்தாச்சாரி ஆசைப்பட்டு அதற்காக ஆயத்தம் செய்தார் என்பது, கல்கிக்கு அஞ்சலியாக, 11–12–54 தேதியில் அவர் வெளியிட்ட பாரதியார் சங்கப் பிரசுரம் ஒன்றிலிருந்து தெரிகிறது :

இந்த என் அபிப்பிராயத்தை ஒரு சில முக்கியமான, சிரத்தையுள்ள நண்பர்களிடம் அந்தரங்கமாக வெளியிட்டேன். பெரியோர்கள் ஜீவிய காலத்தில் கௌரவிக்கப் படுவதில்லை என்கிற அவச் சொல்லை அணுக விடாமல் தடுக்கப் பெரு முயற்சி செய்தோம். கல்கி அவர்களைத் தக்க முறையில், தமிழ் நாடு என்றும் கண்டிராத முறையில், கௌரவிக்க ஏற்பாடுகள் செய்வதில் முனைந்து நின்றோம். ஆனால் அந்த எண்ணம் கைகூடாமலே போய் விட்டது..... இதை விதியின் செயல் என்று சொல்லாமல் வேறென்னவென்று சொல்வது? இதுவே தொன்றுதொட்டு நமக்குக் கிடைத்து வரும் சாபக்கேடு. சாபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இறைவன் நமக்குச் சந்தர்ப்பம் அளிக்காமல், நம் மீது என்றும் தீராத பழியைச் சுமத்தத் திருவுள்ளம்கொண்டான் போலும் !

ஆசையுடன் தாம் மேற்கொண்ட முயற்சி நிறைவேறுவதற்குமுன் கல்கி காலமாகி விட்டாரே என்ற துயரத்தில் எழுந்த சொற்கள் இவை. ஆக்கூர் அனந்தாச்சாரி திட்டமிட்டபடி, கல்கிக்குப் புகழ்க் கொண்டாட்டம் ஒன்று சென்னையில் நடைபெறவில்லையாயினும், வேறு ஊர்களில் முன்பே நடந்திருக்கிறது என்று தெரிகிறது. டி.கே.சி., பகீரதனுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து, இரண்டு ஊர்களில் நடந்த கொண்டாட்டம் பற்றிய விவரம் :


திருநெல்வேலியில் கல்கிக்கு ஒரு பாராட்டு விழா நடந்தது. நான் தலைமை வகித்தேன். திடீரென்று ஒரு நாள் காலையில் கல்கி வந்திருக்கிறார். அவரைப் பாராட்ட வேண்டும் என்று தீர்மானம் செய்து பாராட்டுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். போதிய அவகாசம் இல்லாமலிருந்தும் கூட்டம் அமோகமாகச் சேர்ந்துவிட்டது. வராந்தாவிலும் கைப்பிடிச் சுவர் மேலும் ஒரே நெருக்கடி.....

வராந்தாவில் பிரவேசிக்கவே இடம் இல்லை. அதனால் வெளியே நின்றவர்கள் அங்கேயே நிற்கும்படி ஆயிற்று. பிறகு வந்தவர்களோ ஏமாற்றத்தோடும் எரிச்சலோடும் வீட்டை நோக்கிச் செல்ல நேர்ந்தது.

கல்கி என்றால் திருநெல்வேலிவாசிகளுக்கு ஒரு தத்துவம்; ஓர் அற்புதம். அந்தத் தத்துவத்தை, அற்புதத்தை நேரில் பார்க்க வேண்டும் என்று ஒரே பேராசை ! அந்த ஆசை அன்று ஓரளவுதான் பூர்த்தி ஆயிற்று.

வாழ்த்துக்களுக்கு அன்று கல்கி பதில் சொன்னது அற்புதமாக இருந்தது. அன்றைய விழாவும், அடுத்த நாள் கல்கி பேசின கூட்டமும், திருச்செந்தூரில் அப்போது நடை

# வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை கால்ஷியம்-ஸாண்டோஸ்®




கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புகளிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர் கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.

வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் நலமுள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே, பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்-ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும், வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

**கால்ஷியம்-ஸாண்டோஸ்®**

**வில்லைகள் தினமும் தேவை வெருக்கும்**

dCA/CS/151 TAM.



திருமலை, திருப்பதி தேவஸ்தானம் வேத பண்டிதர் ஸ்ரீ பி. வி. அனந்தசயனம் அய்யங்கார் (சுப்ரபாதம்) - அவர்கள் குமாரத்தி சௌ. பத்மஜாவுக்கும், பொய்கைப்பாக்கம், கந்தாடை ஸ்ரீ உ. வே. ரங்கநாதச்சாரியார் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி நரசிம்மனுக்கும் 12-4-76ல் திருமணம் திருப்பதியில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !











RAE

பெற்ற மாசித் திருவிழாவுக்குப் போட்டி மாதிரி அமைந்துவிட்டது என்றே சொல்ல லாம்.

ஃ ஃ ஃ

எட்டயபுரத்தில் கல்கி அவர்களுக்கு ஒரு வரவேற்பு நடந்தது. பாரதியாரே வேறு அவ தாரம் எடுத்துக் காட்சி அளித்ததாக எட்டய புரம் வாசிகளுக்கு எண்ணம். தங்கள் ஊருக்கு அவரால் ரூபாய் நாற்பத்திரண்டா யிரம் (பாரதி மண்டபத்துக்கெனக்) கிடைத்து விட்டதாலும் ஊரின் புகழ் காஷ்மீரம் வரை எட்டிவிட்டது என்றும், என்றுமில்லாத சந் தோஷம். மதுரை, திண்டுக்கல், இரண்டு இடத்திலும் உள்ள ரோஜாப் பூ மாலைகள் அத்தனையும் எட்டயபுரத்துக்கு வந்து விட்டன. தெருக்களில் எல்லாம் கொட்ட கைகள், — சிம்மாசனங்கள்.

அந்தச் சிம்மாசனங்களில் கல்கியை உட் கார வைத்து மாலைகளைப் போட்டார்கள். சில தெருக்களில் கருணை உள்ளவர்களும் இருந்தார்கள். அவர்கள் கல்கியைக் காரில் வைத்தே மாலைக்குமேல் மாலையாக தோளின் மேல் குவித்தார்கள். அதனால் கல்கியை மகா ஜனங்கள் பார்க்க முடியாது போயிற்று. ஆனு லும் கல்கி வந்திருக்கிறார் என்பது எல்லாருக் கும் தெரியும். ஆகவே, ''கல்கி ஆசிரியருக்கு ஜே !'' என்ற கோஷம் எங்கும் ஒலித்தது.


(சத்ய கங்கை 15-12-68 இதழிலிருந்து)

இம்மாதிரியே கல்கியின் வாழ் நாளில் கடைசிப் பத்தாண்டுகளில், சிறி தும் பெரிதுமாய், பாராட்டு வரவேற்பு களும், புகழ் மணக் கொண்டாட்டங் களும் அங்கங்கே நடந்து கொண்டே இருந்தன.

புகழ்ச்சிக்கு உரியவர் பொறாமைக் கும், அதன் காரணமாய் இகழ்ச்சிக்கும் இலக்காவது இயற்கையே. அப்படியே கல்கியும் இலக்கானார். அடக்கமான பெருமையுடன் புகழ்ச்சியை ஏற்றுக் கொண்டார்; அசாதாரணப் பொறுமை யுடன் இகழ்ச்சியைத் தாங்கிக் கொண் டார். களிப்பும் வியப்பும் கொண்ட எண்ணிலா வாசகர்கள், அன்பு கமழும் இதய மலர்களைத் தொடுத்து மானசீக மாய்ச் சூட்டிய புகழ் மாலைகளையே உண் மையான பாராட்டாய்க் கருதினார்.

மொத்தத்தில், உரிய புகழையும், ஓரளவு பொருளையும் எழுத்தாளர் என்ற முறையில் தாம் ஈட்டியது குறித்து, கல்கி மன நிறைவு கொண் டிருந்தார். கடைசி ஆண்டில் ஒரு சமயம், பெரியசாமித் தூரனுடன் அவர் கொங்கு நாட்டில் பயணம் செய்கையில் தமது மன நிறைவை அவருடன் பகிர்ந்து கொண்டாராம். அத்துடன், மற்ற எழுத்தாளர்களும் புகழும் பொருளும் அடைவதற்குத் தம்மாலான உதவியை மேலும் செய்யப் போவதா யும் தெரிவித்தாராம். அவ்வாறு அவர் தெரிவித்த இடம், தூரனுக்கு வேண் டியவர்களான கே. எஸ். பெரியசாமி— பழநிசாமி சகோதரர்களின் பெரிய தோப்பு. அந்தப் பசுமையான தோப்பையும் அதன் மத்தியில் அமைந்த வசதியான விடுதியையும் பார்த்து ரசித்த கல்கி, ''இலக்கியப் படைப்புக்கு எவ்வளவு வாய்ப்பான இடம் இது!'' என்று வியந்தார். ''இதை ஓர் எழுத்தாளர் முகாமாய் வைத்துக் கொள்ளலாம் போல் இருக் கிறதே !'' என்றார். அதைக் கேட்ட அந்தச் சகோதரர்கள், அப்படியே தாராளமாய் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, அங்கே தங்க வரும் எழுத்தாளர்களுக்கு வேண்டிய வசதி களைச் செய்து கொடுப்பதாய் வாக்களித் தார்களாம்.

இதைத் தெரிவித்த தூரன், ஏற் கனவே தமிழ் எழுத்தாளர்களின் நல னில், அவர்களுடைய சங்கத்தின் தலை வர் என்ற முறையில் கல்கி காட்டிய அக்கறையை எடுத்துச் சொன்னார்.



## நெஞ்சை விட்டு நீங்காத காட்சி



திரு 'சோ' நடித்து, டைரக்ட் செய்திருக்கும் "உண்மையே உன் விலை என்ன" என்னும் திரைப் படத்தில் உங்கள் நெஞ்சை விட்டு நீங்காத காட்சி எது என்று குறிப்பிட்டுச் சுருக்கமாக ஒரு தபால் கார்டில் எழுதி யனுப்பவும். 13 - 5 - 76 தேதிக்குள் கிடைக்கும் கடிதங்களை மட்டுமே பரிசீலிப்போம். எந்தக் காட்சி அதிகமான வாசகர்கள் மனத்தைக் கவர்ந்துள்ளதோ அந்தக் காட்சி பற்றி டைரக்டர் 'சோ' தம் அனுபவங்களைக் கல்கி நேயர்களுடன் பகிர்ந்து கொள்வார். உங்கள் மனம் கவர்ந்த காட்சி பற்றி டைரக்டரை என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்பதையும் தெரியப்படுத்தலாம்.

அந்த அக்கறையினால் கல்கி செய்த நற்பணிகளை முன்பே அறிந்து கொண்டோம்.

இலக்கியக் கலைஞர்களுக்குப் பெருமை அளிப்பதாய் அமைந்த இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்ததற்குச் சில வாரங்களுக்கு முன்னால், இசைத் துறை பெருமைகள் இரண்டைக் கல்கி அடைந்தார் — இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் இருபத்தோராவது சங்கீத மகாநாட்டுக்குத் தலைமை வகித்தார். அத்துடன், ''கலா ரசிக சிகாமணி'' என்ற பட்டத்தையும் ஏற்றார்.

கல்கிக்கு முற்றிலும் புதிதான அந்தப் பெருமைகளை அவருக்கு அளிக்கக் காரணமாயிருந்து திட்டமிட்டு நிறைவேற்றியவர்கள் அச் சங்கத்தின் செயலாளர்களான எஸ். வி. வேணுகோபாலனும், நா. ராமச்சந்திரனும். அவர்கள் கல்கியின் இலக்கிய சாதனைகளையும் இசைத் துறைப் பணிகளையும் ஒருங்கே போற்றிக் கொண்டிருந்தவர்கள். இலக்கிய சாதனைகளுக்காகப் பல பெருமைகளை அடைந்திருந்த கல்கி, கர்நாடக சங்கீத ரசிகரா யிருந்து, விமர்சகராகவும், தரக் காப்பாளராகவும் ஆற்றிய பணிகளுக்காகப் போதிய அங்கீகாரம் பெறவில்லை என்பதாக அவர்கள் கருதி, அதன் பேரில் வகுத்த திட்டம் அது. அந்தக் கௌரவத்தை ஏற்பதற்கு அகமகிழ்ச்சியுடன் கல்கி இசைந்தார் என்று ராமச்சந்திரன் சொல்கிறார்.

சங்கீத மகாநாட்டின் நிறைவு நாளாகிய (1954) ஜனவரி 3ந் தேதியன்று, பாரதக் குடியரசின் உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், தமது வாழ்த்துடன் விருதுப் பத்திரத்தைக் கல்கிக்கு வழங்கினார்.

கோகலே மண்டபத்தில் நடைபெற்ற அம் மகாநாட்டை, டிஸம்பர் 23ல், சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா தொடக்கி வைத்தார். அவருடைய ஆரம்ப உரையை அடுத்துக் கல்கியின் தலைமை உரை நிகழ்ந்தது.

அதிலிருந்து சிறிதொரு பகுதி:

மற்றக் கலைகளைக் காட்டிலும் சங்கீதக் கலையிலேதான் பழைமையின் சிறப்பை நாம் நன்கு காண முடிகிறது. சங்கீதத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு பழைமையான முறைகளை நாம் கடைப்பிடிக்கிறோமோ, அவ்வளவுக்குச் சங்கீதத்தின் தரம் உயர்ந்து நீடித்து நிற்கும். பாரத நாட்டின் பழைமையான சங்கீதக் கலையை — ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றி வளர்ந்து வந்த கலையை — தென்னாட்டிலே அதன் தூய்மை கெடாமல் பாதுகாத்து வந்திருக்கிறோம். இது நாம் பெருமைப்படக் கூடிய காரியம். வடநாட்டில் வழங்கும் ஹிந்துஸ்தானி சங்கீத முறையில் பாரஸீக முறை கலந்துவிட்டது என்றும், தென்னாட்டில் வழங்கும் கர்நாடக சங்கீதமே தூய்மை கெடாத பாரதீய சங்கீதம் என்றும், வடநாட்டு சங்கீத வித்துவான்களும் ரஸிகர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். அதற்காகத் தென்னாட்டாரிடம் நன்றி செலுத்துகிறார்கள்.

(சுதேசமித்திரன் 24-12-53)

அம்மகாநாட்டின் இசை விழாவில் எம். எல். வசந்த குமாரியின் கச்சேரி முதல் நிகழ்ச்சியாய் இருந்தது. தாம் தலைமை வகித்த காரணத்தால் அந்தக் கச்சேரியைப் பற்றி கல்கி விமரிசனம் ஏதும் எழுதவில்லை. ஆனால் முன்பு ஒரு சமயம் அவருடைய கச்சேரியை விமரிசனம் செய்கையில் அதன் மற்ற அம்சங்களைப் பாராட்டிவிட்டு, கர்நாடக சங்கீதத்தைத் தூய்மையான வண்ணத்துடன் இசைப்பவர்களில் வசந்தகுமாரி ஒருவர் எனச் சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தார்.

''கர்நாடகம்'' என்ற புனைபெயரைப் பூண்ட நாள் முதல் சுமார் இருபது ஆண்டுகாலம் தூய கர்நாடக

இசையைக் கல்கி போற்றி வந்தார். தென்னிந்தியாவின் தனிச் செல்வமான அற்புதத் தங்கக் கலை என்றும், பக்த இசைமணிகள், நாதப் பிரம்மமயமாகி உபாசனை செய்த தெய்விகக் கலை என்றும் அதை வர்ணித்து வந்தார்.

இந்த அழகிய கலை அழியாக் கலை என்பதில் ஐயம் இல்லை. ஆயினும் இதன் இனிய ஆதிக்கத்துக்குச் சோதனையாயும், இதனைப் போற்றிக் கொண்டாடுவோருக்கு வேதனையாயும் சினிமா இசை வந்து பரவியுள்ளது. இது பரவத் தொடங்கிய சமயத்தில், சாதகமாயும், பாதகமாயும் கருத்துக்களைத் தூண்டிவிட்டு, மிக்க பரபரப்பை ஊட்டிய கட்டுரை ஒன்றைக் கல்கி எழுதினார். அதில் அவர், ஆனைப்பட்ட லதா மங்கேஷ்கரின் பாட்டுக்களையே பெரும் போடாகத் தாக்கினார். மட்டமான திரைப் பாட்டுக்களை யெல்லாம் ''டப்பா சங்கீதம்'' எனக் குறிப்பிட்டுக் கோபத்தையும் வேதனையையும் கொட்டினார்:

நாளது 1950–51ம் வருஷத்தில், தமிழ் நாடு முழுதும் டப்பா மெட்டுப் பாட்டுக்களைத் தவிர, வேறு எதுவும் கேட்க முடிவதில்லை.

நாலு வருஷத்துக்கு முன்னால், ''ரத்தன்'' என்னும் மட்டரகமான ஹிந்தி சினிமா ஆரம்பித்த கைங்கரியம் இந்த வருஷத்தில் பூர்த்தியாகிவிட்டது. நாடெங்கும் சங்கீத ரசிகத் தன்மை அதலபாதாளத்தில் விழுந்து, இதைக் காட்டிலும் தாழ்ந்து கேடாக முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

சில வருஷங்களுக்கு முன்புகூட சாந்தா ஆப்தே, ஸைகல், பங்கஜ மல்லிக் முதலியவர்களின் ஹிந்தி மெட்டுக்கள் தமிழ்நாட்டில் பிரபலமானதுண்டு. அவற்றில் ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் சிறந்த அம்சங்கள் சில இருந்தன. இப்போது வருகிற ஹிந்தி சினிமா கீதங்களும், அவற்றைக் காப்பி அடித்து வெளி வரும் தமிழ் தெலுங்கு சினிமா கீதங்களும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தைச் சேர்ந்தவை அல்ல. ஸ்பானிஷ் சங்கீதம், மெக்ஸிகோ சங்கீதம், ஹவாய் சங்கீதம் முதலிய பல சங்கீதங்கள் கலந்த, பயங்கரமான, உருத் தெரியாத கபந்த பிண்டமாக விளங்குகின்றன.

சினிமா முதலாளிகள் இத்தகைய பயங்கர சங்கீதத்தைக் கையாளுவதில் வியப்பில்லை. அவர்களிடம் வேறு உயர்தரமான காரியம் எதையும் எதிர்பார்க்க முடியாது. ''பணமே தெய்வம்'' ''பாக்ஸ் ஆபீஸே கோயில்'' என்ற மனப்பான்மையுடன் அவர்கள் படம் எடுக்கிறார்கள். அந்த நோக்கத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். ஆனால் குடியரசு இந்திய சர்க்கார் நடத்தும் வானொலி நிலையங்களில், ரஸிக சிகாமணியான திவாகரின் நிர்வாகத்தில், இந்த அபஸ்மார பயங்கர ராட்சத டப்பா சங்கீதம், எதற்காக இவ்வளவு சிரத்தையுடன் ஒலிபரப்பப்படுகிறது என்பதுதான் தெரியவில்லை. கனம் திவாகர் என்றாவது ஒரு நாள் வானொலிப் பெட்டியடியில் உட்கார்ந்து, ''திரை கானம்'' என்றும், ''சித்திர சங்கீதம்'' என்றும், விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சலம் கட்டி விளம்பரப்படுத்தி ஒலிபரப்பும் பாடல்களைக் கேட்டதுண்டா என்று ஆச்சரியமாய் இருக்கிறது. அப்படிக் கேட்டவராய் இருந்தால் அவருடைய காது செவிட்டுக்காதாகவோ அல்லது பாரதியார் கூறிய இரும்புக் காதாகவோ இருக்க வேண்டும். (கல்கி இதழ் 22-7-51)

முதல் தாக்குதலே இது. அதற்கு மேல் அடியாகத் தொடர்ந்து தாக்கினார் கல்கி. திவாகர் ஒலிபரப்பு மந்திரியாய் இருந்தவரை நிலைமை திருந்தவில்லை. 1953 தொடக்கத்தில் அவருடைய பதவியில் அமர்ந்த கேஸ்கர், ஒலிபரப்புக்களில் சினிமா இசையைக் குறைத்து சாஸ்திரீய சங்கீதத்தைக் கூட்டினார். ஆனால் அவருடைய தூய சங்கீதக் கொள்கை நீடிக்கவில்லை. முதலில் ''நேயர்'' விருப்பத்துக்கும் பின்னர் வர்த்தக நிர்ப்பந்தத்துக்கும் பணிந்து அதைக் கைவிட வேண்டியதாயிற்று.

சினிமாப் பாட்டுக்களோ மேலும் மேலும் மோசமாயின. மட்டமான மெட்டுக்களுடன் அவற்றில் இட்டுக் கட்டிய சொற்களும் மட்டமாயின. இடக்கரும் இரு பொருள் ஆபாசக் கூற்றுக்களும் மலிந்தன.

ஒரு கட்டத்தில் திரைப் பாடல்களும் அவற்றின் வானொலி ஏற்றமும் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று விரக்தியுடன் கல்கி விட்டு விட்டார். தம்மைப் பொறுத்த வரை தமது செவிச் செல்வமும் அகச் செம்மையும் கெடாதபடி பாதுகாத்துக் கொண்டார்; நல்லிசை விருந்துகளை முன்னிலும் அதிகமாய் அனுபவித்தார்.

சங்கீதக் ''கலா ரசிக சிகாமணி'' விருதை ஏற்ற அதே மாதத்தின் இறுதியில், ''இசைத் திருமணம்'' ஒன்றுக்குக் கல்கி சென்றிருந்தார். புகழ் மிக்க வயலின் வித்துவான் ராஜமாணிக்கம் பிள்ளையின் மகளுக்கு நடந்த கல்யாணம் அது. அச்சமயம் எடுத்த படம் 31–1–54 கல்கி இதழில் பிரசுரமாயிற்று. இதில் கல்கி இசைக் கலைஞர்களும் ரசிகர்களும் சூழ அமர்ந்து, அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் கச்சேரியைக்கேட்டுக்கொண்டிருக்கிறார். சுகாசனத்தில் பரவச நிலை; ஆனந்த சங்கீத யோகம். (தொடரும்)

**தீர்க்கமில்லாதரிசி !**

'நாளை, மறுநாள், அடுத்த மாதம், அடுத்த வருடம் என்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே சொல்லக்கூடிய திறமையும், தான் சொன்னது நடக்காமல் போகும் போது ஏன் அவ்வாறு நடக்கவில்லை என்று விளக்கக்கூடிய சாமர்த்தியமும் உள்ளவன்தான் - அரசியல்வாதி!

—சர்ச்சில் - ஆர். எம்.





**வெள்ளம், வறட்சி** -பி. ஜி. விசுவநாதன்.




Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.


பெரும்பாலான குழந்தைகள்
எதையும் செய்யும்
ரெக்ஸ் ஜெல்லி தந்தால்!
தங்கையின் பின்னலைப் பிடித்து இழுக்க மாட்டேன், நீங்கள் எனக்கு ராஸ்பெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
என் பொம்மையை உமாவுக்கு விளையாடத் தருவேன், அவள் எனக்கு ஸ்ட்ராபெர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
நான் வீட்டுக் கணக்குகூடப் போடுவேன், செர்ரி ரெக்ஸ் ஜெல்லி தந்தால்
OBM-5474 TM
REX
JELLY CRYSTALS
RASPBERRY
ரெக்ஸ்
ஜெல்லி படிகங்கள்
தயாரிப்பது எளிது. தேவையில்லை பாலும் சர்க்கரையும்.
500 மி.லி. (½ லிட்டர்) நீரைக் கொதிக்க விடுங்கள். அதில் ஒரு பேக்கெட் ரெக்ஸ் ஜெல்லி படிகங்களைப் போட்டுக் கிளறுங்கள். பாலும் சர்க்கரையும் தேவையில்லை. ஆற விடுங்கள். பின்னர் அதை ரெஃப்ரிஜிரேட்டரிலோ அல்லது பனிக்கட்டிமீதோ வைத்துப் படிய விடுங்கள். நன்றாகப் படிந்ததும், எடுத்துப் பரிமாறுங்கள். அப்படியே அல்லது பழம், கஸ்டர்டு, கேக், ...உடன்.
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால், ஜெல்லி படிகங்களிலேயே மிகச் சிறந்தவை ரெக்ஸ் ஜெல்லி படிகங்கள். ஒரு பேக்கெட் வீட்டில் இருக்கட்டும்... எப்போதுமே!
கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க், பம்பாய் 400 001.


இதம் கனிந்த கோலா வாசமாம்;
இந்தியப் பெருமை பேசுமாம்;
தங்கத்தில் தகதக ஒளிவீசுமாம்;
குங்குமம் பூசுமாம் சிவந்த ரோஜா;
சிங்காரச் சேலையாம் டெரிகோலா
கட்டாவ்
டெரிகோலா சேலைகள்
'டெரீன்'